
Not for sale

மே - ஜுன் 2011

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom




# முரண்பாடான போதனைகள்

திரித்துவம் • அழிவில்லா ஆத்துமா • நித்திய ஆக்கினை

ஞானஸ்நானம் • நாம் குறைவுபடவேண்டாம்

வெற்றி பெறும் ஆன்மீகம் • கண்கள் யாவும் அவரை காணும்

பாரம்பரியமாக நாம் பெற்றுள்ள அறிவு

முரண்பாடான போதனைகள்

# ஆதியிலே



இயேசு கடவுள் அல்ல, அவர் கடவுளின் குமாரன் என்று நான்காம் நூற்றாண்டில், அலெக்சான்டிரியாவை சேர்ந்த, கிறிஸ்தவ மத போதகர் ஏரியஸ் கற்பித்தார். ஆனால், அக்காலத்தில் அரசியலோடு தொடர்பு கொண்டிருந்த கிறிஸ்தவர்கள், அத்தேநேசியஸ் முன் வைத்த திரித்துவ கொள்கையை ஆதரித்து, ஏரியஸை மதத்திலிருந்து நீக்கிவிட்டனர். உண்மையும் சத்தியமும், வரலாற்றில் எப்போதும் பிரபலமாக இராததுபோல, இந்நாளிலும் பிரபலமாக இல்லை. தேவனுடைய சுபாவத்தை பற்றியும், மனுக்குலத்திற்காக அவருடைய திட்டங்களைப் பற்றியும் சரியாக புரிந்துகொண்ட ஒரு கிறிஸ்தவர், கிறிஸ்துவ மத சாஸ்திரத்திற்கு புறம்பாக நிற்பார்.

ஏரியஸ்க்கு நேரடியாக சம்பந்தப்பட்டதும், அவரை மிகுந்த உபத்திரவத்திற்குள்ளாக்கியதுமான ***திரித்துவம்*** என்ற தலைப்பு இங்கு ஆராயப்படுகிறது. இயேசு உண்மையில் கடவுளின் குமாரன் என்றும், அவர் திரித்துவ கடவுளின், மூன்றில் ஒரு பகுதி அல்லவென்பதற்கும், இசைவான வசன ஆதாரங்கள் காட்டப்படுகிறது.

ஆத்துமா அழியாது என்ற போதனை, அநேக தவறுகளுக்கு வழி வகுக்கும் என்று ***அழிவில்லா ஆத்துமா*** என்ற இந்த கட்டுரை விவாதித்து, மேற்சொல்லப்பட்ட போதனை தவறு என்று நிரூபிக்கிறது. இந்த போதனை ஏதேன் தோட்டத்தில் துவங்கியது. ஆத்துமா அழியும் என்றும், தேவன் காலப்போக்கில், அவர்களை உயிர்ப்பிப்பார் என்றும் வேதம் தெளிவாக கற்பிக்கிறது.

இயேசுவை ஏற்றுகொள்ளாத, மரித்தவரின் நிலையை ***நித்திய ஆக்கினை*** என்ற தலைப்பு விவரிக்கிறது. வருங்காலத்தில் இரட்சிக்கப்படுவதற்கான ஒரு வாய்ப்புண்டென்றும், ஒருவரையும், தேவன் நித்தியமான ஆக்கினைக்குள்ளாக்குவதற்கு எரி நரகத்தை உருவாக்கவில்லை என்றும் நமக்கு உறுதியளிக்கிறது.

ஞானஸ்நானத்தைப் பற்றி அநேக கருத்துக்கள் காணப்பட்டாலும், முரண்பாடற்ற ஒரு கிறிஸ்தவ போதனையை "ஞானஸ்நானம்" என்ற தலைப்பு கண்ணோக்குகிறது. வெகு சில வேத வசனங்களினால், வெவ்வெறு விளக்கங்களும், பாரம்பரியமும் எவ்வாறாக வளர்ச்சி அடைகிறது, என்பதை நாம் கற்றுகொள்கிறோம்.

(1) விசுவாசமுள்ள யூதர்கள் கடைப்பிடித்தது போல கிறிஸ்தவர்களும் சொல்லர்த்தமான ஓய்வு நாளை அனுசரிக்க வேண்டும். (2) மோசேயின் நியாயப் பிரமாணத்திற்கு கிறிஸ்தவர்கள் உட்பட்டவர்கள் அல்ல. மேலும், நம்முடைய கிரியைகளை கிறிஸ்துவுக்குள் நிறைவேற்றி, இளைபாறுவதையே ஓய்வு அடையாளப் படுத்துகிறது, என்று பொதுவாக இரண்டு பார்வையில் காணப்படும் உபதேசத்தின் விளக்கத்தை ***நாம் குறைவுப்பட வேண்டாம்*** என்ற கட்டுரை விவரிக்கிறது.

புதிதான முரண்பாடான போதனைகள் எப்போதும் எழும்புகிறது என்ற கருத்தை ***செல்வச் செழிப்புள்ள மத சாஸ்திரம்*** என்ற தலைப்பு செயல் முறையில் காட்டுகிறது. உண்மையில், கிறிஸ்தவர்கள் தேவனால் பாராட்டப்பட்டு, பரிசளிக்கப்படுகிறார்கள். ஆனால் இது எப்போது சம்பவிக்கும் ? எப்படியாக சம்பவிக்கும் ? பிரபலமான அநேக சுவிசேஷகர்கள் பிரசங்கிப்பதை போல, தற்காலிகமான ஆசீர்வாதங்களை நாம் எதிர்நோக்கலாமா ? அல்லது இனி வரக்கூடிய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை எதிர் நோக்கிக்கொண்டு, இன்று நம்முடைய ஆவியின் கனிகளை வளர்க்கவேண்டுமா ?

***கண்கள் யாவும் அவரை காணும்*** என்ற தலைப்பு இயேசுவின் இரண்டாம் வருகையின் விதத்தை விவரிக்கிறது. இறுதியாக நாம் மிக நெருக்கமாக பற்றியிருக்கக்கூடிய அநேக சத்தியங்களை ***நாம் பெற்றுள்ள பாரம்பரிய அறிவு*** என்ற தலைப்பு மேலோட்டமாக கண்ணோக்குகிறது. 1947ம் வருடம் முதலில் பிரசுரிக்கப்பட்ட இந்த கட்டுரை, நம்முடைய விசுவாசத்தின் அஸ்திபாரம் நியாயமானது என்றும் தேவனுடைய தெய்வீக திட்டத்தின் மேன்மையில் நாம் களிகூறுவதற்கும் ஒரு காரணமாகவும் அமைகிறது.

**மே-ஜுன் 2011**


**ஆதியிலே (முரண்பாடான போதனைகள்) . . . . . .** 1

**திரித்துவம் . . . . .** 2
அநேகர் நம்பினாலும், இந்த போதனைக்கு வேதாகமத்தில் எந்தவிதமான ஆதாரமும் இல்லை.

**அழிவில்லா ஆத்துமா . . . . . . .** 6
ஆத்துமாக்கள் (மனிதர்கள்) மரிக்கக்கூடியவைகள். அழியாமை ஒரு பரிசு.

**நித்திய ஆக்கினை? . . . . . . . . .** 10
நித்திய மரணம் பாவத்திற்கு தண்டனை, நித்திய ஜீவன் நீதியின் பலன்.


**ஞானஸ்நானம்** 14
ஞானஸ்நானம் வாழ்நாள் முழுவதும் செயல் முறைப்படுத்தக்கூடிய காரியம் என்று வேதம் கூறுகிறது.

**நாம் குறைவுபடவேண்டாம். . . . .** 18
நம்மை கட்டுப்படுத்தி, மற்றவர்களுக்கு சுயாதீனத்தை கொடுத்தால், நாம் தேவனுடைய சாயலைப் பெற்று அவருடைய இளைபாறுதலில் பிரவேசிப்போம்.

**வெற்றி பெறும் ஆன்மீகம் . . . .** 22
இன்று உண்மை கிறிஸ்தவர்கள் வெற்றிகரமாக "சிலுவை" சுமந்தால், வருங்காலத்தில் அவர்களுக்கு பரிசளிக்கப்படும்.

**கண்கள் யாவும் அவரைக் காணும் . . . .** 25
காணும் என்ற சொல் நேரடியான அர்த்தம் கொண்டதா அல்லது மன கண்களினால் காண்பதா என்ற காரியத்தை வசனங்களின் ஆதாரத்தைக் கொண்டு நமக்கு காட்டப்படுகிறது.

**பாரம்பரியமாக நாம் பெற்றுள்ள அறிவு . . . .** 27
இக்கால சத்தியம்" என்று நாம் அழைக்கும் போதனையின் ஒரு சுருக்கம்.



பிதாவும் குமாரனும்,

# திரித்துவம்

*என் பிதா என்னிலும் பெரியவராக இருக்கிறார். - யோவான் 14:28*

**David Stein**

கிறிஸ்துவ அமைப்பில் உள்ளவர்கள் திரித்துவம் உண்டென்பதை ஆர்வத்தோடு அறிக்கையிடும் அளவுக்கு சில மாறுப்பட்ட போதனைகள் உள்ளது. இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தை குறைவாக மதிப்பிடுவதாக எண்ணி, அநேகர் திரித்துவத்தை ஏற்றுகொள்கிறார்கள். திரித்துவம் உண்டென்று நம்புவதற்கு பல காரணங்களில் இதுவும் ஒன்று. இந்த பாடத்தைக் குறித்த கலந்துரையாடல்களை நடத்துவது மிகவும் கடினம்.

முதலில் வார்த்தைகளின் பொருளை ஆராய்வது, ஒரு நல்ல துவக்கமாக இருக்கும். "திரித்துவம்" என்பதன் பொருள் என்ன ? இங்கு இரண்டு விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

"மூன்று நபர்கள் ஒரே கடவுளாக ஏற்றுகொள்ளப்படுகிறார்கள்.... இந்த கடவுள் பிதாவாகவும், குமாரனாகவும், பரிசுத்த ஆவியாகவும், இருக்கிறார் என்று தன்னையே வசனங்களின் மூலம் வெளிப்படுத்துகிறார். அதாவது கடவுள் என்ற ஒரே தலைவருக்குள் நாம் மூவரையும் அடையாளம் கண்டுபிடிக்கவேண்டும். இவர்கள் மூவரும் தனிதனி தெய்வங்களும் அல்ல, கடவுளின் மூன்று பகுதிகளும் அல்ல மாறாக, இவர்கள் சம நிலைக் கொண்ட சம நித்திய ஒரே கடவுள்." - *Evangelical Dictionary of Theology,* Walter Elwell, ed., p. 1112

" பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற மூன்று நபர்களாக கடவுள் வெளிப்படுகிறார். ஒவ்வொரு நபரும் முழுமையான கடவுள். எல்லாம் ஒரே கடவுளாக இருக்கிறார்கள். " - *Systamatic Theology,* Wayne Grudem, p. 226

மேற்கூறப்பட்டவைகளும், மற்ற போதனைகளின் விளக்கங்களும், புதிய விவாதங்களுக்கு ஏற்ற விதமாக மாற்றப்படுகிறது என்று நாம் நிச்சயிக்கிறோம். ஆயினும், இங்கிருந்து துவங்குவதே நலமாயிருக்கும்.

இயேசுவும், பிதாவும் சரிசமமான நிலையில் இருப்பதே திரித்துவத்தின் அடிப்படை போதனை. இருவரும் ஒரே கடவுளின் வெளிப்பாடாக இருக்கிறார்கள் என்றும் இவர்கள் சமவல்லமை கொண்டவர்கள் என்றும் சம நித்தியமுள்ளவர்கள் என்றும் நம்பப்படுகிறது. இப்படிப்பட்ட கருத்துக்கள், இயேசுவின் சில வாக்கியங்களுக்கு முரண்பாடாக இருப்பதினால் அநேக பிரச்சனைகளை உருவாக்குகிறது.

" பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக் கொடுத்திருக்கிறார்." (யோவ 3:35) ஒரு காலத்தில் குமாரன் சகலத்தையும், தன் கையில் கொண்டிருக்க வில்லை என்பதை இந்த வசனம் காட்டுகிறது. (மாற் 13:32ம் வசனத்தையும் பார்க்கவும்)

"அவர் ஓய்வு நாள் கட்டளையை மீறினது மல்லாமல், தேவனைத் தம்முடைய சொந்தப் பிதா என்றுசொல்லித் தம்மைத் தேவனுக்குச் சமமாக்கினபடியினாலே, யூதர்கள் அவரைக் கொலைசெய்யும்படி அதிகமாய் வகைதேடினார்கள். அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்." (யோவான் 5:18,19) இயேசுவின் வார்த்தைகளை தவறான அர்த்தம்கொண்டு, அவர் தன்னை கடவுளுக்கு சமமாக்கினார் என்று யூதர்கள் புரிந்துகொண்டார்கள். இதை அறிந்த இயேசு தனித்து தன்னால் எதுவும் செய்ய முடியாது என்ற தெளிவான விளக்கத்தை கூறி அவர்கள் தவறை திருத்தினார்.

"பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்." (யோவான் 5:22) பிதாவாகிய தேவன் நியாயந்தீர்க்கும் அதிகாரத்தை முழுவதும் குமாரனுக்கு கொடுத்தார் என்பதை இந்த வசனம் தெளிவாக காட்டுகிறது. (யோவ 5:26,27 ம் வசனங்களை காணவும்)

"ஆதலால் இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு, நானே அவரென்றும், நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள். " (யோவா 8:28) இயேசு பிதாவினால் கற்பிக்கப்படவேண்டியதாக இருந்தது. (எபி 5:7-9)

"ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில்

பெற்றுக்கொண்டேன் என்றார்." (யோவ 10:18) பிதா தன்னுடைய குமாரனுக்கு கற்பனைகளைக் கொடுத்து, அவர் வழியாக குறிப்பிட்ட தரத்தை நடைமுறைப்படுத்திக் காட்ட விரும்பினார்.

"இயேசு அவர்களை நோக்கி: தேவன் உங்கள் பிதாவாயிருந்தால் என்னிடத்தில் அன்பாயிருப்பீர்கள். ஏனெனில் நான் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறேன்; நான் சுயமாய் வரவில்லை, அவரே என்னை அனுப்பினார்." (யோவ 8:42) இயேசு தேவனால் அனுப்பப்பட்டார், அதேநேரத்தில் இயேசு தேவனாக இருந்திருந்தால் இது சாத்தியப்படாதே.

இயேசு தன்னுடைய பரலோக பிதாவைக் குறித்து விவரிக்கும் காரியமானது, திரித்துவத்தை நம்புவோருக்கு மிக கடினமாக இருக்கிறது. "இயேசு அவளை நோக்கி: என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை; நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு என்றார்." (யோவா 20 :17) பரலோக பிதாவாகிய தேவனே இயேசுவின் சொந்த பிதா. தம்முடைய உயிர்த்தெழுதலுக்கு பின் இயேசு இந்த வார்த்தைகளை பேசினார்.

"ஒன்பதாம்மணி நேரத்திலே, இயேசு: எலோயீ! எலோயீ! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு: என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்." (மாற் 15:34) சிலுவையில் தொங்கிய போதும், இயேசு தம்முடைய பிதாவை நோக்கி கதறினார்.

தனக்கும், பிதாவுக்கும் உள்ள வித்தியாசத்தை இயேசு மிக துல்லியமாக காட்டுகிறார். "தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக் கொடுத்தா ரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து;" (யோவ 13:3) இயேசு பிதாவினிடமிருந்து வந்து, அவரிடம் திரும்பவும் சென்றுவிட்டார். ஆகவே இயேசு பிதாவாக இருக்க வாய்ப்பில்லை என்பது தெளிவாகிறது.

"தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்." (யோவ 1:18) ஆனால் நாம் இயேசுவை கண்டிருக்கிறோம். ஆகவே பிதாவாகிய தேவன் இயேசுவாகவும் இருக்கமுடியாது, இயேசு பிதாவாகவும் இருக்க முடியாது.

பிதாவாகிய தேவனுக்கும் இயேசுவுக்கும் உள்ள வித்தியாசத்தை மிக தெளிவாக அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார் - "பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசுகிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர்மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்." (1கொரி 8:6) "நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. "(1கொரி 1:3) "என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவுமானவர் நான் பொய் சொல்லுகிற தில்லையென்று அறிவார். "(11கொரி 11:31)

மேல் கூறப்பட்ட மூன்று எடுத்துக்காட்டுகளிலும், பவுலின் கடிதங்களிலும், பிதாவாகிய தேவன் நம்முடைய தேவன் என்றும் ஆண்டவராம் இயேசு அவரால் அனுப்பப்பட்ட அவருடைய குமாரன் என்றும் தெளிவாக குறிப்பிடுகிறார்.

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருள வேண்டுமென்றும் " (எபே 1:17)இயேசு கிறிஸ்துவுக்கு சொந்த பிதாவாகிய தேவன் இருக்கிறார் என்பதை பவுல் கூறுகிறார்.

பிதாவாகிய தேவனுக்கும் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்கும் உள்ள வித்தியாசங்களை சுட்டிக்காட்டும் வசனங்களின் எண்ணிக்கையை நாம் பார்க்கும்போது, திரித்துவ கொள்கை இவ்வளவு காலம் ஸ்திரமாக இருப்பதை குறித்து நாம் ஆச்சரியப்படக்கூடியவர்களாக இருக்கிறோம். ஆயினும், கிறிஸ்துவ மண்டலத்தில் இருக்கும் நம்முடைய நண்பர்கள், தங்களுடைய விசுவாசத்திற்கு ஏற்ற சில வசனங்களை ஆதாரமாக நம்புகிறார்கள். அவைகளில் ஐந்து வசனங்களை இப்போது காணலாம் -

1."நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார். " (யோவ 10:30)

இந்த வசனம், திரித்துவ கொள்கையை ஆதரிப்பது போல தோன்றலாம். ஆயினும், "ஒன்றாயிருக்கிறோம்" என்ற வார்த்தை பெரும்பாலான இடங்களில் உருவகமாக பேசப்பட்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக, புருஷனும், மனைவியும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் (மத் 19:5,6) என்று வாசிக்கிறோம். விசுவாசிகள் ஒரே அப்பமாகவும், ஒரே சரீரமாகவும் அடையாளப்படுத்தப்படுகிறார்கள். (1கொரி 10:17, ரோம 12 :4,5)

இயேசு, பிதாவோடு கொண்டிருக்கும் நெருக்கத்தையும், ஐக்கியத்தையும் சீஷர்களுக்கு புரியவைப்பதற்கு இந்த வார்த்தையை பயன்படுத்தினார். ஆகவே திரித்துவ கொள்கைக்கு இந்த வசனம் ஒருபோதும் இசைவானதல்ல. மாறாக, இருதயத்தின் நினைவுகளிலும், சிந்தையிலும், நோக்கத்திலும் ஒருமனப்பாட்டை இது காட்டுகிறது.

இதன் அர்த்தத்தை இயேசு மேலும் விவரித்தார் - "நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர்

என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன் **நாம் ஒன்றாயிருக் கிறதுபோலஅவர்களும் ஒன்றா யிருக்கும்படி,** நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். " (யோவா 17:11,21,22) இயேசு பிதாவோடு ஒன்றாக இருக்கிறார் (யோவ10-30) என்ற வசனத்தை விளக்க மேல் கூறப்பட்ட வசனம் உதவுகிறது.

2." ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. "(யோவ 1:1)

"அந்த வார்த்தை தேவனாயிருந்தார்" என்ற சொற்றொடர் இயேசுவை தேவனாக காண்பிக்க பயன்படுத்தப்படுகிறது. ஆயினும், இதன் கிரேக்க சொற்களின் மொழிபெயர்ப்பைப் பற்றி நியாயமான ஒரு கேள்வி எழும்புகிறது. வில்லியம் பார்க்லே என்ற ஒரு திரித்துவ எழுத்தாளர் இந்த வேத பகுதிக்கு இன்னும் சில தெளிவான விளக்கத்தை கொடுத்துள்ளார். அவர் திரித்துவத்தை நம்புவதால், உண்மையை மறைத்து, ஒரு சார்பான விளக்கத்தை எழுதியுள்ளார் - "இறுதியாக, அந்த வார்த்தை தேவனாக இருந்தார் என்று யோவான் கூறுகிறார். இந்த வார்த்தைகளை யோவான் கிரேக்கில் எழுதினதற்கும், நாம் ஆங்கிலத்தில் வாசிப்பதற்கும் வித்தியாசம் இருப்பதினால் நாம் இதை புரிந்துகொள்ள சற்று கடினமாக இருக்கிறது. கிரேக்க மொழி ஒரு பெயர் சொல்லை பயன்படுத்தும் போது, ஒரு திடமான பொருளை (definite article)எப்போதும் தன்னோடு பயன்படுத்திகொள்ளும். கிரேக்கில் தேவன் என்ற வார்த்தைக்கு "தியோஸ்" மற்றும் அதனோடு பயன்படுத்தப்படும் திட பொருள் (definite article)"ஹோ". ஆகவே கிரேக்கில் தேவனை பற்றி கூறும்போது "தியோஸ்" என்று தனியாக குறிப்பிடாமல், "ஹோ தியோஸ்" என்று குறிப்பிடப்படுகிறது. இப்படியாக அதை பயன்படுத்தாத பட்சத்தில், அந்த பெயர்ச் சொல்லை தழுவி நிற்கும் சொல்லாக (adjective) அது பாவிக்கப்படும். யோவான் இங்கு "ஹோ தியோஸ்" என்று கூறவில்லை, இப்படி சொல்லியிருந்தால் நிச்சயமாக இது பிதாவாகிய தேவனை குறிப்பிட்டிருக்கும். அவர் "தியோஸ்" என்று தனியாக எழுதியுள்ளார். இதற்கு தேவனுடைய குணங்களுக்கு ஒப்பாக, அல்லது அவரை போல என்று பொருள்படும். அதாவது இயேசு தேவனைப் போலவே இருந்தார் என்று அவர் சொல்லாமல், நாம் தேவனை அறிந்தபடி, சிந்தையிலும், இருதயத்திலும், அவரைபோல் இயேசு இருந்தார் என்பதை கூறுகிறார்."

இந்த பகுதிக்கு இன்னும் அதிகமான விளக்கங்கள் தேவைப்படும். ஏனெனில், இந்த நியாயமான முடிவுரை திரித்துவத்தை போதிப்பதில்லை. இதுபோல் இன்னும் சில மொழிப்பெயர்ப்புகள் இந்த கிரேக்க பதிவுகளை பற்றி இன்னும் அதிகமான விளக்கங்களை விவரிக்கிறது.

3."அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்,.." (பிலி 2:6)

கிரேக்க பதிவுகளுக்கு முற்றிலும் முரண்பாடாக (KJV) மொழிபெயர்ப்பு கூறுகிறது. இயேசு தேவனுக்கு சமமாக இருக்கவும் இல்லை, அப்படி சமமாக இருக்க அவர் விரும்பவும் இல்லை என்று பவுல் தெளிவாக கூறுகிறார்.

தேவனுக்கு சமமாக இருப்பதற்கு இயேசு ஒருபோதும் சிந்தித்ததும் இல்லை அதைப் பற்றி அவர் யோசித்ததும் இல்லை என்று கிரேக்க மூல பதிவுகள் மிக தெளிவாக குறிப்பிடுகிறது. இந்த ஒரு குணம் லூசிபேருக்கு எதிரிடையானதாக குறிப்பிடப்படுகிறது. (ஏசா 14:12-14)

4." குமாரனை நோக்கி: தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது." (எபி 1:8)

சங்கீதம் 45:6 ம் வசனத்தை அப்போஸ்தலர் குறிப்பிட்டு, அதை இயேசுவுக்கு பொருத்துகிறார். இயேசு தேவனாக இருக்கிறார் என்பதற்கு இது தக்க ஆதாரம் போல் தோன்றினாலும், "தேவன்" என்ற வார்த்தை சர்வவல்லமையுள்ள தேவனுக்கு மட்டும் அல்ல, மாறாக புதிய ஏற்பாட்டில் மற்றும் பழைய ஏற்பாட்டிலும் வல்லமையுள்ள மற்றவர்களுக்கும் அந்த வார்த்தை (தேவன்) பயன்படுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக ஒரு சூழ்நிலையில் மோசே "தேவன்" என்று அழைக்கப்படுகிறார். "அவன் உனக்குப் பதிலாக ஜனங்களோடே பேசுவான்; இவ்விதமாய் அவன் உனக்கு வாயாக இருப்பான்; நீ அவனுக்குத் தேவனாக இருப்பாய்."(யாத் 4 :16) " கர்த்தர் மோசேயை நோக்கி: பார், உன்னை நான் பார்வோனுக்கு தேவனாக்கினேன்; உன் சகோதரனாகிய ஆரோன் உன் தீர்க்க தரிசியாயிருப்பான்."(யாத் 7:1)

"எல்லோஹீம்" என்ற எபிரேய வார்த்தையிலிருந்து தேவன் என்ற வார்த்தை மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அதற்கு "வல்லமையுள்ள" என்று பொருள். இந்த வார்த்தை பெரும்பாலும் சர்வவல்லமையுள்ள தேவனுக்கு பயன்படுத்தப்படுகிறது. ஆனால் அந்த வார்த்தைக்குள்ள அர்த்தம் தூதர்களுக்கும், ஆட்சியாளர்களுக்கும், நியாயாதிபதிகளுக்கும் பொருந்தக்கூடியதாக இருப்பதினால், இவர்களுக்கும் இந்த வார்தை பயன்படுத்தப்படுகிறது.

இயேசு வல்லமை உள்ளவராய் இருந்ததினால் தேவன் என்றழைக்கப்பட்டார். மேலும், அவர் தேவனுடைய குமாரன் என்று சங்கீதம் போதிக்கிறது. இதற்கு தொடர்பாக நாம் மீண்டும் யோவான் 10ம் அதிகாரத்தை புரட்டிப் பார்ப்போம்.

இங்கு நானும், பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்ற இயேசு சொன்னபோது, யூதர்கள் அவர் மேல் கல்லெறிந்தார்கள்." யூதர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: நற்கிரியையினிமித்தம் நாங்கள் உன்மேல் கல்லெறிகிறதில்லை; நீ மனுஷனா யிருக்க, உன்னைத் தேவன் என்று சொல்லி, இவ்விதமாகத் தேவதூஷணஞ் சொல்லுகிற படியினால் உன்மேல் கல்லெறிகிறோம் என்றார்கள்.இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: தேவர்களாயிருக்கிறீர்கள் என்று நான் சொன்னேன் என்பதாய் உங்கள் வேதத்தில் எழுதியிருக்க வில்லையா? தேவவசனத்தைப் பற்றுக் கொண்டவர்களைத் தேவர்கள் என்று அவர் சொல்லி இருக்க, வேத வாக்கியமும் தவறாததாயிருக்க..." யோவா 10:33-36

திரித்துவக் கடவுளின் ஒரு பகுதியாக தன்னை நிரூபிப்பதற்கு இந்த சூழ்நிலையில் ஒரு நல்ல வாய்ப்புக்கிடைத்தது. ஆனால், இயேசு சங் 82 :6ம் வசனத்தை பதிலளித்தார்.

இந்த குறிப்பை அப்போஸ்தலனாகிய பவுலின் எழுத்துக்களோடு இணைத்துப் பார்க்கலாம். "பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசுகிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர்மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம். "(1கொரி 8:5,6)

5. "(பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்தஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்; " (1யோவ 5:7)

இந்த வார்த்தைகள் திரித்துவத்தை ஆதரித்த போதிலும் பண்டைய கால கைப்பிரதிகளில் எதிலும் இந்த வசனம் காணப்படுவதில்லை. "பரலோகத்தில் சாட்சியிடக்கூடிய இந்தப் பகுதி கிரேக்க கைப்பிரதிகளில், பதினைந்து நூற்றாண்டுகளுக்கு முன் எதிலும் காணப்படவில்லை. இது சேர்க்கப்பட்ட வசனம் என்று அனைத்து எழுத்தாளர்களாலும் நிரூபிக்கப்பட்டது" என்று எம்பியாட்டிக் டைக்கிலாட்டு (Emphatic Diaglott ) குறிப்பிடுகிறது.

**முடிவுரை**


நம்முடைய ஆண்டவராம் இயேசு நம் அனைவருக்காகவும் பாடுபட்டு, "எல்லாரையும் மீட்கும் பொருளாக" (1தீமோ 2:6) தன்னையே ஒப்புக்கொடுத்தார் என்பதே வேத மாணவர் ஐக்கியத்தின் அஸ்திபார நம்பிக்கை. தேவனுடைய தெய்வீக திட்டத்தை புரிந்துக் கொள்வதற்கு இதுவே அடிப்படை விசுவாசமாய் இருக்கிறது. ஆயினும், எல்லாரையும் மீட்கும் பொருளாக" என்ற சத்தியத்திற்கு முற்றிலும் முரண்பாடான போதனையை திரித்துவம் போதிக்கிறது. இயேசு, தேவனாயிருந்தால் அவர் அழியாமையை பெற்றிருப்பாரே. அழியாமையை பெற்றவர் மரிக்கமுடியாதே. ஆயினும் இயேசு மரித்தார் என்று வேதாகமம் தெளிவாக அநேக இடங்களில் குறிப்பிடுகிறது. அழியாமையிலுள்ள கடவுள் மரிக்கமுடியுமா ?

முந்தின ஆதாமாகிய பரிபூரண மனுஷனுக்கு பதிலாக இயேசு கிறிஸ்து மனுஷ நிலையில் உண்மையான பாடுகள் பட்டு ஈடுபலி செலுத்தினார் என்று வேதாகமம் தெளிவாக சித்தரிக்கிறது. ஆகவே, ஆதாமின் பாவத்திற்காக சரிநிகர் சமமான விலைக்கிரயத்தைக் கொடுப்பதற்கு இயேசு பரிப்பூரண மனுஷனாக இருக்க வேண்டும். மரண பரியந்தம் அவர் விசுவாசத்தை காத்துக் கொண்டதினால் தேவன் அழியாமையை அவருக்கு பரிசாக கொடுத்தார். (யோவா 5:26)

"எல்லாரையும் மீட்கும் பொருளாக" என்ற காரியம் அநேக, தவறுகளை வெளிப்படுத்தி, வேதாகமத்தில் சொல்லப்பட்ட அநேக சத்தியமான உபதேசங்களை தெளிவுப்படுத்துகிறது. மேலும், திரித்துவத்தின் தவறையும் அது விளக்குகிறது. பரலோக பிதாவுக்கும், அவருடைய குமாரனாகிய நம்முடைய ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவுக்கும் உள்ள ஐக்கியத்தை தெளிவாக புரிந்துக் கொள்ளும் அறிவில் நாம் மகிழ்ச்சியடைவோம்.

# அழியா ஆத்துமா

*"பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்." - எசேக்கியேல் 18 :4*



- Peter Karavas

"பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்." - எசேக் 18 :4 அழிவில்லாத ஆத்துமா அல்லது மரிக்காத ஆத்துமா என்றால் என்ன? ஒரு மனுஷன் ஆத்துமாவாகவும், சரீரமாகவும் இருக்கிறான் என்று கிறிஸ்தவர்கள் கூறலாம். மாம்சமான சரீரத்தில் ஆத்துமா தற்காலிகமாக குடியிருக்கும் என்று பொதுவாக நம்பப்படுகிறது. ஆத்துமாவுக்கு சரீரம் இல்லாமல் ஆவியாய் இருப்பதினால் சரீரம் மரித்தப்பின், அந்த ஆத்துமா சரீரத்தை விட்டு வெளியேறி, நரகத்திலாவது, பரலோகத்திலாவது நித்தியமாக வாசம் செய்யும் என்று நம்பப்படுகிறது. ஆகையால், சிலரின் இறுதி சடங்குகளின் போது, மரித்த ஆத்துமாக்கள் மோட்சத்திலிருந்து தாங்களை கவனித்து கொண்டிருக்கிறார்கள் என்ற நம்பிக்கையை இந்த போதனையை அடிப்படையாகக் கொண்டு அநேக உணர்ச்சிகரமான காரியங்கள் நடைபெறுகிறது.

இன்றைய பெரும்பாலான மதங்கள் **அழிவில்லா ஆத்துமா** என்ற அடிப்படையான போதனையைக் கொண்டிருக்கிறது. மனித ஆத்துமா சரீரத்தை விட்டுப்பிரிந்து நித்தியமாக ஜீவிக்கும் என்று பழங்காலத்து எகிப்தியர்கள் நம்புகிறார்கள். யூதமதம், புத்தமதம், கிறிஸ்துவம் மற்றும் இஸ்லாமிய மதங்கள் தோன்றுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே எகிப்தியரின் இந்த ஆலோசனை உறுதியாக ஸ்தாபிக்கப்பட்டது.

மத நம்பிக்கையற்ற கிரேக்கர்கள் எகிப்தியர்களிடமிருந்து இந்த போதனையை ஏற்றுகொண்டு, அத்தேனேவை சேர்ந்தவரும், சாக்ரட்டீஸின் சீஷனாகிய பிலாட்டோ என்ற மேதை (கி. மு 428-348) **அழிவில்லா ஆத்துமா** என்ற புதிய கருத்தை, கிரேக்க பாரம்பரியத்தின் மூலமாக பிரபலப்படுத்தினார்.

தத்துவ ஞானத்திற்குரிய கிரேக்க கருத்துகளால் பழங்கால யூதர்கள் ஆழமாக பாதிக்கப்பட்டிருந்தார்கள். Jewish Encyclopedia என்ற புத்தகத்தில் **அழிவில்லா ஆத்துமா** என்ற தலைப்பில் உள்ள கட்டுரையில் -

"சரீரம் முழுமையாக அழிந்து போனாலும் ஆத்துமா தொடர்ந்து ஜீவிக்கும் என்ற நம்பிக்கை, பரிசுத்தவேதாகமத்தில் எங்கும் காணப்படாமல் இருந்தாலும், யூதர்கள் கிரேக்கர்களோடு தொடர்பு கொண்டிருந்ததினால் அழிவில்லா ஆத்துமாவை குறித்த நம்பிக்கை யூதர்களுக்குள் நுழைந்தது." என்று எழுதப்பட்டிருக்கிறது.

விசேஷமாக பிலாட்டோவின் தத்துவங்களை கொண்ட கோட்பாடுகள், இதற்கு வழிவகுத்தது. ஆதி கிறிஸ்தவ பிதாக்களாகிய ஜஸ்டீன் மார்ட்டியர், டாட்டாயின், அத்தினாகோராஸ், தியோபுலஸ், ஐரேநேயியஸ், மற்றும் பாலிகிரேட்டஸ் மரித்தவரின் உணர்வுள்ள நிலையையும், நித்திய ஆக்கினையின் கொடுமை களையும் மறுத்தார்கள். ஆயினும், ஆரிஜென், டொட்டுவியன் மற்றும் அகஸ்டீடைன் போன்ற ஆதிகால மத சாஸ்திரிகள் பிலாட்டோவின் கோட்பாடுகளுடன் மிக நெருக்கமாக இருந்தார்கள். இதன் விளைவாக ஆரிஜன் மற்றும் ஆகஸ்டைன் மீது ஏற்பட்ட பாதிப்புகள் ஆழமானது.

ஒவ்வொரு ஆவிக்குரிய ஆத்துமாவும் தேவனால் உடனடியாக சிருஷ்டிக்கப்படுவதாக ரோமகத்தோலிக்க சபை போதிக்கிறது. இது பெற்றோர்களினால் ஈன்றெடுக்கபடுவதில்லை. இது அழிவதுமில்லை, சரீரம் மரித்தப்பின் அதை விட்டு பிரிந்து நித்தியமாக வாழும். மரிக்கும் போது ஒரு ஆத்துமா நரகத்திற்கோ, பரலோகத்திற்கோ, உத்திரிக்கும் ஸ்தலத்திற்கோ, சென்று இறுதி உயிர்த்தெழுதலின் போது அந்த சரீரத்தோடு இணைந்துவிடும் என்று அவர்களால் நம்பப்படுகிறது.

பழங்கால கிழக்கத்தியர்களும் ஒரேவிதமாக கண்ணோக்குகிறார்கள். மரணத்திற்குபின் அந்த ஆத்துமா தேவனால் நியாயந்தீர்க்கப்பட்டு ஆபிரகாமின் மடிக்கு (தற்காலிகமான மோட்சம்)அல்லது நரகத்திற்கு (தற்காலிகமான உபத்திரவம்) அனுப்பப்படுகிறது என்று நம்பப்படுகிறது. இங்கு **அக்கினி கடல்** நித்தியமான ஆக்கினையை அடையாளப்படுத்துகிறது. ஆதிகால ரோம கத்தோலிக்க சபைகள் உத்திரிக்கும் ஸ்தலத்தைப் பற்றி போதிக்கவில்லை. புரோட்டஸ்டன்ட் அமைப்புகளும் இப்படிப்பட்ட நம்பிக்கையை கொண்டிருக்கிறார்கள்.

மனுஷன் அழியா ஆத்துமா உடையவனாக இருக்கிறான் என்று வேதம் உண்மையில் போதிக்கிறதா? **அழிவில்லா ஆத்துமா** என்ற வார்த்தை வேதாகமத்தில் எங்கேயாவது காணப்படுகிறதா என்று ஆராய்ந்து பார்ப்பதே இந்த கேள்விக்கு நியாயமான பதிலாக இருக்கும். இப்படிப்பட்ட வார்த்தை வேதாகமத்தில் எங்கும் காணப்படுவதில்லை. ஆகவே, **அழிவில்லாத** அல்லது ஆத்துமா என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் வார்த்தைகளை ஆராய்ந்து பார்க்கலாம்.

## வேதாகமத்தில் ஆத்துமா என்ற வார்த்தையைக் குறித்து காணலாம்

" பின்பு தேவன்: நீந்தும் ஜீவஜந்துக்களையும், பூமியின்மேல் வானம் என்கிற ஆகாயவிரிவிலே பறக்கும் பறவைகளையும், ஜலமானது திரளாய் ஜநிப்பிக்கக்கடவது என்றார். " (ஆதி1:20) இந்த வசனத்தில் ஆத்துமா என்ற வார்த்தை முதலில் காணப்படுகிறது. ஜீவஜந்துக்கள் என்ற வார்த்தை நெப்பேஷ் என்ற எபிரேய வார்த்தையின் மொழிப்பெயர்ப்பு. இதுமட்டும் அல்ல பழைய ஏற்பாட்டில் எல்லா இடங்களிலும் இந்த நெப்பேஷ் என்ற எபிரேய வார்த்தை ஆத்துமா என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. மேல் கூறப்பட்ட வசனத்தில் நீரில் வாழும் ஜந்துக்களுக்கு சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், " தேவன் நோவாவையும், அவன் குமாரரையும் நோக்கி: நான் உங்களோடும், உங்களுக்குப் பின்வரும் சந்ததியோடும், உங்களோடே பேழையிலிருந்து புறப்பட்ட சகல ஜீவஜந்துக்கள்முதல் இனிப் பூமியில் உண்டாகப்போகிற சகல ஜீவஜந்துக்கள் பரியந்தம், பறவைகளோடும், நாட்டு மிருகங்களோடும், உங்களிடத்தில் இருக்கிற பூமியிலுள்ள சகல காட்டு மிருகங்களோடும் என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன். "(ஆதி 9:8-10) என்ற வசனங்களிலும் நெப்பேஷ் என்ற வார்த்தை மிருகங்களுக்கு சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, நெப்பேஷ் என்ற எபிரேய வார்த்தை ஆத்துமாவுக்கு மட்டும் அல்ல உயிருள்ள மிருக ஜீவன்களுக்கும் பயன்படுத்தப்பட்டிருப்பது தெளிவாகிறது.

ஆதிகாலத்தில் **ஆத்துமா** என்ற வார்த்தை மற்றொரு வார்த்தைக்கும் பயன்படுத்தப்பட்டது. "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்." (ஆதி 2.7) மனிதன் ஆத்துமாவை கொண்டிருந்தான் என்று நாம் வாசிக்காமல் மனிதனே ஆத்துமா என்று வாசிக்கிறோம். இப்படியாக சரீரமும் (மண்) ஜீவ சுவாசமும், உயிருள்ள ஒரு மனுஷனாகிய ஆத்துமாவை உருவாக்குகிறது என்று தெளிவாக பொருள்படுகிறது.

இவ்வாறாக, மனுஷன் அழிவில்லாதவன் அல்ல அழியக்கூடியவனாக இருக்கிறான் என்று வேதாகமம் கற்பிக்கிறது. கடைசி எக்காளம் தொனிக்கும் போது நாம் ஒரு நொடிப் பொழுதில் மறுரூபமாக்கப்படுவோம் என்று பவுல் வெளிப்படையாக கூறுகிறார். நாம் எவ்வாறு மாற்றப் படுவோம்? "அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ளவேண்டும். " (1கொரி 15.53) ஆகவே நாம் இப்போது அழிவுள்ளவர்களாக இருக்க வேண்டும். முடிவு பரியந்தம் விசுவாசத்தில் நிலைத்திருந்தால் மட்டுமே, அழியாமையைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆகவே, அழியா நிலைமையை நாம் இன்னும் பெறாமல், அழிவுள்ள நிலைமையில் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம்.

" சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச்செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்." (ரோமர் 2:7) என்று பவுல் எழுதுகிறார். இந்த அழியாநிலைமையில் நாம் இல்லாததினால் அதை தேட வேண்டியவர்களாய் இருக்கிறோமென்று பவுல் தெளிவாய்க் குறிப்பிடுகிறார்.

இறுதியாக, கிறிஸ்து மட்டுமே அழியாமையைப் பெற்றிருக்கிறார் என்று பவுல் குறிப்பிடுகிறார். ஆகவே, நாம் இன்னும் அழியாமையை பெறவில்லை என்பது தெளிவாகிறது.

### ஆத்துமா அழியக்கூடுமா?

உண்மையில் ஆத்துமா அழியாநிலைமையில் இருந்தால் நிச்சயமாக அந்த ஆத்துமா அழிக்க இயலாத ஒன்றாய் இருந்திருக்கும். இது உண்மையா? இந்த கேள்விக்கான பதிலை சில வசனங்கள் மூலமாய் ஆராய்ந்து பார்க்கலாம். வேதாகத்தில் ஆத்துமா என்று மொழிபெயர்க்கப்பட்ட நெப்பேஷ் (ஸ்டராங் எண்.5315) என்ற எபிரேய வார்த்தை அல்லது சூக்கி (ஸ்டராங் எண்.5590) என்ற கிரேக்க வார்த்தைகள் கொண்ட வசனங்களை பார்க்கலாம்.

"அவன் எகிப்துக்குச் சமீபமாய் வந்தபோது, தன் மனைவி சாராயைப் பார்த்து: நீ பார்வைக்கு அழகுள்ள ஸ்திரீ என்று அறிவேன். எகிப்தியர் உன்னைக் காணும்போது, இவள் அவனுடைய மனைவி என்று சொல்லி, என்னைக் கொன்றுபோட்டு, உன்னை உயிரோடே வைப்பார்கள். ஆகையால், உன்னிமித்தம் எனக்கு நன்மை உண்டாகும்படிக்கும், உன்னாலே என் உயிர் (என் ஆத்துமா - நெப்பேஷ்) பிழைக்கும்படிக்கும், நீ உன்னை என் சகோதரி என்று சொல் என்றான்." (ஆதி 12:11-13)

ஆபிரகாம் தான் மரித்து விடுவோம் என்று பயந்தார். இங்கு கூறப்பட்ட நெப்பேஷ் என்ற எபிரேய வார்த்தை அழிவில்லா ஆத்துமா என்று பொருள் பட்டிருந்தால், ஆபிரகாமின் ஆத்துமா மரித்திருக்காதே.

இயேசுவும் இந்த கருத்தைக் குறித்து பேசுகிறார் - "ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்." (மத்தேயு 10:28)

ஆத்துமா அழியும் என்பதை இந்த வசனம் தெளிவாகக் கூறுகிறது. மனந்திரும்பாத துன்மார்க்கர்களை தேவன் நித்தியமாக அழித்துவிடுவார் என்பதைக் குறித்து இயேசு பேசுகிறார்.

"பாவம் செய்கிற ஆத்துமா சாகும்" (எசே18:4) என்று எசேக்கியேல் மேலும் இந்த கருத்தை உறுதிப்படுத்துகிறார். நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்கும் நாளிலே சாகவே சாவாய் என்று தேவன் ஆதாமிடம் கூறியிருந்தார். பாவத்தின் விளைவு மரணமாயிருந்தது. இப்படியாக, மரணம் அனைவருக்கும் வந்தது. (ரோமர் 5:12)

"மரணத்துக் கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா? பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்." (ரோமர் 6:16,23) மனுஷன் ஆத்துமாவானால் "என் ஆத்துமா" என்று சில வசனங்கள் பேசுவதேன்? அல்லது "அவன் ஆத்துமா", "உம்முடைய ஆத்துமா" என்றும் சொல்லப்படுகிறதே. இதைக் குறித்த சில வசனங்களைக் காணலாம்.

" அதை எனக்குப் பிரியமாயிருக்கிற ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமைத்து, நான் புசிக்கவும், நான் மரணமடையுமுன்னே என் ஆத்துமா உன்னை ஆசீர்வதிக்கவும், என்னிடத்தில் கொண்டுவா என்றான்." (ஆதி 27:4)

குட் நியூஸ் (Good News Bible)பைபிளில் "என் ஆத்துமா" என்பதற்கு பதிலாக "நான் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆகவே, ஈசாக்கின் கண்ணுக்கு புலப்படாத ஆத்துமா யாக்கோபை ஆசீர்வதிக்கவில்லை, மாறாக, ஈசாக்கு தாமே ஆசீர்வதித்தார் என்று தெளிவாகிறது.

" கல்தேயர் நம்மைவிட்டு நிச்சயமாய்ப் போய்விடுவார்களென்று சொல்லி, நீங்கள் மோசம்போகாதிருங்கள், அவர்கள் போவதில்லை."(see NASV) (எரேமி 37:9) இங்கு நெப்பேஷ் என்ற எபிரேய வார்த்தைக்கு பதிலாக (உங்கள் ஆத்துமாக்கள்) என்ற வார்த்தையை "உங்களை" என்று நியூ அமெரிக்கன் ஸ்டண்டர்டு வர்சன் (NASV)வேதாகமம் சரியாக மொழிபெயர்த்துள்ளது.

"துன்மார்க்கன் தன் உள்ளம் (நெப்பேஷ்) இச்சித்ததைப் பெற்றதினால் பெருமை பாராட்டி, பொருளை அபகரித்துத் தன்னைத்தான் போற்றி, கர்த்தரை அசட்டைபண்ணுகிறான்." (சங் 10: 3) இங்கு நெப்பேஷ் என்ற வார்த்தையை ஆத்துமா என்று மொழிபெயர்க்காமல் இருதயத்தின் யோசனை என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

உண்மையில் ஆத்துமா - மாம்சமும், இரத்தமும் உள்ள நபரைக் குறிக்கும். இது ஆவியின் சரீரத்தைக் குறிப்பிடுவதில்லை. வசனங்களில் இதைக் குறித்து காணப்படும் சில எடுத்துக்காட்டுகளைக் காணலாம் -

"இஸ்ரவேல் குடும்பத்தாரிலும் உங்களுக்குள் தங்கும் அந்நியர்களிலும் எவனாகிலும் இரத்தம் என்னப்பட்டதைப் புசித்தால், இரத்தத்தைப் புசித்த அவனுக்கு(நெப்பேஷ்) விரோதமாக நான் என் முகத்தைத் திருப்பி, அவன் தன் ஜனத்தில் இராதபடிக்கு அவனை அறுப்புண்டு போகப் பண்ணுவேன்." (லேவி17:10 )

இங்கு இரத்தம் புசிக்கும் மனிதன் ஒரு ஆத்துமாவாக இருக்கிறான். ஆத்துமா ஒரு ஆவியாக இருந்தால் அது புசிக்க முடியாது.

" தூரதேசத்திலிருந்து வரும் நற்செய்தி விடாய்த்த ஆத்துமாவுக்குக் கிடைக்கும் குளிர்ந்த தண்ணீருக்குச் சமானம்." (நீதி 25:25) ஆத்துமா ஒரு ஆவியாயிருந்தால் குளிர்ந்த நீரை பருகுவதற்காக தாகம் எடுக்க வாய்ப்பில்லையே.

" உன் வஸ்திர ஓரங்களிலும் குற்றமில்லாத ஏழை ஆத்துமாக்களின் இரத்தம் காணப்படுகிறது: அதைத் தோண்டித் தேடுகிறதினால் அல்ல, அது எல்லாவற்றின்மேலும் வெளியாயிருக்கிறதினால் அதைக் கண்டுபிடித்தேன்." (எரேமி 2: 34) ஆத்துமா ஒரு ஆவியாயிருந்தால், மனித சரீரத்துக்குள் இரத்தம் இருப்பதுபோல, ஆத்துமாவுக்குள் இரத்தம் இருக்காதே. "ஆவி மாம்சமும் எலும்புகளும் உடையதல்ல". (லூக்க24: 39) என்று இயேசு தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

சூக்கீ என்ற கிரேக்க வார்த்தை ஆத்துமா என்றல்ல, ஜீவன் என்று மொழிபெயர்க்கப்படுகிறது. இப்படியாக ஆத்துமா அழியாதது என்று வேதாகமம் என்றுமே போதிப்பதில்லை. ஆகவே, இந்த வார்த்தைகளை "ஜீவன்"என்று மொழிப்பெயர்ப்பது மேலும் பொருத்தமா யிருக்கும். அப்பொழுது உயிருள்ள ஒரு சரீரமே ஆத்துமா என்று அனைவராலும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடும். இதற்கு சில எடுத்துக்காட்டுகளை காணலாம் -

"ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும் (நெப்பேஷ்); என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப்பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா? " (மத் 6:25)

"நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான். நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்." (யோவா 10:11,15)

" நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்காகத் தங்கள் பிராணனையும்( சூக்கி) ஒப்புக்கொடுக்கத் துணிந்தவர்களும் " (அப் 15: 26)

"சமுத்திரத்திலிருந்த ஜீவனுள்ள(சூக்கி) சிருஷ்டிகளில் மூன்றிலொரு பங்கு செத்துப் போயிற்று;" (வெளி 8:9)

சூக்கி என்ற கிரேக்க வார்த்தை அழிவில்லா ஆத்துமாவைக் குறிப்பிடுமேயானால், மேல் கூறப்பட்ட வசனங்களுக்கு இதன் பொருள் பொருந்தாதே.

### ஆவி, ஆத்துமா, சரீரம்

"சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும் போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப் படுவதாக. " (1தெச 5: 23) ஆத்துமா அழியாதது என்று இந்த வசனம் நிரூபிப்பதாக அநேகர் கூறுகிறார்கள். ஆயினும் ஆத்துமா மற்றும் ஆவி என்ற வார்த்தைகளை வேதாகமம் மாறி மாறி பயன்படுத்துகிறதைக் குறிப்பிடுகிறது. இந்த வசனத்தில் ஆவி ஆத்துமா அழிவில்லாமல் பாதுக்காக்கப்படுகிறது என்று நம்புவதற்கு எந்த ஆதாரமுமில்லை. ஏனெனில் ஆவி, ஆத்துமா, சரீரமாகிய மூன்று தனிப்பட்ட காரியங்களை பவுல் தெளிவாக விவரிக்கிறார்.

ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் மாம்சசரீரம், உயிர் (ஆத்துமா) மற்றும் பரிசுத்த ஆவியைக் கொண்டிருக்கிறார்கள் என்பதில் உண்மையாக இருப்பதினால் தெசலோனிக்கேயாவில் உள்ள கிறிஸ்தவர்களின் சரீரங்கள் அழியாமல் இருக்கும் என்று பவுல் அர்த்தம் கொள்ளவில்லை. மற்ற சரீரங்கள் போல அவர்களும் மண்ணுக்கு திரும்பியிருப்பார்கள். ஆவி, ஆத்துமா, சரீரம் என்று பன்மையில் சொல்லப்படாமல் ஒருமையில் சொல்லப்படுகிறது. ஏனெனில் தெசலோனிக்க சபையில் உள்ள ஒவ்வொரு தனிப்பட்ட நபர்களை ஒன்றாக இணைத்து பவுல் பேசுகிறார்.

ஆவி, ஆத்துமா, சரீரம் மொத்தத்தில் சபைக்கு அடையாளமாக பயன்படுத்தப்படுகிறது. அதில் தேவனுடைய உண்மையான ஆவி "சிறு மந்தைக்குள்" காக்கப்படுகிறது. இன்று இதன் சரீரம் மிக தெளிவாக அனைவராலும் காணப்படுகிறது. அதன் ஆத்துமா, அதாவது அதன் கிரியைகள், அறிவு திறன் அனைத்தும் ஒளியைப் போல, இந்த உலகத்தில் சாட்சியிடுகிறது.


ஆத்துமா அழியாது என்று சொன்னால் நாம் தேவனை பொய்யராக்கி விடுவோம். "நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். "(ஆதி 2:17) ஆனால் சாத்தான் ஏவாளிடம் நீங்கள் மரிப்பதில்லை என்று கூறினான். (ஆதி 3:4) ஆத்துமா அழியாதது என்று எடுத்துக்கொண்டால் ஆதாம் மரிக்கவில்லை என்று பொருள்படும்.

ஆத்துமா அழியவில்லை என்றால் மரணத்திற்கு பின் உணர்வுகள் தொடர்ந்து ஜீவித்துக் கொண்டு இருக்குமே. இது உண்மையானால் - "லாசரு நித்திரையடைந்திருக்கிறான் "(யோவா 11:11) என்று இயேசு கூறியதன் காரணமென்ன? "மரித்தவனுடைய சகோதரியாகிய மார்த்தாள் அவரை நோக்கி: ஆண்டவரே, இப்பொழுது நாறுமே, நாலுநாளாயிற்றே என்றாள். " (வசனம் 39) நிச்சயமாக இயேசு பரலோகத்திலிருந்து லாசருவை வரவழைத்திருக்க முடியாது.

அழியா ஆத்துமா என்ற போதனை உண்மையாக இருக்கும் பட்சத்தில் வேதம் முழுவதும் முரண்பாடகிவிடுமே. பிரேதக்குழியில் உள்ள அனைவரும் அவருடைய சத்தத்தை கேட்கும் காலம் வரும் என்று இயேசு கூறினார். (யோவா 5:28, 29)ஆத்துமாக்கள் முன்னதாக பரலோகத்தில் இருந்தால் கல்லறையிலிருந்து அவர்கள் எப்படி வரக் கூடும்? பரலோகத்திற்கு செல்ல சரீரங்கள் தேவைப்படும் பட்சத்தில், சரீரங்கள் இன்றி ஆத்துமாக்கள் மட்டும் பரலோகத்தில் இவ்வளவு நாள் எப்படி வாழ்ந்திருக்கக் கூடும்?

ஆகவே, ஆத்துமா அழியக் கூடியதாக இருப்பதினால் இந்த அழியாமையை சபை தேட வேண்டும் என்று வசனங்கள் தெளிவாக விவரிக்கிறது. (ரோமர் 2: 7) மரித்தோர் கல்லறையிலிருந்து எழுந்திருப்பார்கள் (யோவா 5: 28, 29 யோபு 14: 11-15 சங் 17: 15 அப்போ 24:15 ,16) அந்நேரத்தில்" என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். "(எசா 11: 9) "திரளான ஜாதிகள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்." (மீகா 4: 2) பூமியின் மேல் தேவனுடைய ராஜ்யம் பகிரங்கமாய் ஸ்தாபிக்கப் பட்டப்பின் மரித்தோரிலிருந்து மனுக்குலம் உயிர்ப்பிக்கப்பட்டு, தேவனுடைய நீதியான வழிகளை கற்றுக்கொள்வதற்கான உண்மையான முதல் வாய்ப்பை பெறுவார்கள். ஏனெனில், இவர்களை வஞ்சிக்கக்கூடிய சாத்தானானவன் முழுமையாகக் இனி ஒருவனையும் வஞ்சிக்காத அளவுக்கு கட்டப்பட்டிருப்பான்.

# நித்திய ஆக்கினை



*"அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்." - மத்தேயு 25:46*

**Robert whittaker**

நித்திய ஆக்கினை" என்ற சொற்றொடர் மத்தேயு சுவிஷேசத்தில் மட்டுமே காணப்படுகிறது. வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகள் உவமையில் இந்த வார்த்தையை காணலாம். ( வசனம் -31) நம்முடைய ஆண்டவராம் இயேசு அவருடைய பரிசுத்த தூதர்களோடு மகிமையின் சிங்காசனத்தில் வீற்றிருப்பார். சகல ஜனங்களும் அவருக்கு முன் கூட்டிச்சேர்க்கப்படுவார்கள். அப்போது வெள்ளாடுகளும் செம்மறி ஆடுகளும் பிரிக்கப்படும். செம்மறி ஆடுகள் இராஜ்யத்தை சுதந்தரித்து கொள்வார்கள், வெள்ளாடுகள் நித்திய ஆக்கினையை அடைவார்கள். இவர்கள் நித்திய உபத்திரவத்தை அல்ல நித்திய தண்டனையை அல்லது ஆக்கினையை அடைவார்கள் என்பதை கவனிக்க வேண்டும். உண்மையில் வெள்ளாடுகளை ஒப்பிட்டு பார்க்கும் போது செம்மறி ஆடுகளுக்கு நித்திய ஜீவன் கொடுக்கப் படுகிறது. நித்திய ஜீவனுக்கு எதிரான காரியம் நித்திய மரணமே. இவ்வாறாக இரண்டாம் மரணத்தில் மரிக்கக்கூடிய வெள்ளாடுகள், மீண்டும் உயிர்த் தெழுவதற்கான வாய்ப்பை கடந்து சென்றிருக்கும். ஆகவே, இந்த தண்டனை நீண்ட காலம் தொடரும் என்ற பொதுவான கிறிஸ்தவர்களின் நம்பிக்கையை நாம் ஏற்றுக்கொள்வதில்லை.

பாவத்தின் சம்பளம் மரணம் என்றும், தேவனுடைய கிருபையோ, நித்திய ஜீவன் என்று பவுல் தெளிவாக வேறுபடுத்தி காண்பிக்கிறார். (ரோமர் 6:23) "ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்." (ஆதி 2:17) என்று மரணமே பாவத்திற்கான தண்டனை என்று வசனங்கள் தெளிவாக விளக்குகிறது. தேவனுடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிபவர்களுக்கு நித்தியமான ஜீவன் பரிசாக அளிக்கப்படும் என்றும் வேதாகமம் முழுவதும் சொல்லப்பட்டிருக்கிறது. " என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட் படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட் பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடைய வராயிருக்கிறது போல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடைய வராயிருக்கும்படி அருள்செய்திருக்கிறார். அவர் மனுஷ குமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார். இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையைஅடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்." (யோவான் 5: 24-29)என்ற இயேசுவின் வார்த்தைகளை கவனித்து பாருங்கள்.

"இயேசுவின் சத்தத்தை கேட்போர்" என்று நாம் துவக்கத்தில் வாசிக்கிறோம் - இது சொல்லர்த்தமாக அல்ல, சத்தியத்தை கேட்டு தேவனை விசுவாசித்து அவருக்கு கீழ்ப்படிவதை காட்டுகிறது . (விசுவாசம் இல்லாமல் தேவனுக்கு பிரியமாக இருப்பது கூடாத காரியம் -எபி 11: 6)இப்படிப்பட்டவர்களுக்கு தேவன் நித்திய ஜீவனை கொடுப்பார். அவர்கள் ஆதாமின் மரணத்திலிருந்து கடந்து கிறிஸ்துவின் ஜீவனுக்குள் பிரவேசிக்கிறார்கள். சிலர் இந்த சுவிசேஷத்தை இந்நாளில் கேட்டு கொண்டிருக்கிறார்கள். ஆனால் மீதி இருப்போர் இனி வரக்கூடிய காலத்தில் கேட்ப்பார்கள். இவர்களுக்கு நித்திய ஜீவனை கொடுப்பதற்கு குமாரன் அதிகாரம் பெற்றிருக்கிறார். இந்த வல்லமையை குமாரன் பிதாவினிடமிருந்து பெற்றார். மரித்தோர் எழுந்து, குமாரனுடைய சத்தத்தை கேட்கும் நபர்களை காட்டிலும், இந்நாளில் அவருடைய சத்தத்தை கேட்பவர்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைவுள்ளவர்கள். இந்நாளில் நியாயத்தீர்க்கப்பட்டவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலில்

பங்கடைவார்கள். ஆனால் பெரும்பாலானோர் இனிவரும் நியாயத்தீர்ப்புக்காக உயிர்த்தெழுப்பப்படுவார்கள். இப்படியாக தேவகுமாரனின் சத்தத்தைக் கேட்கும் அனைவரும் ஜீவிப்பார்கள். சத்தத்தை கேட்காதோர் மரித்துவிடுவார்கள். நித்திய ஜீவனே கீழ்படிதலுக்கான பரிசாய் இருக்கும் பட்சத்தில் தொடர்ந்து கீழ்படியாமையில் இருப்போருக்கு நித்திய மரணமே தண்டனையாக இருக்கும் அல்லவா?

" ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரேநீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று."(ரோமர் 5:18) இது ஆதாமுக்கும் இயேசுவுக்கும் உள்ள வேறுபாடு. ஆதாமினால் முழு மனுக்குலமும், பாவத்தின் சம்பளமாகிய மரணத்தீர்ப்பை பெற்றது. அதேநேரத்தில், இயேசுவுக்குள் அனைவரும் ஜீவனைப் பெறும் வாய்ப்பைப் அடைகிறார்கள். ஆகவே, இந்த ஒரு காரியம் நித்திய ஜீவன் மற்றும் நித்திய ஆக்கினையை குறிப்பிடாமல் உண்மையான ஜீவனுக்கும் உண்மையான மரணத்துக்கும் உள்ள வித்தியாசத்தைக் காட்டுகிறது. ஆகவே, இப்போது அவருடைய சத்தத்தைக் கேட்கும் வாய்ப்பு அல்லது ஆயிரவருட ஆட்சியின் கீழ் அதற்கான வாய்ப்பு கிடைக்கலாம்.

### வேதனையான தண்டனை

" சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொருபலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும். மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம்பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே;

தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்.பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றும், கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார் என்றும் சொன்னவர் இன்னாரென்று அறிவோம். ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே." (எபிரேயர் 10: 26 - 31)

இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்டு தேவனோடு உடன்படிக்கை ஏற்படுத்துகிற வர்களுக்கு மட்டுமே இந்த வார்த்தை பொருந்தும். இவர்கள் இக்காலத்திலேயே நியாயந்தீர்க்கப் படுகிறார்கள். உண்மையான கிறிஸ்தவர்கள் அறியாமையில் பாவத்திலிருப்பார்கள். அவர்கள் மனந்துணிந்து பாவம் செய்வதில்லை. அவர்கள் ஆண்டவரை மறுதலித்து தங்களுடைய பாவ வாழ்க்கைக்கு திரும்பவில்லை.

மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்தவர்கள் அதை எதிர்க்கும் பட்சத்தில் மரணத்திற்கு தீர்ப்பளிக்கப்பட்டார்கள். ஆனால் அது நித்திய மரணமல்ல, ஏனெனில் கிறிஸ்துவின் ஈடுபலியில் அவர்களுக்கும் ஒரு பங்குள்ளது. ஆனால், கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின்பற்றக்கூடியவர்கள் துணிகரமாய் பாவம் செய்தால் உண்மையில் விபரீதமாயிவிடும். ஏனெனில் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் ஈடுபலியில் பங்கைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, இவர்கள் பெறும் தண்டனையும் மிக கடுமையாக இருக்கும் - நித்திய மரணம்.

### வெளிப்படையான சத்தியம்

இயேசுவின் பிரபலமான வார்த்தைகளை சற்று கவனிக்கலாம். "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். '(யோவா 3:16) அவரை விசுவாசிக்கும் யாவருக்கும் நித்திய ஜீவன் வாக்களிக்கப்பட்டிருக்கிறது. மீதியிருப்பவர்கள் அழிந்து விடுவார்கள். ஆகையால், விசுவாசிகளுக்கு நித்திய ஜீவன் வாக்களிக்கப்பட்டிருக்கிறதே தவிர அவிசுவாசிகளுக்கு வாக்களிக்கப்படவில்லை." உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள். "( மத் 13:16 ) "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான். " (11கொரி 4:4) " அதற்கு அவர்: தேவனுடைய ராஜ்யத்தின்

இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது; புறம்பே இருக்கிறவர்களுக்கோ இவைகளெல்லாம் உவமைகளாகச் சொல்லப் படுகிறது.

அவர்கள் குணப்படாதபடிக்கும், பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதபடிக்கும், அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கும்படி, இப்படிச் சொல்லப்படுகிறது என்றார். " (மாற் 4:11- 12 )

"இப்பொழுதே இரட்சணிய நாள்"(எசா 49: 8 ) ராஜ்யத்தில் அனைவர் மேலும் ஒளி பிரகாசிக்கப்படும். (யோவா 1: 9) ஜாதிகளை மோசம் போக்காதபடிக்கு சாத்தான் கட்டப்படுவான். (வெளி 20: 3) அநேகர் சத்தியத்தைக் கேட்டு, நீதியின் பாதையில் நடக்க விரும்பி, தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்படிந்து நித்திய ஜீவனை அடைய தகுதி பெறுவார்கள். (வெளி 22: 17) மனப்பூர்வமாய் மனந்திரும்பாதவர்கள் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள். (வெளி 20: 15)

" எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணின வைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவு மில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப் படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்தி ருக்கிறார்." (1கொரி 2 :9,10 )" கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்தவன் யார்? " (ரோமர் 11:34) தேவனுடைய அற்புதமான குணங்களை சற்று சிந்தித்துப் பாருங்கள். அவர் மட்டுமே சர்வ வல்லமையுள்ளவராகவும் இருக்கிறார். அவருடைய குணலட்சணங்களை எப்படியிருந்தாலும் சரி, அதற்கேற்றபடி நாம் அவருடைய கிரியைகளையும் எதிர்ப்பார்க்கலாம். அவர் கொடூரமான பழிவாங்கும் குணமுடையவராக இருந்திருந்தால், அப்படிப்பட்ட மனுக்குலத்தை அவர் சிருஷ்டித்திருப்பாரே. நீதி, நன்மை, நேர்மை, அன்பு, இரக்கம், உள்ளவர்களுக்கு ஏன் பரிசலிக்க வேண்டும். பகைவருக்கும், கொலைகாரருக்கும், பொருளாசைக்காரருக்கும், திருடருக்கும், உயர்வான நிலையை தேவன் கொடுக்கலாமே. எந்த விதமான நீதிக்கும் இசைந்திராத துன்மார்க்கன், நித்திய ஜீவனை பெற்று சுய நலமான ஆட்சியை நித்தியமாக ஆண்டு மகிழலாமே!

மனந்திரும்பாத பாவிகளுக்கு நித்தியமான ஆக்கினைக்கான ஆயத்தங்களை தேவன் செய்துகொண்டிருக்கிறார் என்று நினைப்பதற்கே நகைப்பாக உள்ளது. இதன் அடிப்படையில் எல்லா ஜனங்களும் ஒழுங்காக இருக்கிறார்கள் என்று நம்பப்படுகிறது. ஆனால், இது தேவனுடைய குணலட்சணமாய் இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில், தேவன் அன்பாகவே இருக்கிறார் என்று அப்போஸ்தலனாகிய யோவான் சொன்ன வசனத்திற்கு முரண்பாடாயிருக்குமே. (1யோவா 4: 7- 8) "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களைச் ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக் கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப் படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். " (மத் 5: 44 - 45) என்று இயேசு கூறுகிறார்.

உண்மையில் நாம் மிக அற்புதமானவரை தேவனாகப் பெற்றுள்ளோம். அவருடைய சகல குணங்களும் பரிபூரணமானது. எந்த காரியம் இவரை இப்படியாக இருக்கச் செய்தது ? என்பது நம்முடைய வேதாகமத்திற்கு அப்பாற்ப்பட்ட கேள்வியாயிருக்கிறது. அவர் இருந்தவரும், இருக்கிறவரும், இனிவருகிறவரும் என்று சொல்லப்படுகிறது. இதற்கு மேற்பட்ட எந்த காரியத்தையும் வேதாகமம் நமக்கு வெளிப்படுத்து வதில்லை. உண்மையில், நாம் அவருடைய சாயலில் இருப்பதினால் நன்மைக்கும், தீமைக்கும், உள்ள வேறுபாடுகளை உணர்ந்திருக்கிறோம். நீதியும், அன்புமான அவருடைய வார்த்தைகளை நாம் சோதித்துப் பார்க்கலாம். நீதிக்கும், அன்புக்கும், உள்ள அர்த்தத்தை விளக்கியிருக்கிறார். இவைகளை அடையாளம் கண்டு கொள்வதற்கு நல்ல உணர்வுள்ள மனநிலையும் தந்திருக்கிறார்.

**விசுவாசத்திற்கு பலனளிக்கும் கடவுள்**

இன்று நாம் கிறிஸ்துவ வாழ்க்கையை முழுமையாய் விசுவாசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இப்படிப்பட்ட விசுவாசத்தை நம்முடைய பிரதான எதிராளியாகிய சாத்தான் தாக்குகிறான். இவன் இப்பிரபஞ்சத்தின் தேவன் என்று அழைக்கப்படுகிறான். இவன் தேவனுடைய ஆவிக்குரிய ஆலயத்தை அழிப்பதற்கு மும்மரமாக முயற்சிக்கிறான். சில நேரங்களில்

அவன் வெற்றியடைவது போல் தோன்றுகிறது. வேதாகமத்தில் காணப்படும் மேலான நிலைகளுக்கு இப்போது அனைவரும் உயர்த்தப்படவில்லை. மரித்து கொண்டிருக்கும், உலகநிலையில் நாம் இருப்பதினால் இப்படியாக தோன்றுகிறது.

"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்."(எபி 11: 6) என்று அப்போஸ்தலர் எழுதுகிறார். தேவன் ஒருவர் உண்டென்று அறிந்து அவரை ஆர்வத்தோடு தேடுபவர்களில் நாமும் ஒருவராயிருக்கிறோம். தேவனைத் தேடக்கூடிய இந்த வாழ்க்கை, வேதத்தின் உபதேசங்களின் அடிப்படையில் அமைந்துள்ளது, இப்படிப்பட்ட அடிப்படை போதனைகளினால், நித்திய ஆக்கினை என்ற போதனை மிகத் தெளிவாகவும் நியாயமாகவும் கற்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த நித்திய ஆக்கினை அல்லது உண்மையான மரணம் என்ன என்பதை தெளிவாக நமக்குக் காட்டுகிறது. இது தொடர்ச்சியான நித்திய ஆக்கினை அல்ல. இந்த தெளிவான சத்தியத்திற்கு தங்களுடைய கண்கள் திறக்கப்படாதவர்கள், இந்த உண்மையை மறுதலிக்கிறார்கள். அல்லது, அவர்கள் சிந்தனை போதிப்பதற்கு ஏற்றவாறு வசனங்களை கற்பிக்கிறார்கள். மற்றவர்கள் பெற்றிருக்கும் விசுவாசத்திற்கு தக்கதாக நாம் நியாயம் தீர்க்கலாகாது. தேவனே இருதயத்தின் யோசனைகளை அறிந்தவர். பவுல் சவுலாயிருந்தபோது அவர் நல்ல நோக்கத்தோடு, கிறிஸ்தவர்களை உபத்திரவப் படுத்தினார். அவருடைய இருதயத்தின் யோசனைகளை அறிந்த தேவன் ஏற்ற நேரத்தில் தன்னுடைய வேலைகளை செய்வதற்கு அவரை பயன்படுத்தினார். அது போல யுகங்களைப் பற்றின தேவனுடைய ஏற்பாட்டில் நித்திய ஜீவனைப் பற்றியும், நித்திய மரணத்தைப் பற்றிய உபதேசங்களும் எவ்வளவு தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, நாம் நித்தியமாக ஜீவிக்கக்கூடிய வாழ்க்கையை தேடுவோம்.

" மேன்மைபாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக்குறித்தே மேன்மைபாராட்டக் கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; இவைகளின்மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். " (எரே 9: 24) என்று தேவன் தம்முடைய தீர்க்கதரிசியின் மூலமாய் உரைக்கிறார். தேவன், மனுக்குலத்தை கையாளும் விதத்தையும் அதற்காக, செயல்படும் அவருடைய அறிவையும், அதன் வழியாய் வெளிப்படுத்தப்படும், அவருடைய குணங்களையும் நாம் முதலில் நன்குப் புரிந்துக் கொள்ள வேண்டும். இவைகள் அனைத்தும் அன்பு, இரக்கம், நீதி, நேர்மை மற்றும் நியாயத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. இப்படிப்பட்ட தேவனுடைய குணங்களை நாம் புரிந்துக் கொள்ளும் பட்சத்தில் அவர் மிகவும் மகிழ்ச்சி அடைகிறார். இப்படியிருக்க அநீதி, பழி வாங்குதல், கோபம், நித்திய ஆக்கினை போன்ற கோட்பாடுகள் அவருடைய குணலட்சனங்கள் மேல் காணப்படும் கரும் புள்ளிகளாய் இருக்குமே. அவரை உண்மையில் நேசிக்கும் ஒவ்வொருவரும் இப்படிப்பட்ட கோட்பாடுகளை பகிரங்கமாக மறுதலிக்கவேண்டும்.

வேதத்தின் அடிப்படையில் சொல்லப்படும் நித்திய மரணமானது, தேவனுடைய நீதியையும், அன்பையும், அதின் நியாயமான காரணங்களையும் தெளிவாக காட்டுகிறது. தேவனுடைய ஞானமுள்ள சிருஷ்டிகளை தன்னைப் புரிந்துக்கொள்ளக்கூடிய மிக உயர்வான நிலைக்கு கொண்டு வருவதே அவருடைய முழுத்திட்டமாய் இருக்கிறது. (யோவ 17: 3) அவர் தூதர்களையாவது, மனிதர்களையாவது பயமுறுத்தியோ, கட்டாயப்படுத்தியோ உபத்திரவப்படுத்தியோ கீழ்ப்படிதலுக் குட்படுத்த விரும்புவதில்லை. மனப்பூர்வமாய் அவருக்கு அனைவரும் கீழ்ப்படிய வேண்டுமென்று விரும்புகிறார். சீர்திருந்தாதவர்கள் காலப்போக்கில் நித்திய மரணத்திற்குள் அறுப்புண்டு போவார்கள். சாத்தானும், தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக் கொள்ளாத, மனந்திரும்பாத தூதர்களும் நித்திய மரணத்தை பெறுவார்கள். (மத் 25: 41) இவர்கள் அனைவரும் அடையாளமாய் சொல்லப்படும் அக்கினிக் கடலில் பங்கடைவர்கள்- இதுவே மீண்டும் உயிர்த்தெழமுடியாத இரண்டாம் மரணமாகும். (வெளி 20: 14,15) அப்பொழுது தேவனுடைய நீதியான சித்தத்திற்கு விரோதமாய் கலகம் செய்பவர்களிடமிருந்து இந்த அண்ட சராசரம் விடுதலை பெறும். " உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள். " (லூக்கா 2: 14 ) என்று இயேசுவின் பிறப்பின்போது, தூதர்கள் பாடிய மகிழ்ச்சியான கீதத்தை அனைவரும் உணர்ந்துக்கொள்வார்கள்.

# ஞானஸ்நானம்



*"ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. " - கலாத்தியர் 3:27*

**Brad Bach**

ஞானஸ்நானத்தை பொருத்த வரையில் ஒவ்வொரு அமைப்புகளும் விதவிதமான நோக்கங்களுடன் காணப்பட்டாலும், பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இந்த சடங்கை, முழுமையான விசுவாசத்தின் அடிப்படையில் அனுசரித்து வருகிறார்கள். ஒரே காலத்தில் வெளிவந்த போதனைகள், எண்ணிக்கையில் அதிகமான கிறிஸ்தவ சபையைக் குறித்து இரகசியமாக ஆதரவு தெரிவிக்கிறார்கள்.

**பாப்ட்டிஸ்ட்டு சபை (Baptist church)**

வேதத்தின் உபதேசத்தின் அடிப்படையில், இயேசு தம்முடைய சீஷர்கள் அனுசரிப்பதற்காக கொடுக்கப்பட்ட கட்டளையான ஞானஸ்நானம், சட்டப்பூர்வமான ஒரு மத சடங்கு என்று சிலர் குறிப்பிடுகிறார்கள். ஆனால் சிலர் கிருபையாக தங்களுடைய ஆத்துமா பரிசுத்தப் படுவதற்காக ஞானஸ்நானம் எடுக்கிறார்கள். இந்த இரண்டு நோக்கங்களுமே - தேவனுடைய குடும்பத்தில் ஒரு அங்கமாக மாறுவதற்கும் இராஜ்யத்தில் ஒரு நல்ல பங்கை பெறவும், தங்களுடைய பாவங்களிலிருந்து பரிசுத்தப்படுவதை காட்டுகிறது. தங்கள் பாவங்கள், கழுவப்படுவதினால் அந்த நபர்கள் தூய்மை அடைகிறார்கள். இப்படியாக, ஜலத்தினால் முதலில் ஞானஸ்நானம் எடுக்கவேண்டும் அதற்குபின் தனிப்பட்ட முறையில் ஆவியினால் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று சில வருடங்களாக, ஆவிக்குரிய இயக்கங்கள் போதித்து வருகிறது. இவைகள் "அந்நிய பாஷைகள்" பேசுவதன் வழியாகவும் "தீர்க்கதரிசனம் உரைப்பதினாலும்" வெளிப்படையாக அடையாளப் படுத்தப்படுகிறது என்று நம்பப்படுகிறது.

ஜலத்தினால் கொடுக்கப்படும் ஞானஸ்நானம் பாவத்தை கழுவுவதற்கும், தனிப்பட்ட வாழ்க்கையில் சீர்பொருந்துவதற்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது.

**ரோம கத்தோலிக்க சபை**

மூன்று நூற்றாண்டுகளாக கிறிஸ்துவ சபையில் பெரியோருக்கு மட்டுமே ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டு வந்தது. விருப்பமுள்ள யாவரும் விசுவாச பயணத்தில் இணைந்து பயணிக்க அழைக்கப்பட்டார்கள். அழைப்பை ஏற்றுகொண்டவர்கள் தண்ணீர் முழுக்கினால் அந்த அழைப்பிற்கு உறுப்பினர்கள். இதுவே தங்ளுடைய சம்மதத்திற்கு பகிரங்கமான அறிகுறியாகும். புதிதாக உறுப்பினர் ஐம்பது நாளுக்கு வெண்வஸ்திரம் அணிந்து அதை கரைப்படாமல் காத்துகொள்ளவேண்டும். ஆனால் இந்நாளில், அந்த நேரத்தில் மட்டுமே வெண்வஸ்திரங்கள் அணிந்து கொள்ளப்படுகிறது. மூன்றாம் நூற்றாண்டிற்குபின் - சகல ஜனங்களின் ஆத்துமாக்களும் ஜென்ம பாவத்திலிருந்து கழுவப்படவேண்டும் என்று ரோம கத்தோலிக்க சபை போதித்தது. மேலும் அவர்கள் அணிந்த வெண்வஸ்திரம் அடையாளமாக ஆதாமின் பாவத்திலிருந்து வெற்றிகரமாக விடுதலை தந்ததாக நம்பப்பட்டது.

ஞானஸ்நானத்தின்போது, ஆத்துமாவிலிருந்து, ஜென்ம சுபாவம் அகற்றப்படும்,நேரத்தில் அநேக காரியங்கள் நடைபெறுகிறதாக கூறுகிறார்கள். இந்த "தூய்மை படுத்தும் கிருபையானது" பாவம் அகற்றப்பட்டபின் ஆத்துமாவை உயிரோடு காத்துகொள்கிறது. ஞானஸ்நானத்திற்கு முன் செய்த சகல பாவங்களுக்கான தண்டனைகளும் முழுமையாக நீக்கப்பட்டு, பரலோக குடும்பத்தின் அசையா உறுப்பினராக, தங்களுடைய ஆத்துமாக்களை பெற்றுக்கொள்கிறார்கள்.

கிறிஸ்துவின் பங்காளிகளாக மாறுவதற்கு இந்த பூமியில் நமக்கு வாய்ப்பு கிடைப்பதாக அவர்கள் போதிக்கிறார்கள். மேலும் மரணத்திற்குபின் ஞானஸ்நானம் எடுப்பதற்கும் வாய்ப்பில்லை, ஆகவே பரலோக குடும்பத்தினராக மாறுவதற்கு வாய்ப்பு கிடைக்காது என்றும் அவர்கள் கற்பிக்கிறார்கள். எனவே குழந்தையாக இருக்கும் போதே ஞானஸ்நானம் கொடுக்கப்படுகிறது. பெற்றோர்கள் உண்மையான சீஷர்களாக இருக்கும்போது தான் "குழந்தை ஞானஸ்நானம்" பலனுள்ளதாக இருக்கும் என்று இக்காலத்து போதனைகள் கருதினாலும் ரோம கத்தோலிக்க சபையில் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கடந்த காலத்து நிலையில் அதிகமான மாற்றங்கள் காணப்படுகிறதாக தோன்றுகிறது.

ஆதாமின் ஜென்ம பாவத்திலிருந்து ஞானஸ்நானம் பெறும் வரைக்கும் செய்யக்கூடிய பாவங்களிலிருந்தும் சுத்திகரிக்கப்படுவதையே கத்தோலிக்கர்கள் மையப்படுத்துகிறார்கள். இதனால் நாம் தனிப்பட்ட முறையில்பெற்றுகொள்ளும் நன்மைகளையும், சிலாக்கியத்தையும் அவர்கள் வலியுறுத்துகிறார்கள். ஞானஸ்நானம் மூலம் கிடைக்கும் சுத்திகரிப்பை செயல் முறையில் அல்ல சொல்லர்த்தமாகவே கத்தோலிக்கர்கள் கண்ணோக்குகிறார்கள். கர்த்தரின் இராபோஜனத்தின் போது அப்பமும், இரசமும்,

உண்மையான சரீரமும், இரத்தமுமாக மாறும் என்று அவர்கள் போதிப்பது போல இதுவும் ஒன்றாகும்.

**மர்மோன்ஸ்**

பிற்கால பரிசுத்தவான்களின் சபையானது, சுவிசேஷத்தின் முதல் சட்டப்பூர்வமான சபை என்று அடையாளம் காட்டப்படுகிறது. பாவங்கள் முழுமையாக கழுவப்படுவதற்கு, முழுமையாக முழுகவேண்டும். ஏனெனில் இதன் மூலம் கடந்த பாவங்கள் மன்னிக்கப்படுகிறது. ஒருவர் விசுவாசித்து மனந்திரும்பினால் மட்டுமே ஞானஸ்நானம் பெற முடியும். ஒருவருடைய தனிப்பட்ட பாவங்கள் மட்டுமே கழுவப்பட்டு சுத்திகரிக்கப்படும் என்று இந்த சபை வலியுறுத்துகிறது. ஏனெனில் ஜென்ம பாவம் உண்டென்று இந்த சபை நம்புவதில்லை. இந்த ஞானஸ்நானத்திற்கு எட்டு வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டுமே தகுதி பெறுகிறார்கள் என்று நம்புகிறார்கள்.

ஆகவே ஒருவர் ஞானஸ்நானம் பெற்றால் மட்டுமே அவர் அந்த சபையின் அங்கத்தினராக ஏற்றுகொள்ளப் படுவார். மற்ற விசுவாசத்தில் உள்ளவர்கள் கொடுக்கும் ஞானஸ்நானத்தை அவர்கள் ஏற்றுகொள்வதில்லை, ஏனெனில் ஆரோனின் வழி வந்தவர்கள் மட்டுமே ஞானஸ்நானம் கொடுக்க பாத்திரவான்கள் என்றும் அவர்களே ஆரோன் வழி வந்தவர்கள் என்றும் நம்புகிறார்கள். ஞானஸ்நானம் கொடுப்பவர், முறைபடி ஜெபங்களை ஏறெடுத்துக்கொண்டு ஞானஸ்நானம் எடுப்பவர்களின் முழு சரீரத்தையும் தண்ணீரில் முழுக்கவேண்டும். இதில் ஏதாகிலும் தவறு நேர்ந்தால், அதாவது ஏதோ ஒரு பகுதி தண்ணீரில் நனைய வில்லை என்றால், அந்த ஞானஸ்நானம் செல்லாததாக கருதப்படும், மறுபடியும் சரியான முறையில் அந்த ஞானஸ்நானத்தை பெற வேண்டியதாக இருக்கும். கூடுதலாக இந்த ஞானஸ்நானம் சரியாக நடை பெறுகிறதா என்று கவனிப்பதற்கு ஆசாரியத்துவத்தை சேர்ந்த நபர்கள் கண்காணிப்பதற்கு அவர்கள் முன்நிற்பார்கள்.

மேலும் மரித்தோருக்காக ஞானஸ்நான சடங்கு - இந்த சபையின் தனித்துவமான ஒன்றாகும். உயிருள்ள ஒருவர் மரித்தவருக்காக தண்ணீரில் முழுகி அடையாளமாக ஞானஸ்நானம் பெறுவார். மரித் தோருக்காக செய்யப்படும் இந்த சடங்கு மர்மோன் ஆலயங்களில் மட்டுமே நடத்தப்படும். பன்னிரெண்டு வயதுக்கு மேல் உள்ள சபை உறுப்பினர்கள், மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறலாம். தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க விரும்புவோருக்கு தனிப்பட்ட முறையில் கொடுக்கப்படும். இந்த ஞானஸ்நானமே தேவைப்படுகிற சட்ட ரீதியான சடங்கு என்று நம்புகிறார்கள். இயேசுவின் சுவிசேஷத்தை கேட்காமல் மரித்தவர்கள் தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க, உயிரோடிருப்பவர்கள் அவர்களுக்காக ஞானஸ்நானம் பெறலாம் என்று நம்புகிறார்கள் ஜோசப் சுமித்து என்பவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டதின் அடிப்படையில் இந்த உபதேசம் பழக்கத்தில் வந்தது.

**யேகோவாவின் சாட்சிகள்**

1, இயேசு கிறிஸ்துவின் ஈடுபலியின் அடிப்படையில் உங்கள் பாவங்களுக்காக மனம் வருந்தினீர்களா ? இனி யேகோவா தேவனின் சித்தம் செய்வதற்கு உங்களை நீங்கள் தத்தம் செய்வீர்களா ? 2, உங்கள் அர்ப்பணிப்பு என்னவென்று உங்களுக்கு புரிந்திருக்கிறதா? மேலும் யேகோவா சாட்சிகளின் ஐக்கியத்தில் தேவனுடைய நேரடியான ஆவிக்குரிய அமைப்பில் உறுப்பினராக நீங்கள் உங்களை ஒருவராக இணைத்துகொள்கிறீர்களா ? என்ற இரண்டு கேள்விகளுக்கு ஞானஸ்நானம் எடுக்கக்கூடிய நபர்கள் பதில் அளிக்கவேண்டும்.

கேட்கப்பட்ட முதல் கேள்வி நியாயமானது, ஆனால் இரண்டாவது கேள்வி சற்று தவறுதலாகவே காணப்படுகிறது. ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவுக்குள் பெறப்பட்டு, இயேசுவோடும் சக விசுவாசிகளோடும் உள்ள ஐக்கியமாக இருக்கிறது. தனிப்பட்ட முறையிலும், கூட்டமாகவும், விசுவாசிகள் வேதத்தை படித்து, மனுக்குலத்திற்கான தேவனுடைய திட்டத்தையும் அதில், தங்களுக்குரிய திட்டங்களையும் அறிந்து கொள்கிறார்கள். மனிதர்களினால் ஏற்படுத்தப்பட்ட அமைப்புகளில் கிறிஸ்தவர்கள் என்றுமே ஞானஸ்நானம் எடுக்க கூடாது.

**வேதாகமத்தின் கண்ணோட்டம்**

புதிய ஏற்பாட்டில் இரண்டு வித்தியாசமான ஞானஸ்நானத்தை குறித்து கற்பிக்கப்பட்டிருப்பதை நாம் முக்கியமாக உணர்ந்து கொள்ளவேண்டும். யோவான் யூதர்களுக்கு மட்டுமே கொடுத்த "யோவானின் ஞானஸ்நானம்" முதலாம் ஞானஸ்நானமாகும். தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாக குற்றம் செய்தவர்களின் பாவங்கள் கழுவப்பட்டது. " இஸ்ரவேல் புத்திரரே, கர்த்தராகிய நான் எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணின முழுக்குடும்பமாகிய உங்களுக்கு விரோதமாய்ச் சொல்லிய இந்த வசனத்தைக் கேளுங்கள்.

"பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்து கொண்டேன்; ஆகையால் உங்களுடைய எல்லா அக்கிரமங்களினிமித்தமும் உங்களைத் தண்டிப்பேன். " (ஆமோஸ் 3: 1,2) இஸ்ரயேல் மட்டுமே இந்த தெய்வீக பிரமாணத்தின் கீழ் இருந்தது. அநேக தவறான விளக்கங்களை கொடுத்திருந்தாலும் (அப் 19: 1-5) யோவான் ஸ்நானகனும் புறஜாதிகளுக்கு அல்ல இஸ்ரயேலருக்காக மட்டுமே அனுப்பட்டார். (எபே 2: 11,12) என்பது தெளிவாக கூறுகிறது.

நியாயப்பிரமாணத்தின் கீழ் உள்ள யூதர்களை மனந்திருப்பி மேசியாவின் வருகைக்கு ஆயத்தப் படுத்துவதே யோவான் ஸ்நானகனின் வேலையாய்

இருந்தது. (லூக் 3:3, அப் 13:24) அனைத்து யூதர்களும் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் பிறந்தவர்கள். இவர்கள் தங்களால் முடிந்த வரைக்கும் தேவனுடைய சித்தம் செய்யக் கடமைப்பட்டிருந்தார்கள். (யாத் 19 : 8, 1கொரி 10:1) இந்த பிரமாணம் தங்கள் மேல் கட்டாயப்படுத்தப்பட்டாலும், இருதயத்தில் தாழ்மையான யூதர்களும் இந்த பிரமாணங்கள் முழுமையாக கடைபிடிக்க முடியவில்லை என்பதை உணர்ந்தார்கள். இவர்கள் தங்களை சுத்திகரித்து கொண்டு, இரட்சகரை ஏற்றுகொள்வதற்கு, யோவானிடம் ஞானஸ்நானம் பெற்று தங்களுடைய பாவங்களை பகிரங்கமாக அறிக்கையிட்டார்கள். (லூக் 3:4, 7:29)

சில மனந்திரும்பிய யூதர்கள் காலப்போக்கில் இயேசுவின் சீஷர்களானார்கள். ஆனால் கிறிஸ்து இன்னும் வெளிப்படாததினால் யோவான் கொடுத்த ஞானஸ்நானம் கிறிஸ்துக்குள்ளான ஞானஸ்நானமாக இருக்கவில்லை. (யோவா 1: 35-37) ஒவ்வொரு யூதரையும் புதுப்பித்து தேவனுடைய சட்டத்திட்டங்களுக்கு கீழ்ப்படிந்து, தங்களுடைய எஜமானுக்கு ஆயத்தப்படுத்துவதே யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தின் முக்கிய முயற்சியாக இருந்தது. (எபி 3: 3-6) ஏனெனில் வெகுசீக்கிரத்தில் யோவான், வந்திருக்கும் மேசியாவை அடையாளம் காட்டக்கூடியவராக இருந்தார். உண்மையான இஸ்ரயேலர்கள் அவருடைய தலைமையின் கீழ் மோசே அடையாளப்படுத்தின மாபெரும் இரட்சகரை ஏற்று கொண்டனர். (அப் 3:19-22)

யோவான் மனந்திரும்பிய யூதர்களுக்கு மட்டுமே ஞானஸ்நானம் கொடுத்தார் என்பதை, இயேசு ஞானஸ்நானம் பெற யோவானிடம் வந்த போது, யோவான் பேசின வார்த்தைகளை கொண்டு புரிந்துகொள்ளலாம். இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுக்க யோவான் சம்மதிக்கவில்லை. இயேசு பாவியாக இராததினால் அவருக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்பதை யோவான் அறிந்திருந்தார். ஆனால், " யோவான் அவருக்குத் தடை செய்து: நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான்.

இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங் கொடுத்தான். (மத் 3: 13-17)

இயேசு கொடுத்த ஞானஸ்நானம் சற்று புதிதாக இருந்தது. அவருடைய மரணம் வரைக்கும் அவருடைய சீஷர்கள் அதைப்பற்றி முழுமையாக அறியாதிருந்தார்கள். ஆனால், இயேசு பெற்ற ஞானஸ்நானம் மனம்திரும்புதலுக்காக யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தைப் போல் இல்லை என்பதை தெளிவாக அறிந்திருந்தார்கள். ஏனெனில் " பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார். "(எபி 7:26) என்று சொல்லப் பட்டிருக்கிறதே. பாவங்கள் கழுவப்படுவதற்கும் மனம் திரும்புவதற்கும் இயேசுவுக்கு எந்த அவசியமும் இல்லாதிருந்தது.

இப்படியிருக்க இயேசுப் பெற்ற ஞானஸ்நானம் எதை அடையாளப்படுத்தும்? அவர் மரிப்பதற்கு அடையாளமாக இந்த ஞானஸ்நானத்தைப் பெற்றார். பிதாவின் சித்தத்தை முழுமையாக செய்வதற்கு தன்னுடைய சித்தத்தை முழுமையாக அர்ப்பணித்ததையும் இது அடையாளப்படுத்துகிறது. தன்னுடைய மனித ஜீவியத்தை மனுக்குலத்திற்காக விட்டுக் கொடுப்பதை இயேசுவின் ஞானஸ்நானம் வெளிப் படுத்தியது. சொல்லர்த்தமாக சிலுவையில் அது நடந்தேறியது. இயேசு ஜலத்தினால் ஞானஸ்நானம் பெற்று நீண்ட நாட்களுக்குப் பின் தன்னுடைய சீஷர்களை நோக்கி - " ஆகிலும் நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப் படுகிறேன்."(லூ 12:50) என்றார். இயேசு கிறிஸ்துவின் நோக்கத்தை அப்போஸ்தலர் தெளிவாக கூறுகிறார். " ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசிக்கும் போது: பலியையும் காணிக்கையையும் நீர் விரும்ப வில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்;

சர்வாங்க தகனபலிகளும், பாவநிவாரணபலிகளும் உமக்குப் பிரியமானதல்ல என்றீர்.

அப்பொழுது நான்: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார். " (எபி 10:5-7) தந்தையாம் ஆதாமுக்கும் அவர் வழியாய் வந்த முழு மனுக்குலத்திற்கும் தேவையான ஈடுகிரயத்தை கொடுப்பதற்கு மனிதனாக வாழக்கூடிய உரிமையை பலி செலுத்தி, அவருக்கு நியமிக்கப்பட்ட வேலையை கீழ்ப்படிதலோடும் முழு உடன்பாடோடும், பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதே கிறிஸ்து பெற்ற ஞானஸ்நானத்தை சித்தரிக்கிறது. (லூ 22:42, 1கொரி 15:21,22, 1தீமோ 2:5,6).

இயேசுவின் ஞானஸ்நானம், பலியின் மரணத்தை அடையாளப்படுத்துகிறது. ஒருதாய் தன்னுடைய இரண்டு குமாரர்களுக்கு விசேஷித்த கனம், கொடுக்க வேண்டுமென்று இயேசுவிடம் வந்தபோது - "இயேசு பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா என்றார். அதற்கு அவர்கள்: கூடும் என்றார்கள். அவர் அவர்களை நோக்கி: என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்; ஆனாலும், என் வலது பாரிசத்திலும் என் இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி என்

பிதாவினால்எவர்களுக்கு ஆயத்தம் பண்ணப் பட்டிருக்கிறதோ அவர்களுக்கேயல்லாமல், மற்றொரு வருக்கும் அதை அருளுவது என் காரியமல்ல என்றார்." (மத் 20:22,23) என்று இயேசு பதிலளித்தார். நாம் நம்முடைய ஜீவனை தேவனுக்கு வாக்களிக்கும்போது, நம்முடைய ஞானஸ்நானம் தொடங்கி, நம்முடைய மரணத்தில் அது முடிவு பெறுகிறது. நாம் பெறும் ஞானஸ்நானம் நம்முடைய முழு அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையை உள்ளடக்குகிறது. " நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன். " (வெளி 2:10) நம்முடைய ஞானஸ்நானம் நொடிப்பொழுதில் நடைபெற்று மௌனமாக மனந்திரும்பி பாவங்கள் கழுவப்பெற்று பரலோகத்தில் ஓர் இடம் பெற வழிவகுக்குமா? இயேசுவும் அவருடையசீஷரும் பெற்ற ஞானஸ்நானம் எப்படிபட்டதென்று ஒருவர் கவனிக்கவேண்டியது அவசியம். தேவனுக்கென்று பணிசெய்து தங்களுடைய ஜீவனை பலிசெலுத்தி, முடிவில் தியாக மரணமடைவதே, அவர்கள் பெற்ற ஞானஸ்நானம் பொருட்படுத்தும். அவர்கள் பாடுபட்ட ஒவ்வொரு நொடிப்பொழுதுக்கும் வாக்குத்தத்தம் பண்ண நித்தியமான ஆசீர்வாதங்கள் காத்திருக்கிறது. (மாற் 10:29,30)

இயேசுவின் சீஷர்களாக விரும்பி தங்களுடைய இருதயத்தையும் சித்தத்தையும் ஜீவனையும் தேவனிடம் அர்ப்பணிப்பவர்களுக்கு தண்ணீர் ஞானஸ்நானத்தை ஒருமாதிரியாக, இயேசு ஏற்படுத்தினார், இக்கால உலக வழிகளையும், ஆசைகளையும் இலக்குகளையும் கல்லறையில் புதைப்பதற்கு ஒப்பாக ஒருவர் பின்புறமாக தண்ணீரால் மூழ்க வைக்கப்படுகிறார். (யோவ 18 :36)தண்ணீரிலிருந்து அவரைத் தூக்கி எடுப்பது - மீண்டும் தேவனுக்காக ஜீவனைப் பெறுவதை அடையாளப்படுத்தும். கிறிஸ்துவின் சரீர அங்கங்களாய் இன்று ஜீவிக்க கூடியவர்கள் பூமியில் உள்ள முழுக்குடும்பங்களையும் ஆசீர்வதிக்கக்கூடிய முக்கியமான பொறுப்பை வாக்குத்தத்தமாய் சுதந்தரித்துக் கொள்வார்கள். (ஆதி 16-18)" மேலும் மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் என்ன செய்வார்கள்? மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்? நாங்களும் ஏன் எந்நேரமும் நாசமோசத்திற்கு ஏதுவாயிருக்கிறோம்? நான் அநுதினமும் சாகிறேன்; அதை நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினால் உங்களைக்குறித்து, நான் பாராட்டுகிற மேன்மையைக்கொண்டு சத்தியமாய்ச் சொல்லுகிறேன். " (1கொரி 15 :29 -31) என்று பவுல் தெளிவாக எழுதியுள்ளார். ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததியாகிய கிறிஸ்துவுக்கும், பிதாவாகிய தேவன் வாக்குத்தத்தம் செய்ததினால், மரித்த அனைவரும் உயிர்ப்பெறுவார்கள் என்று பவுல் வாதாடுகிறார். இந்த வாக்குத்தத்தை பாதுகாக்கவும் ஆதாமுக்குள் பிறந்த ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் குழந்தைகளுக்கும் உயிர்த்தெழுதலின் உரிமையை கொடுப்பதற்கும், ஒவ்வொருவருக்கும் தேவனை அறியக்கூடிய அறிவினால் ஆசீர்வதிப்பதற்கும், தேவனுடைய நீதியுள்ள பிரமாணங்களுக்கு கீழ் மனமகிழ்ச்சியோடு வாழ கற்பிப்பதற்கும், இயேசு பலியின் மரணத்திற்கான ஸ்நானத்தை பெற்றார். (ஏசா 2:3, எரே 31:31-34)


இந்த வாக்குத்தத்தத்தை பெறுவதற்கு இயேசு மனப்பூர்வமாய் சிலுவையில் மரிக்க தன்னை ஒப்புக்கொடுத்தார். இதற்காக அவர் உபத்திரவம் மற்றும் மரணத்தின் ஸ்நானத்தையும் பெற்றார். மேலும் மரித்தவர்களுக்காகவும் அவர் ஞானஸ்நானம் பெற்றார். (தேவனுடையப் பார்வையில் மரித்தோர்) இப்படியாக ஆதாமுக்குள் அனைவருக்கும் காலப்போக்கில், கிறிஸ்துவின் ராஜ்யத்தில் நித்திய ஜீவனைப் பெறுவதற்காக கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றார், கிறிஸ்துவோடு ஆட்சி செய்யவும், அவர் பெற்ற வாக்குத்தத்ததில் பங்கெடுத்துக் கொள்ளவும் பிதா சபையை அழைக்கிறார். (11தீமோ 2:12, வெளி 20:4) நாமும் மரித்தோருக்காக நித்தமும் மரிப்பதற்கும், ஏங்கி தவித்துக் கொண்டிருக்கும் சர்வசிருஷ்டிக்காகவும் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம். (ரோ 8:14-21, எபி 2:17,18) ஆகவே குறித்த காலத்தில் நாம் பூரணப் பட்டால் இயேசுவின் மகிமையான கிரியைகளுக்கு பங்கடைந்து உயிர்த்தெழுப்பப்படும் முழு மனுக்குலத்தின் மீதும் ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களைப் பொழிவோம்.

" எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார். நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம். " (1கொரி 12:12,13) ஞானஸ்நானத்திற்கான இரண்டு முக்கியநோக்கங்களை வசனங்கள் தெளிவாகக் குறிப்பிடுகிறது. மேலும், ஆதாமின் பாவத்திலிருந்து மனுக்குலத்தை மீட்க, கிறிஸ்துவின் பலியைத் தவிர வேறு வழியில்லை என்பதையும் காட்டுகிறது. தன்னுடைய ஒரே பேறான குமாரனை ஈடுபலியாக தந்து குறித்தகாலத்தில் முழு மனுக்குலத்திற்கும் சாட்சியாகக் கொடுத்த, நம்முடைய பிதாவாகிய தேவனுக்கே, என்றென்றும் நன்றிகளையும், துதிகளையும் ஏறெடுப்போமாக.

சுயாதீனத்திலிருந்து அன்பு பிறக்கும்

# நாம் குறைவுபட வேண்டாம்

*"ஆனபடியினாலே, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப்போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம். " - எபிரேயர் 4:1*



**Richard Evans**

மனித சிருஷ்டிப்பின் நோக்கத்தைக் குறித்து நம்முடைய இரக்கமுள்ள பிதா, துவக்கத்திலிருந்தே வெளிப்படையாக அறிவித்துள்ளார். " பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமி அனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். " (ஆதி 1:26)

இயல்பான சம்பாஷனையின் போது "சாயல்" மற்றும் "ரூபம்" என்ற இரண்டு வார்த்தைகளும் ஒரே அர்த்தத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. ஆயினும் வசனங்களில் அப்படியல்ல, இங்கு பயன்படுத்தப்பட்ட இரண்டு எபிரெய வினைச் சொற்களுக்கும் முக்கியமான வித்தியாசங்கள் காணப்படுகிறது. வசனங்களில் குறிப்பிட்டபடி, "உருவாக்குவது" (ஆசாஹ - ஸ்டிராங்ஸ் 6213) என்று பயன்படுத்தப் பட்டிருக்கிறது. அதே, நேரத்தில் சாயல் என்றும் பயன்படுத்தப்படும், வார்த்தை "சிருஷ்டிப்பது" என்று பொருள்தருகிறது. (பாரா - ஸ்டிராங்ஸ் 1254)

ஆதி 1:27ம் வசனத்தில் "தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார். (பாரா) அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார். (பாரா) ஆணும் பெண்ணுமாகவே அவர்களைச் சிருஷ்டித்தார்.(பாரா)

"சிருஷ்டிப்பு (பாரா) என்ற எபிரெய வார்த்தை - "ரூபத்தோடு" சம்பந்தப்பட்ட ஒரு தெய்வீக கிரியையை குறிப்பிடுகிறது. இதன் பொருளை நாம் சாயலோடு ஒப்பிட முடியாது. இப்படியாக, வேதாகமத்தில். "சாயல் மற்றும் ரூபம் என்ற வார்த்தைகள் வெவ்வேறு பொருள் தருகிறது. ஆகவே, அதி 5:1ம் வசனத்தில் தேவன் மனுஷனைச் சிருஷ்டித்து (பாரா) அவனைத் தேவசாயலாக (ஆசாஹ) உண்டாக்கினார். தேவனுடைய சாயலைப் பெறுவதற்காகவே, தேவனுடைய ரூபத்தில் மனுஷனைச் சிருஷ்டித்தார். நீண்ட காலமாய் தன்னுடைய ரூபத்தில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் தேவனுடைய சாயலானான். ஆணும், பெண்ணும் அவருடைய சாயலில் சிருஷ்டிக்கப்படவில்லை. ஏனெனில், தேவனுடைய சாயல் வளர்ச்சியடைவதற்கு முதலில் தேவனுடைய ரூபத்தைப் பெற்றிருக்க வேண்டும் ஆகவே மனுஷன் தேவனுடைய ரூபத்தில் சிருஷ்டிக்கப்பட்டான் என்ற முடிவுக்கு வரலாம்.

இப்படியாக, "தேவனுடைய ரூபத்தில் சிருஷ்டிக்கப்படட மனுஷன்" மற்ற சிருஷ்டிகளை போலிராமல், தங்களுடைய விதியை சுயாதீனத்தோடு முடிவெடுக்கக்கூடிய சிலாக்கியத்தை பெற்றிருக்கிறார்கள் என்பதை எடுத்துகூறுகிறது. இப்படிப்பட்ட சிருஷ்டிப்பை சர்வசிருஷ்டிகரால் மட்டுமே சிருஷ்டிக்க முடியும்.

தேவன் அன்பாகவே இருப்பதினால், மனுஷன் அன்புள்ளவனாக, மாறுவதற்குரிய வளர்ச்சி அடைவதையே மற்றொரு பக்கதில், "தேவன் தன்னுடைய சாயலின்படியே" மனுஷனை சிருஷ்டித்தார் என்றும் பொருள்படுகிறது. மேலும் " தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார். " (1யோ 4:16)

அநேக தெய்வீக குணங்களில் ஒன்றான அன்பை குறித்து யோவான் வலியுறுத்தாமல், தேவனே அந்த அன்பு என்பதை வெளிப்படுத்துகிறார். மனிதர் தேவனுடைய அன்பில் ஜீவிக்கும் போது, அவர்கள் தேவனுக்குள்ளும் தேவன் அவர்களுக்குள்ளும் நிலைத்திருக்கிறார்கள்.

ஆகவே மனுஷனை அவருடைய சாயலின்படி சிருஷ்டிப்பது தேவனுடைய கிரியையாக இருக்கிறது. ஆனால் அவருடைய ரூபத்தின் சிருஷ்டிப்பை போலிராமல் சுயாதீனம் பெற்ற மனுஷன் தன்னுடைய முழு ஒத்துழைப்பை தரக்கூடியவராக இருக்கிறார். மற்ற சிருஷ்டிகளை போலிராமல், மனிதனுடைய இயல்பான செயல்பாடுகளை அதிகாரப்பூர்வமான தெய்வீக ஆதீக்கத்தால் கட்டுப்படுத்தப்படுவதில்லை. சுயாதீனமாக இருப்பதற்கு விடுதலை தேவை மாறாக ஒருவரும் அதை கட்டாயப்படுத்தவோ, திணிக்கவோ முடியாது. ஆகவே மீட்பின் வழியிலும், அன்பின் வழியிலும் மனுக்குலம் சுயாதீனத்தோடு பிரவேசிப்பதற்குதேவனே பாதையை ஆயத்தப்படுத்துகிறார்.

வருங்காலத்தில், விழுந்த போன மனுக்குலம் சிருஷ்டிகளுடைய கிருபையான வழிகளை, புரிந்து கொள்ளும் போது பெரிதான மாற்றங்கள் ஏற்படும். தேவன் அன்பாகவே இருக்கிறார் என்பதை புரிந்துகொள்ளும் பட்சத்தில் தேவனுடைய வழிகளை பின்பற்றுவதற்கான அழைப்பானது, அழைப்பாக இராமல், அனைவரையும் இரட்சிக்கக்கூடிய பாதையாக இருக்கும். அப்போது அடிமைகள் தங்களுடைய சர்வாதிகாரமுள்ள எஜமானுக்கு பயத்தோடும் நடுக்கத்தோடும் சேவியாமல், தங்களை மிகவும் நேசிப்பவருக்காக முழு அன்போடு

கீழ்ப்படிவார்கள். பவுல் முன்னறிவித்தபடி அக்காலத்தில் -" ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார். " (எபி 2:15) அக்காலத்தில் மனிதர்கள் பயத்திலிருந்து முழுமையாக விடுதலைப்பெற்று ஒருவருக்கொருவர் அன்போடு தாங்கள் சிருஷ்டிக்கப்பட்ட காரணத்தை உணர்ந்தவர்களாக தேவனோடு இசைந்திருப்பார்கள்.

**இளைப்பாறுதலின் ஆவி**

தேவனுடைய ரூபத்தில் - சுயாதீனத்தோடு சிருஷ்டிக்கப்பட்டு அதைத் தொடர்ந்து தேவனைப் போல் அன்பாய் இருப்பதற்கு வளர்ச்சியடைந்து தேவனுடைய சாயலைப் பெற்று மிக உயர்வான நிலையைப் பெறும் வரைக்கும் தேவன் ஓய்ந்திருந்தார்.

இப்படியாக, தேவனுடைய இளைப்பாறுதலானது தன்னுடைய சிருஷ்டிகளை சுயாதீனத்தை முழுமையாக பயன்படுத்தி தனிப்பட்ட உரிமையில், முடிவெடுத்து அதன் பலன்களை கண்டது. ஆனால் தொடர்ச்சியாக மனுக்குலம் செய்த மிகப்பெரிய தவறு என்னவெனில், தாங்கள் பெற்ற சுயாதீனத்தை மற்றவர்கள் சுயாதீனமாய் செயல்படுவதை தடுக்க பயன்படுத்துகிறார்கள். அதிலிருந்து பயணித்து வரும் மனித இனம் தேவன் விரும்பக்கூடிய அன்பையும் மற்ற நல்ல குணங்களையும் வெளிப்படுத்த தவறிவிட்டது. இளைப்பாறுதலின் ஆவி, மற்றவரை தடை செய்பவர்களிடம் தங்குவதில்லை. காலங்கள் செல்லச்செல்ல மாம்சத்தின் விருப்பங்கள் அதிகரித்து தேவன் கொடுத்த சுயாதீனம் மேற்கொள்ளப்பட்டு அநேக குழப்பங்களை உருவாக்கியது. "மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள். " (ரோ 8:13)

தங்களுக்குள்ளே சுயாதீனத்தை பயன்படுத்தாமல் தடை செய்பவர்கள் மற்றவரின் சுயாதீனத்தையும் தடுத்து பகையையும், தீமையான குணங்களையும் பிறப்பிப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் தாங்கள் பெற்ற சுயாதீனத்தை தவிர்க்கமுடியாத அளவுக்கு மற்றவர்கள் மேல் தீங்கான காரியங்களை சுமத்துவார்கள். ஆனால் தேவன் தாம் கொடுத்த சுயாதீனத்தை நல்ல எடுத்துகாட்டுகள் மூலம் விளங்கப் பண்ணி தேவன் தாமே ஒருவருடைய சுயாதீனத்திலும் குறுக்கிடாமல் ஓய்ந்திருந்தார்.

இப்டிப்பட்ட சிந்தை, தேவனுடைய வழிக்கு எதிராக இருக்கும். அநேக துன்மார்க்கமான வழிகளை ஏற்படுத்தியது என்பதை அறியாமல், இரக்கமுள்ள சிருஷ்டிகரையும் கோபத்தின் தேவனாக மாற்றியது. ஆயினும், வேதம் முழுவதும், இளைப்பாறுதலின் ஆவியே தேவன் தம்முடைய சிருஷ்டிகளோடு கொண்டிருக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது. இதன் அடிப்படையில் சபையும் வளர்ச்சியடைகிறது. தங்களுடைய விருப்பத்தை தவிர்த்து மற்றவருக்காக வாழக்கூடிய உயர்ந்த ஆவியைப் பெற்றவர்களின் வழியாக வருங்காலத்தில், விழுந்துப் போன தன்னுடைய சிருஷ்டிகளோடு தேவன் தொடர்புக் கொள்வார்.

" ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாக இருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன்." (வெளி 22:17)

சுயவிருப்பத்தை கட்டுப்படுத்தி மற்றவருடைய சுயாதீனத்தை செயல் படுத்துவதே மனித சிருஷ்டிப்பிற்காக செயல்படுத்தும் தெய்வீக வழியாகும். அனைத்திலும், அனைத்துமாய் இருப்பதற்கு "இவ்வழியே பிதாவாகிய தேவனுக்கு வழிவகுக்கிறது. " சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது, தேவனே சகலத்திலும் சகலமாயிருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார். " (1கொரி 15:28)

பிதாவாகிய தேவன் சகலத்திலும் சகலமுமாய் இருப்பதற்கு அவருடைய சிருஷ்டிகள் அவருக்குள்ளும், அவர் அவருடைய சிருஷ்டிகளுக்குள்ளும் வாசம் செய்யவேண்டும். " தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத் திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார். " (1யோவ 4:16)

ஆதியில் தேவன் தன்னுடைய ரூபத்தின்படியே மனிதனை சிருஷ்டித்தபோது இந்த நோக்கத்தையே கொண்டிருந்தார். இதுவே அவரது நோக்கமாயிருந்தது, சுயாதீனம் பெற்றவர்கள் எடுத்த முடிவுகள் முன்கூட்டியே தீர்மானிக்கப்படவில்லை. அப்படியிருந்தால், அவர்கள் சுயாதீனம் பெற்றதற்கு அர்த்தமில்லையே. இவர்கள் சுயாதீனத்தோடு தங்களுடைய முடிவுகளை எடுத்தப்பின் நம்முடைய பரமசிருஷ்டிகர் தன்னுடைய செல்வாக்கினால் வரலாற்றையே மாற்றிவிடுகிறார். நினிவேக்குக் சென்ற யோனாவின் பயணம் இதற்கான பாடமாய் அமைந்துள்ளது. அந்தப் பட்டணத்தில் துன்மார்க்கமான செயல்கள் அதிகமானதால் அவர்களை எச்சரிக்கும்படி யோனாவை அனுப்பினார். ஆனால், அந்த எச்சரிப்பின் செய்திக்கு ஜனங்கள் கீழ்ப்படிந்த காரணத்தினால், அந்த அழிவு கொஞ்ச காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது. இது யோனாவுக்கு சஞ்சலத்தைக் கொடுத்தது. "யோனாவுக்கு இது மிகவும் விசனமா யிருந்தது; அவன் கடுங்கோபங்கொண்டு, கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி: ஆ கர்த்தாவே, நான் என் தேசத்தில் இருக்கும்போதே நான் இதைச் சொல்லவில்லையா? இதினிமித்தமே நான் முன்னமே தர்ஷீசுக்கு ஓடிப்போனேன்; நீர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவரும், தீங்குக்கு மனஸ்தாபப் படுகிறவருமான தேவனென்று அறிவேன்"(யோனா 4: 1-2)

வேதாகமத்தின் உட்பொருளான செய்தி தேவனைப்பற்றியும் அவருடைய ஆழத்தின் நித்தியத்தைப்பற்றியும், அவருடைய ஆளுகையைப் பற்றியும் மட்டுமல்ல, யோனா புரிந்துக் கொண்டபடி தேவன் தம்முடைய சிருஷ்டிப்புகளுக்கு சுயாதீனத்தை கொடுத்திருக்கிறார் என்பதே. இந்த சுயாதீனம் கூடுமான அளவுக்கு அன்பை வளர்ச்சியடையச் செய்யும். சுயாதீனம் கொடுக்கப்படாவிட்டால் அன்புக்கு எந்த அர்த்தமும் இல்லை. தேவன் சகலத்திலும் சகலமுமாய் இருப்பதற்கு விரும்பினார் என்று அப்பொழுது உணர்ந்துக் கொள்ளப்படும். பயத்தினாலுமல்ல, வலுக்கட்டாயத் தினாலுமல்ல தேவனுடைய இளைப்பாறுதலின் ஆவியினாலே அற்புதமான அவருடைய நோக்கம் நிறைவேறும்." கடைசியாக, சகோதரரே, சந்தோஷமா யிருங்கள், நற்சீர் பொருந்துங்கள், ஆறுதலடையுங்கள்; ஏகசிந்தையாயிருங்கள், சமாதானமாயிருங்கள், அப்பொழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் உங்களோடேகூட இருப்பார் " (11கொரி 13:11) "கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு"(11கொரி 3: 17)

அன்பு தேவனுடைய பல தெய்வீக கிரியைகளில் ஒன்றாக எண்ணப்படாமல் தேவன் அன்பின் நிறைவாகவே இருக்கிறார் என்பதைப் புரிந்துக்கொள்ளவேண்டும். அன்பான சிருஷ்டிப்பை, சிருஷ்டிக்க வேண்டும் என்பதே அவருடைய நோக்கமாய் இருக்கிறது. மேலும் இளைப்பாறுதலின் ஆவியே இதன் வளர்ச்சிக்கான துவக்கமாய் இருக்கிறது. இதனால், சுயாதீனம் பெற்ற இந்த மனுக்குலம் தெய்வீக சுபாவத்திற்கு ("சாயலுக்கு") மறுரூபப்படுவதற்கு வாய்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வாறாக, பிதாவாகிய தேவன் கோபத்திற்கு தேவனாயிராமல் அன்புக்கு தேவனாய் இருக்கிறார் என்பதை வேதாகமம் வெளிப்படுத்துகிறது. அவருடைய தனிப்பட்ட விருப்பத்தை அவர் செயல்படுத்தாமல் தன்னுடைய மனித சிருஷ்டிப்புகள் சுயாதீனமாக தங்களுடைய விதியை தேர்வு செய்வதற்கு வாய்ப்பளிக்கிறார். ஆதியிலே, மனுக்குலத்தைக் காத்துக் கொள்ள தம்முடைய ஆவியைப்பெற்ற தூதர்களை நியமித்திருந்தார். அவர்களில் சிலர் ஆதிமேன்மையைக் காத்துக் கொள்ளவில்லை. "தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்துவைத்திருக்கிறார் ""பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்து;"(யூதா 6, 2பேதுரு 2: 4) மனித சிருஷ்டிப்பின் ஜீவனத்திற்கு தேவையான சகலத்தையும் தேவன் கொடுத்திருந்தார். ஆனால், அவர் சொல்லிய ஒரே ஒரு எளிமையான எச்சரிப்பின் வார்த்தை மட்டும் கனம் பெறாமல் போயிற்று. அதற்குப்பின் பூமியிலுள்ள சகலஜாதிகளிலும் இஸ்ரயேல் ஜனத்தை தம்முடைய பிள்ளைகளாய் தேர்வு செய்து தம்மை ஆராதிக்கும்படி தம்மை வெளிப்படுத்தினார். தேவன் தம்முடைய சிருஷ்டிகளுக்குக் கொடுத்த சுயாதீனத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக யோசுவாவின் சவால் எடுத்துக்காட்டியது. "கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்; நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம் பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான்"(யோசுவா 24: 15)

இந்த கீழ்படியாத ஜனங்களிடம் தேவன் கொடுத்திருந்த சுயாதீனம் முழுமையாக வெளிப்பட்டது. அவர்களுக்கு கிரியைக்குத் தக்கபலன் அளித் திருந்தாலும் அவருடைய இளைப்பாறுதலை அவர் விட்டுக் கொடுக்கவில்லை. "அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப்பட்டார்; அவருடைய சமூகத்தின் தூதனானவர் அவர்களை இரட்சித்தார்; அவர் தமது அன்பினிமித்தமும், தமது பரிதாபத்தினிமித்தமும் அவர்களை மீட்டு, பூர்வநாட்களிலெல்லாம் அவர்களைத் தூக்கிச்சுமந்துவந்தார்"(எசாயா 63: 9)

தேவனுடைய சிருஷ்டிகளின் சுயாதீனத்தை தேவன் ஒருபோதும் நீக்குவதில்லை. ஏனெனில், அவரே சகலத்திலும் சகலமுமாய் இருப்பதற்கு எந்த விதத்திலும் அவர்களுக்குகொடுத்த சுயாதீனத்தையும் நம்மேல் செலுத்தக்கூடிய அன்பையும் அவர் குறைத்துக் கொள்ளவில்லை. நாம் அவருடைய ஆவியை துக்கப்படுத்தும் பட்சத்திலும் (ஆதி 6: 6) (எபேசி 4: 30) அதை அவித்துப்போட்டாலும் (1தெச 5: 19) அதை தடுத்து நிறுத்தினாலும் (அப் 7: 51) அவர் கொடுத்த சுயாதீனத்தை அவர் தொடர்ந்துக் கொடுத்துக் கொண்டே இருக்கிறார்.

மனுக்குலத்தின் மேல் தேவன் வைத்த அன்பினால் தன்னுடைய ஒரேபேறான குமாரனை இவ்வுலகத்திற்கு அனுப்பினபோது (யோவா 3: 16) மாட்சியுள்ள ஆளுநராக அவர் வராமல் அடிமையின் ரூபமெடுத்த ஒரு ஊழியக்காரனாய் வந்ததினிமித்தம் (பிலி 2: 7) அவர் யூதர்களால் எதிர்க்கப்பட்டு தெரிந்துக்கொள்ளப்பட்ட ஜனங்களால் புறக்கணிக்கப்பட்டார். அவருடைய குமாரனின் முதல் வருகையின்போது அவர் கற்பித்த ஒவ்வொரு பாடங்களிலும் பிதாவின் ஆவியைக் குறித்த காரியங்களையே வெளிப்படுத்தினார். (லூக் 6: 27- 29)

தவறான விதியை தேர்வு செய்வதற்கும் தம்முடைய சிருஷ்டிகளுக்கு சுயாதீனம் கொடுக்க தேவன்

மனப்பூர்வமாய் விரும்புகிறார் என்பதை கெட்ட குமாரனின் உவமை எடுத்துக் காட்டுகிறது. ஆயினும் சீர்கெட்டுப்போன (தவறான வழிச் சென்ற) மனுஷர்கள் திருந்தி வரும்போது அவர்களை மனப்பூர்வமாய் ஏற்றுக் கொள்வதற்கு என்றுமே ஆயத்தத்தோடு முழு மனதோடு காத்து நிற்கிறார். "எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான். அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான் "(லூக் 15: 20)

தன்னை நேசிக்கக்கூடிய சிருஷ்டிகள் கட்டாயமாக சுயாதீனம் பெற்றிருக்க வேண்டும். ஆகவே, பிதாவாகிய தேவன் சகலத்திலும் சகலமுமாய் இருப்பதற்கும் தம்முடைய சிருஷ்டிகளோடு நெருங்கி தொடர்புக் கொள்ளுவதற்கும் அவர் தனக்குரிய இளைப்பாறுதலில் ஓய்ந்திருந்தார். இப்படிப்பட்ட சுயாதீனம் பெற்றவர்கள் மட்டுமே தேவனோடு அன்பாக தொடர்பு கொள்ளமுடியும்.

இப்படியாக, கொடுக்கப்படும் சுதந்திரம் பெறக்கூடிய தெய்வீக மேன்மைக்கான பயமுறுத்தலாய் இராமல் முடிசூட்டும் சாதனையாக இருக்கிறது. தேவன் தம்முடைய அன்பின் மூலம் "ஆச்சரியமான கிருபையை" செயலாற்றுவதற்கும் சகலத்திலும் தம்முடைய சர்வமேன்மையை வெளிப்படுத்துவதற்காகவும் முழுவிருப்பத்தோடும் சுயாதீனத்தில் உள்ள சிருஷ்டிகளை சிருஷ்டிக்க விரும்பினார். அருகாமையில் உள்ள சர்வாதிகாரத்தினாலும் மிகுந்த கட்டுப்பாட்டினாலும் சிருஷ்டியை ஆட்கொள்வதைவிட வெகு தூரத்திலிருந்து அன்பினால் தம்முடைய சிருஷ்டிகளை தமக்குள் வைத்து கொள்கிறார். இந்த ஆவியைக் குறித்து சாலொமோன் தம்முடைய ஞானத்தில் புரிந்துகொண்டார். "பலவானைப்பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன்; பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்"(நீதி 16: 32)

**தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தல்**

தேவன் மனுஷனுக்கு சுயாதீனம் கொடுத்தார் என்பதை எடுத்துக்காட்டுவதற்கு வேதாகமத்தில் அநேக சம்பவங்கள் உள்ளது. ஆதாம் தேவனுடைய எளிய கற்பனைக்கு கீழ்படிந்தாரா? இஸ்ரயேல் தேசம் தேவனை சேவித்ததா, இல்லையா? மேலும் யோனாவின் செய்தியை கேட்ட நினிவே பட்டணத்தார் அதை ஏற்றுக்கொண்டார்களா, மறுத்துவிட்டார்களா? இன்று சபைக்குண்டான அழைப்பு , வரக்கூடிய யுகங்களில் மனுக்குலத்திற்கு உண்டான செய்தி.... இவை அனைத்தும் தேவனுடைய இளைப்பாறுதலில் சுதந்திரமாக பிரவேசிக்க அழைப்புகள் முன் வைக்கப்படுகிறது. ஏனெனில், "சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்" (கலா 5: 13)


இளைப்பாறுதலின் ஆவி சுதந்திரம் மற்றும் அன்பின் வழியின் அடிப்படையில் அஸ்திபாரம் இடப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஆவி தனிப்பட்ட உரிமைகளை ஒதுக்கிவிடுகிறது. இப்படிப்பட்ட ஆவி மற்றவர்களின் சுயாதீனத்தை சுதந்திரமாக செயல்படுத்த அனுமதிக்கிறது. பயமுள்ள மனநிலை மற்றும் அடிமையின் சிந்தைகளை மேற்கொண்டால் மட்டுமே இப்படிப்பட்ட ஆவியை உணர முடியும். " அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல" (1 யோவா 4: 18)

பயத்தினால் ஏற்பட்டுள்ள கட்டுகளை மேற்கொள்ள தேவனிடத்திலும் தேவனை பற்றியும் அதிகமான நம்பிக்கை வைக்க வேண்டும். "அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்" (ரோமர் 8: 15) பரலோகப்பிதா இஸ்ரயேலின் முற்பிதாக்கள் நம்பினது போல கோபாக்கினையின் தேவன் அல்ல, அவர் அன்புள்ள தேவன் மற்றும் இளைப்பாறுதல் தரும் தேவன் என்ற நம்பிக்கையை இன்று நாம் பெற்றால் நமக்குள் இருக்கும் பயமும் ஓடிவிடும். அப்போது நாம் தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்க குறைவுப்படமாட்டோம். அப்போது, பிதாவாகிய தேவன் "சகலத்திலும் சகலமுமாக" இருப்பார்.

இப்படிப்பட்ட இராஜ்யத்திற்காக சபை ஜெபித்து கொண்டிருக்கிறது. (மத் 6: 10, லூக் 11: 12) இதற்காகவும் சபை ஆயத்தப்பட்டு கொண்டிருக்கிறது. ( 1பேதுரு 2:5) அப்போது சிருஷ்டிகரின் நோக்கம் முழுமையாக பூர்த்தி பெறும் - இது வலுக்கட்டாயத்தினாலல்ல, முழு மனுக்குலமும் பூரணமான அறிவைப்பெற்று முழு விருப்பத்தின்படியும் மனப்பூர்வமாக தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவார்கள். பயத்தினால் ஒருவரும் அடிமைப்படுத்தப்படமாட்டார்கள். மற்றவர்களின் சுதந்திரம் பறிக்கப்படமாட்டாது. ஒருவருக்கொருவர் அன்பினால் சேவிப்பார்கள். வரக்கூடிய யுகத்தில் அபிஷேகிக்கப்பட்ட சபையின் அங்கத்தினர்களாக, தெய்வீக நோக்கத்தின் பிரதிநிதிகளாக இருப்பதற்கு இப்போது சபையானது தன்னுடைய ஜீவிய காலத்தில் தனிப்பட்ட உரிமைகளை ஒதுக்கி வைத்து விட்டு, மாம்சத்தின்படி ஜீவிக்காமல் மற்றவர்களின் சுயாதீனத்தை நடைமுறைப்படுத்த முழு சுதந்திரத்தோடு அனுமதிக்கவேண்டும். தேவனுடைய ரூபத்தின்படியே சிருஷ்டித்திருந்தாலும், தேவனுடைய சாயலை பெற ஒருவர் தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்க வேண்டும், இது கட்டாயம் அல்ல. தவிர்க்க முடியாத ஒன்றாகும் !

இப்போதைய ஆசீர்வாதங்கள்

# வெற்றிபெறும் ஆன்மீகம்



*என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். - மீகா 3:10*

**Tom Ruggirello**

பல்லாயிரமான கிறிஸ்தவர்கள், செழித்தோங்கும் கிறிஸ்துவ மத சாஸ்திரத்தின் மேல் நம்பிக்கை வைத்துள்ளனர். கடவுளின் இரக்கம் பெற்றவர்கள் பொருளாதார செழிப்பையும், பெறுகிறார்கள் என்று இந்த நம்பிக்கை வலியுறுத்துகிறது. புரோட்டஸ்டன்ட் பெந்தேகோஸ்தே மற்றும் பல ஆவிக்குரிய சபைகளிலும் இந்த போதனையை வெவ்வேறு அளவில் காணலாம். விசுவாசிகள், பெற்ற விசுவாசத்தை அறிக்கையிட்டு, உண்மையோடு காணிக்கைகளையும், தசமபாகத்தையும் செலுத்தினால், சரீர சுகத்தையும் உலக ஐசுவரியங்களையும் அதிகமாக பெற உரிமை உண்டு என்பதையும் ஆதரிக்கிறது.

இப்போது இருக்கும் மிகப் பெரிய சபைகளில் இந்த நம்பிக்கையே பிரபலமாக காணப்படுகிறது. இந்த நம்பிக்கையே வெற்றியானது. இந்த உபதேசத்தை ஏற்றுக் கொண்ட அநேக கிறிஸ்தவர்கள் வசனங்களில் பரிச்சயம் இல்லாதவர்கள் என்பதை நன்கு புரிந்துக் கொள்ள வேண்டும். உண்மையில், இந்தக் கோட்பாடுகளை போதிக்கும் அநேக போதகர்கள் வசனங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. உலகப் பிரகாரமான ஐசுவரியங்கள் பலனாகக் கொடுக்கப்படும் என்பதைக் குறித்து வசனங்கள் கூறுவது என்ன ? " தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின் செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான் "(லூக் 14:27) என்று இயேசு கூறுகிறார். சிலுவை மரணமானது இரக்கமற்ற கொடூரமான முறையில் வேதனையோட மரிப்பதாகும். இப்படிப்பட்ட மரணத்தை மரிக்க வேண்டும் என்று இயேசு தம்முடைய சீஷர்களுக்கு கூறவில்லை. மாறாக, அடையாளமாகக் கூறினார். ரோமக் குற்றவாளிகள் தாங்கள் அறையப்படக்கூடிய சிலுவையை அவர்களே சுமக்க வேண்டுமென்று எதிர்ப்பார்க்கப்பட்டனர். அவர்கள் சிரமப்பட்டு அதைத் தூக்கிச் சென்றபோது, அவர்கள் படும் வேதனையும், அவமானமும் தண்டனையின் ஒரு பகுதியாக எண்ணப்பட்டது. இயேசு கொல்கொதாவுக்கு தன்னுடைய பயணத்தை சிலுவை சுமந்து தொடங்கும்போது அவருடைய பலம் அற்றுப்போன நேரத்தில் அந்தச் சிலுவையை சுமக்கும்படி சீமோன் கட்டாயப்படுத்தப்பட்டார்.

தங்களுக்கு கொடுக்கப்பட்ட சுமையை மனப்பூர்வமாய் சுமக்கவேண்டுமென்று இயேசு தம் சீஷர்களுக்கும் கூறினார். ஆயினும் இயேசு நமக்கு கொடுக்கக்கூடிய சிலுவை ஒரு தண்டனையல்ல. உண்மையில் அது நம் ஆசீர்வதாதத்திற்காக கொடுக்கப்படுகிறது. இது ஒரு தனித்துவமான சிறப்புரிமையாகும். நம்முடைய சிலுவையை சுமப்பது - இந்த அண்டசராசரம் இதுவரை கண்டிராத நம்முடைய சுயநலமற்ற அன்பின் செயல்பாட்டைக் கண்டு கொள்வதற்கான ஒரு வாய்ப்பாக உள்ளது.

அதில் பாடுகள் இருக்கலாம். சில நேரங்களில் அவமானங்களையும் சகிக்கலாம். ஆனால் நாம் செல்லக்கூடிய அடிச்சுவடுகள் யாருடையது என்பதை புரிந்துகொண்டால், சிலுவையை சுமப்பதும், அதனால் வரும் அனைத்துமே இயேசு சிலுவையை சுமந்த காரணத்தையும், நாம் அவர் மேல் வைத்திருக்கும் அன்பையும் வெளிப்படுத்துவதற்கு நாம் பெற்ற சிலாக்கியம் என்பதையும் நன்கு உணரலாம்.

இயேசுவும், சபையும் முழுமையாக சோதிக்கப்பட்டு, பாத்திரவான்களாக அங்கிகரிக்கப் படவேண்டும். "மனிதனுக்கு நேரிடும் "சோதனைகளாக இருப்பினும், அதன் முடிவு இயல்பாக இருக்கவேண்டும். (1கொரி 10:13) சோதனைகள் மற்றும் உபத்திரவங்களின் வழியாக ஒருவர் கற்றுகொண்டு வளர்ச்சி அடையமுடியும்.

இயேசு பெற்ற சொந்த அனுபவங்களில் இந்த கோட்பாடுகள் வல்லமையாக செயல்பட்டதை நாம் காணலாம். அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி," (எபி 5:8,9)

இயேசு என்றும் கீழ்படிதலுள்ள குமாரனாக இருந்தார். ஆயினும் அவர் புது சிருஷ்டியாக வளர்ச்சி அடைய அவர் பட்ட சோதனைகளிலும், பாடுகளிலும் கற்றுகொண்ட கீழ்படிதலானது மேலும் விசேஷமாக பயன்பட்டது. அவர் இதன் மூலம் பெற்ற வல்லமையும், தேவன் மேல் அவர் வைத்திருந்த நம்பிக்கையும் அவரை ஒரு சிறந்த பிரதான ஆசாரியனாக தகுதி அடைய செய்து. மேலும், சோதனைகளையும், உபத்திரவங்களையும் எதிர் நோக்குபவர்களுக்கு விசேஷத்த உதவி அளிக்க செய்தது. (எபி 2:18) எந்த விதமான உலக பிரகாரமான

சொத்துக்களையும் பெற்றிராத மனுஷனாகிய இயேசு உண்மையான ஆவிக்குரிய ஐசுவரியத்தை பெற்றார். (மத் 8:20) தற்காலிகமான சொத்துக்கள், உடல் சுகங்களை அல்ல, நித்தியமான ஆவிக்குரிய ஐசுவரியங்களை பெற்று கொள்ள இதுவே நமக்கு வைக்கப்பட்ட இலக்காகும். கிறிஸ்துவின் சிலுவையை மையப்படுத்தி இருக்கும் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை அறிந்த நாம் இன்று சிலுவையை சுமந்தால் நிச்சயமாக வருங்காலத்தில் ஒரு மாற்றம் ஏற்படும் என்பதை நாம் அறிந்துள்வோம். விழுந்துப்போன மனுக்குலத்தை பூரண நிலையை அடையச் செய்து தேவனோடு ஒப்புரவாக்கும் வேலையை செய்வதில் நாமும் ஒரு சிறிய பங்கை பெறலாம்.

ஆயினும், நாம் இந்த வேலைக்கு, முழுமையாக வாக்களித்துள்ளோம் என்பதை நிரூபிக்க வேண்டும். இந்தக் காரியத்தை அரைமனதோடு செயல் படுத்தக்கூடாது. ஆகவே, நம்முடைய அர்ப்பணிப்பை நிரூபிப்பதற்கு நம்முடைய தோளின் மேல் சிலுவையை சுமக்க வேண்டும். முழுமையாக அர்ப்பணிக்காதவர்கள் காலப்போக்கில் சிலுவையை கீழே வைத்துவிட்டு இந்த உலகத்தோடு இசைந்து விடுவார்கள்.

சிலுவையை சுமக்கக்கூடிய இந்த வாழ்க்கையில் அநேக முறைகள் நம்முடைய முட்டிகள் தேய்ந்திருக்கலாம். நம்முடைய முதுகுகள் சுமையினால் அழுத்தப்பட்டு இருக்கலாம். இதை நாம் ஒழுங்காக சுமக்கிறோமோ என்று நம்முடைய ஆண்டவர் எட்டி நின்று கைக்கட்டிக் கொண்டு வேடிக்கைப் பார்ப்பவரல்ல. நாம் பலவீனப் பாண்டங்கள் என்று அவர் உணர்ந்து இருப்பதினால் தம்முடைய ஈடுபலியின் நன்மையினால் நம்முடைய பலவீனங்களை அவர் மூடுகிறார். நம்முடைய இருதயங்களின் எண்ணம் பரிசுத்தமாய் இருப்பதற்கு விரும்புகிறார். நம்முடைய சிலுவையை உறுதியோடு சுமக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நம்முடைய பலவீனத்தினாலும் சோர்வினாலும் நம்முடைய சிலுவையை நழுவ விடும்போது, அவர் மெதுவாக எடுத்து தோளின்மேல் மீண்டும் வைக்கிறார்.

### நாம் தேவனை ஏன் சேவிக்க வேண்டும்?

தற்காலிகமான ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கு நாம் தேவனிடத்தில் வரவேண்டுமா ? என்ற உந்துதலான கேள்வியை, செழித்து வரும் மத சாஸ்திரங்கள் எழுப்புகிறது. துரதிஷ்டவசமாக, இப்படிப்பட்ட போதனைகள் அநேகரை தவறான எதிர்ப்பார்ப்புக்குள் வழி நடத்துகிறது. அவர்கள் எதிர்ப்பார்த்த காரியம் கிடைக்காத பட்சத்தில் தேவனையும், அவர் பேரில் உள்ள விசுவாசத்தையும் விட்டு விடுகிறார்கள். தேவனிடத்தில் வரக்கூடிய சரியான நோக்கத்தைக் குறித்து சகோ. ரசல் விவரிக்கிறார். "ஒருவருக்கு நீதியின் மேலும், சத்தியத்தின் மேலும் ஒழுக்கமுள்ள வாழ்க்கைக்கு தேவையான கோட்பாடுகள் மேலும் அன்பிருந்தால், அந்த அன்பினால் தன்னுடைய சிருஷ்டிகரை மகிமைப்படுத்த விருப்பமிருந்தால், அந்த நீதியின் பாதையில் நடந்து தேவனுடைய சித்தத்தை முழுமையாக செய்வதற்கு தன்னை தானே அர்ப்பணிப்பார். (Harvest Gleanings, vol. 2,p.450)

இது ஒரு வல்லமையான சிந்தனையாகும். நாம் நீதியை விரும்பி அன்பையும், சத்தியத்தையும் நேசித்து நம்மால் முடிந்த வரைக்கும் பிதாவாகிய தேவனை மகிமைப்படுத்திக் கொண்டிருந்தால், நம்முடைய சிலுவையை நாம் சுமந்து கிறிஸ்துவின் பாதையில் நடக்கக் கூடிய கட்டாயமான சூழ்நிலைகள் ஏற்படும். நம்முடைய வாழ்க்கையில் இந்த வாய்ப்பை நம்மேல் விழுந்த கடமையாக உணர்ந்து கொள்ளலாம். இதுவே நம்முடைய இருதயத்தில் சிந்தையானால், நம்முடைய அழைப்பை ஏற்றுக் கொண்டவர்களாய் இன்று முதல் நம்முடைய முடிவு காலம் வரைக்கும் அந்த சிந்தனைகளோடு, நம்மை நாம் அர்ப்பணித்து ஜீவபலியை செலுத்தலாம்.

உண்மையில் இப்படிப்பட்ட ஜீவ பலி, வாழ்க்கையில் ஒரு மேன்மையான காரியமாயிருக்கிறது. இந்த உலகத்தாரும், கிறிஸ்தவர்களும், மேன்மையான நோக்கங்களை செயல்படுத்தும் காரியங்களில் அநேக பிரச்சனைகளை எதிர்நோக்கலாம். மேன்மையான எதிர் நோக்குகள் வாழ்க்கையில் பெரும்பாலும் வெற்றிகளை தருவதில்லை. இதற்காக நேரம் செலவழிப்பதும் வீணாகவே தோன்றும். ஆனால், உண்மையில் தேவனிடத்தில் உண்மையாக அர்ப்பணிக்கக்கூடிய சிந்தையும், சிலுவையை சுமப்பதினால் வரும் பிரச்சனைகளும் நம்முடைய வாழ்க்கைக்கு மிக பிரயோஜனமுள்ளதாக இருக்கிறது.

இப்படிப்பட்ட பலியின் ஜீவியத்திற்கு ஒப்பற்ற நன்மைகளையும், பரிசுகளையும் பெறுவோமென்றும் நாம் உணர்ந்திருக்கிறோம் என்பதை தேவன் அறிந்திருக்கிறார். பணத்திற்கு மதிப்பில்லாத ஒரு உலகத்தை சற்று கற்பனை செய்து பாருங்கள். பொருளாதாரத்தை முக்கியப்படுத்தாமல் தேவ பக்தியுள்ளவர்களும் நற்பண்புள்ள ஜனங்களும், வெற்றியடையக்கூடிய ஒரு சமுதாயத்தை எண்ணிப் பாருங்கள். இப்படிப்பட்ட சுற்றுப்புறச் சூழலில் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையே வெற்றியை அளவிடும். தேவனுடைய மகிமைக்காக வாழ்ந்த வாழ்க்கையே தகுதியாக எண்ணப்பட்டு மற்றவர்களுக்கு மாதிரியாக வைக்கப்படும். நாம் பெற்ற உலக ஐசுவரியமோ,

ஆஸ்திகளோ, இந்த ஆவிக்குரிய வெற்றிகளை நிர்ணயிக்காது.

இந்த யுகத்தில் நம்முடைய ஜீவனை தேவனுக்காக அர்ப்பணிக்கும் பட்சத்தில், தேவனுடைய திட்டத்தின் வடிவமைக்கக்கூடிய காரியத்தில் நாமொரு முக்கிய பங்கை பெறலாம். இந்த உலகத்திலுள்ள ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் தேவனிடத்தில் தன்னை அர்ப்பணித்தப்பின் தேவனுடைய இந்த திட்டம் முழுமையாக பலனளிக்கும். ஒவ்வொருவருடைய இருதயத்திலும் தேவனுடைய சித்தத்தை செய்வதே பிரதானமாக இருக்கும்போது உண்மையில் தேவனுடைய சித்தத்தை வாழ்க்கையில் செய்வதின் மகிழ்ச்சியை அனைவரும் உணர்ந்து கொள்வார்கள். அப்போது சமுதாயம் உண்மையான செழிப்பை காணும். தற்காலிகமான ஆசீர்வாதங்கள் அதை பின் தொடரும். ஆனால் முதன்மையாக தேவனுக்கேற்ற பக்தியும், அவருடைய கோட்பாடுகளும் கடைபிடிக்கப்படவேண்டும்.

இயேசு தம்முடைய சீஷர்களைக் குறித்து லூக்கா 17ம் அதிகாரத்தில் தொடர்ந்து பேசினார் வாழ்க்கை முழுவதும் பலி செலுத்துவதற்கான கணக்கை போட்டு பார்க்கும்படி சொன்னார். "அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டான வைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்."( லூ 14:33) என்று இயேசு தம்முடைய சிந்தனையில் உள்ளவைகளை சொன்னார். மத் 19:16-23 வசனங்களில் சொல்லப்பட்டுள்ள அந்த ஐசுவரியமுள்ள வாலிபன் நம் நினைவுக்கு வருகிறார். அவர் நல்ல இருதயம் கொண்டவராயும், கிறிஸ்துவின் சீஷராகுவதற்கு தேவையானவைகளை அறிந்துகொள்ள ஆர்வமுடையவராயிருந்தார்."அதற்கு இயேசு: நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார்."( மத் 19:21) என்று இயேசு பதிலளித்தார்.

இந்த வாலிபன் செலவைக் கணக்கு பார்த்தபின், அது மிகவும் அதிகமாக அவருக்கு தோன்றியது. அந்த வாலிபனுக்கு உள்ளதெல்லாம் விட்டுவிட வேண்டுமென்று இயேசு கூறினாரா ? நாம் பெற்ற அனைத்தையும் விட்டு விட வேண்டுமென்று எதிர்பார்க்கிறாரா ? மத் 25 அதிகாரத்தில் நாம் என்ன செய்ய வேண்டுமென்று இயேசுவின் எதிர்ப்பார்ப்பைக் குறித்துப் பேசப்படுகிறது. அங்கு சொல்லப்பட்ட ஒரு உவமையில், ஊழியக்காரருக்கு கொடுக்கப்பட்ட தாலந்துகளை பற்றி பேசினார். தாங்கள் பெற்ற தாலந்துகளை அதிகமாக பயன்படுத்தினவர்களைக் கண்டு ஆண்டவர் மகிழ்ச்சியடைந்தார். பெற்ற தாலந்தை பயன்படுத்தாத ஊழியக்காரர்கள், சோம்பேறிகள் என்றழைக்கப்பட்டார்கள். மேலும், தாலந்தை பயன்படுத்தாதவரிடமிருந்த கொடுத்ததை திரும்புவம் வாங்கிக் கொண்டார்.

நம்முடைய வாழ்க்கையை அர்ப்பணித்த அந்த நொடியிலிருந்து நம்முடைய உடைமைகளும், அர்ப்பணிக்கப்பட்டதாக கருதவேண்டுமென்று இயேசு இந்த பாடத்தில் எடுத்து காட்டுகிறார். நாம் பெற்ற அனைத்தும் தேவனுடையதாயிருக்கிறது. ஆகவே நம் உடமைகளை தேவனுடையப் பணிக்காக பயன்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் பெற்ற தாலந்துகளை தேவனுடையப் பணிக் கென்று எவ்வளவாய் பயன்படுத்துகிறோமோ அந்தளவுக்கு நம்முடைய ஆவிக்குரிய நிலை உயர்ந்திருக்கும்.


நாம் பெற்ற அனைத்தையும் தேவனுடைய பணிக்காக பயன்படுத்தக்கூடிய நம்முடைய விருப்பமே - "ஆகும் செலவை கணக்கிடுவதாகும்". நம்முடைய வைகளை தேவனுடையவைகள் என்று கருதலாமா? அவைகளை தேவனுடைய மகிமைக்காக பயன் படுத்தலாமா? நாம் இதை செய்வோமானால், நித்தியமான ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் மற்றவரின் விருப்பத்திற்காக நம்மை ஜீவபலியாக ஒப்புக் கொடுப்பதிலும் நம்மை வழிநடத்தி வளர்ச்சியடையச் செய்யும். இதுவே, நித்திய ஜீவனில் வாழக் கூடிய வாழ்க்கை என்று இயேசு கூறுகிறார். (யோவா 10:10)

மிகுதியான உதவிகளையும், ஆறுதல்களையும் அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பியரிடமிருந்து பெற்றபின். "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார். "( பிலி 4:19) என்று பவுல் உறுதியளித்தார். உண்மையான ஐசுவரியம் நாம் பெற்றிருக்கும் பணத்தையோ, அல்லது உடல் நலத்தையோ குறித்தல்ல. இவைகள் நம்மை தவறாக வழி நடத்தும் அளவு கோலாகும். நம்மை தேவனுடைய கரங்களில் ஒப்புக்கொடுத்து, தேவனுடைய சித்தத்தை முடிந்த வரை செய்த அவருடைய கோட்பாடுகளின் படி ஜீவித்தோமேயானால், அவர் நம்மை பராமரித்து நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சித் தேவையான சகலத்தையும் ஏற்ற காலத்தில் கொடுத்து வழி நடத்துவார்.

ஆகவே , நாம் ஒவ்வொருவரும் தற்காலிகமான சொத்துக்களினால் வரும் சந்தோஷத்தைத் தேடாமல் நித்திய ஆவிக்குரிய மகிமையான ஆசீர்வாதங்களை பெறுவதற்கு தொடர்ந்து தெய்வீக ஞானத்தைத் தேடுவோமாக.

"காணும்" என்பதன் பொருள் என்ன?

# கண்கள் யாவும் அவரை காணும்



Gilbert Rice

இதோ,மேகங்களுடனே வருகிறார்.கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக்காண்பார்கள், பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும், ஆமென் - வெளி 1:7

இந்த வெளிப்படுத்துதலின் வாக்குத்தத்தம் நாம் நன்கு அறிந்ததும். அதிகாரப்பூர்வமானதும் என்பதை தெரிந்திருக்கிறோம். ஆனால் கிறிஸ்துவ ஜனங்கள் இந்த தீர்க்கதரிசன நிறைவேறுதலைக் குறித்து பல்வேறு கருத்துக்களை உடையவர்களாயிருக்கின்றனர். நாமும் இயேசு கிறிஸ்துவின் வருகையை, பூமியிலுள்ள ஜனங்களின் சரீர கண்களுக்கு தென்படுவார் என்று புரிந்து கொள்வதா? அல்லது மனக்கணகளால் மாத்திரமே புரிந்துக்கொள்ளமுடியுமா? என்பதை காண்போம்.

**ஸ்டிராங்ஸ் கூற்று**

வெளி 1:7 ல் குறிப்பிடப்பட்டிருக்கும் "காணும்" என்கிற கிரேக்க வார்த்தை, ஸ்டிராங்க்ஸ் ஒத்தவாக்கியத்தில் எண் 3799 ல் ஆப்டோமை (Optomai) என்றும், அதன் இலக்கன அடிப்படையின் பேரில் ஆப்சிட்டாய் (Opsetai) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்டாரங்ஸ் ஒத்தவாக்கியம் அதன் அர்த்தமாக "to gaze" அதாவது ஏதோ ஓர் முக்கியமான காரியத்தை பார்ப்பதற்கு கண்களை விரிவாக திற என்று பொருள்படும். இதே அர்த்தம் 991,1492, 2300, 2334 மற்றும் 4648 எண்ணிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வார்த்தை நேரடியாக (கண்கள் யாவும் அவரைக் காணும்) குறிப்பிடப் பட்டிருப்பதால் இயேசு கிறிஸ்து மாம்சீக கண்களிலும் தென்படுவார் என்று அர்த்தப்படுத்தப் படுகின்றது. ஆனாலும் இந்த கருத்து இரண்டு காரணங்களுக்காக தவறு என்பதை கீழே காணலாம்.

இந்த குறிப்பட்ட "காணும்" (see) என்கிற வார்த்தைக்கு வேத ஒத்தவாக்கியம், அகராதியில் எந்த கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை காணலாம். அப்போது இதன் முழு அர்த்தமும் புரிய வரும்.

1. ஸ்டிராங்க்ஸ் கூற்றிக்கு முன்னால் ... காணும் (see) என்ற வார்த்தை, 3708 ஹோரா (horaw) என்ற கிரேக்க சொல்லிற்கு பதிலாக இடம் பெற்றிருக்க வேண்டும் என்ற இதன் அர்த்தமாக சரியாக கூர்ந்து பார்த்தல், சரியான முறையில் புரிந்து கொள்ளுதல் (மாம்சீகமாகவோ அல்லது மனக்கண்கள் மூலமாகவோ) இந்த அர்த்தங்கள் அவரைக் கண்கள் காணும் என்பது போல எடுத்துரைக்கின்றன. இது ஆப்டோமை என்கிற மேலே கண்ட கிரேக்க வார்த்தைக்கு மீண்டும் அர்த்தம் சேர்க்கின்றது.

2. ஸ்டிராங்க்ஸ் மேலும் ஐந்து வார்த்தைகளைக் குறித்தும், ஆப்டோமை என்கிற கிரேக்க வார்த்தைக்கு கொஞ்சம் முரண்பாடு இருப்பதாக விளக்கியிருக்கிறது. ஆனாலும் அவருடைய விளக்கங்களில் ஆப்டோமை என்கிற கிரேக்க வார்த்தைக்கு முற்றிலும் மாறுப்பட்டு எந்த கருத்தையும் தெரிவிக்கவில்லை.

**மேலும் ஸ்டிராங்க்ஸ் விளக்கமளிக்கும் ஐந்து வித வார்த்தைகள்**

"...அதில் குறிப்பிட்டிருக்கும் 991 எண்ணில் இடம் பெற்றிருக்கும் வார்த்தை விருப்பத்தோடு கவனித்தல் என்றும் 1492 ஆம் எண்ணில் இடம் பெற்றிருக்கும் வார்த்தை சாதாரன பார்வை என்றும் 2300ம் எண்ணின் வார்த்தை முக்கியமாகவும் தீவிரமாகவும் என்று பொருள்படுகிறது. 2334 ம் எண்ணின் வார்த்தை மிக்க ஆவலுடன் தொடர்ந்து கவனித்தல் என்றும் 4648ம் வார்த்தை துாரத்திலிருந்து கவனித்தல் என்று பொருள்படுகின்றது.

நேரடியாக இந்த வார்த்தைகள் எதனை அர்த்தப்படுத்துகின்றது என்பதை காண்போம்.

991 - blew "to look at" அதை பார்க்க (நேரடியாகவோ அல்லது மறைபொருளாகவோ)

1492 - eidw - "properly to see" சரியாக பார்த்தல் (நேரடியாகவோ அல்லது மறைபொருளாகவோ)

2300 - theaomai - "to look at… to percieve" அதை கூர்ந்து பக்கத்தில் பார்த்து உணர்ந்து கொள் (நேரடியாகவோ அல்லது மறைபொருளாகவோ)

2334 - theorew - ":Sto br a spectator of, i.e., disern" பார்வையாளராக இருந்து உணர்ந்து கொள் (நேரடியாகவோ அல்லது மறைபொருளாகவோ)

4648 - skopew - "to take aim at (spy), i.e.,(fig) regard" (அதை நோக்கமாக கொள்)

(ஸ்டிராங்க்ஸ் வரைமுறையில், மேலே சொல்லப்பட்டுள்ள வார்த்தைகளின் அர்த்தத்தை வைத்துக் கொண்டு பார்த்தோமேயானால் அதிகமாக மனக்கண்களின் வாயிலாக புரிந்து கொள்ளலாம் என்பதை உணர்த்துகின்றது. )

991 - லூக்கா 8:10, ரோமர் 7:23, 11கொரி 7:8, எபிரெயர் 2:9, 10:25

1492 - அப்போஸ்தலர் 15:6, 28 :26, 1கொரி 13:2

2300 - யோவ 4:35

2334 - யோவ 4:19, 12:19, அப்போஸ்தலர் 17:22,27:10, எபி 7:4

3708 - அப் 8:23, யாக் 2:24

4648 - லூக் 11:35, ரோம 16:17, 11கொரி 4:18, கலா 6:1, பிலி 2:4, 3:17

**கிரேக்க வார்த்தையான ஆப்டோமையின் மறைமுக உபயோகம்**

கிரேக்க வார்த்தையான ஆப்டோமையின் மறைமுக உபயோகம் வைன்ஸ் எக்ஸ்போசிட்டரி டிக்ஷனரியின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆப்டோமை என்றால் பார்த்தல் (to see) உள்ளப்பூர்வமாக உணர்ந்து கொள்ளுதல் அல்லது ஆவிக்குரிய அனுபவம். வெளி 1:7ல் ஆப்டோமை என்கிற வார்த்தை சரியானதாக பொருந்திவருகின்றது.

* யோவான் 1:51 - "பின்னும் அவர் அவனை நோக்கி - வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள் (ஆப்சிஸ்த்தீ - opsesthe) என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார்."

*மாற் 14 :61,62 - "அவரோ, ஒரு உத்தரவும் சொல்லாமல் பேசாதிருந்தார். மறுபடியும் பிரதான ஆசாரியன் அவரை நோக்கி - நீ ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா ? என்று கேட்டான். அதற்கு இயேசு -" நான் அவர் தான், மனுஷகுமாரன் சர்வவல்லவரின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் நீங்கள் காண்பீர்கள் (ஆப்சிஸ்த்தீ - opsesthe) என்றார். "

* லூக்கா 3:5 " மாம்சமான யாவரும் தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள். (ஆப்சிஸ்த்தீ - opsesthe ) என்றும்.... " ஏசாயா 40:5 - "கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும், மாம்சமான யாவும் அதை ஏகமாய்க் காணும் (ஆப்செட்டை - opsetai ) கர்த்தரின் வாக்கு அதை உரைத்தது என்றும் வனாந்திரத்திலே கூப்பிடுகிற சத்தம் உண்டாயிற்று."

* யோவ 3:36 -"குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான், குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை. (ஆப்செட்டை - opsetai) தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்றான்"

* அப் 18:15 -இது சொற்களுக்கும், நாமங்களுக்கும், உங்கள் வேதத்துக்கும் அடுத்த தர்க்கமானபடியினாலே, இப்படிப்பட்ட வைகளைக் குறித்து விசாரணைசெய்ய எனக்கு மனதில்லை. நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் (ஆப்சிஸ்த்தீ - opsesthe ) என்ற சொல்லி....."


*மத் 27:24 - " கலகம் அதிகமாகிறதேயல்லாமல் தன் பிரயத்தினத்தினாலே பிரயோஜனமில்லையென்று பிலாத்து கண்டு, தண்ணீரை அள்ளி, ஜனங்களுக்கு முன்பாகக் கைகளைக் கழுவி - இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் (ஆப்சிஸ்த்தீ - opsesthe) என்றான்."

சகல தலைப்புகளையும் வேதாகமம் ஆராய்வதினால், "பார்த்தல்" அல்லது "நோக்குதல்" என்ற வார்த்தைகள் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு வேத பகுதிகளும், வசனங்கள் சொல்லப்பட்ட சூழ்நிலைகளுக்கு மட்டும் அல்ல, தேவனுடைய தூண்டுதலினால் எழுதப்பட்ட மற்ற வசனங்களுக்கு இசைவான அர்த்தங்களை கொடுக்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

வெளி 1:1 ம் வசனம் நம்முடைய இயற்கையான கண்ணுக்கு தெரிகின்ற விதமாய் அவர் மாம்சீக சரீரத்தில் தென்படுவார் என்பது போல் கூறப்பட்டாலும் ஓர் சாதாரண மனுஷருடைய சரீர அளவைக் கொண்டுள்ள சரீரத்தை, பில்லியன் கணக்கான ஜனங்கள் அவ்வளவு உயரத்தில் ஒரே சமயத்தில் பார்ப்பது சாத்தியமில்லாத காரியம்.

# பாரம்பரியமாக நாம் பெற்றுள்ள அறிவு

*"ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள்" - நீதிமொழிகள் 3: 13*



W.J. Siekman

"இக்காலத்து சத்தியம் என்ன ?" எந்த மனிதனும் ஆவிக்குரிய சத்தியத்தின் எல்லைகளை தெளிவாக நிர்ணயிப்பது கூடாத காரியம். இந்த தெய்வீக சத்தியத்தின் ஊற்றை மனித சிந்தையானது தொகுத்து கூற இயலாது. பட்டைத்தீட்டப்பட்ட விலையுயர்ந்தக் கல், ஒளியாக இருப்பவரின் வெளிச்சத்தை பிரதிபலிக்கும் விலைமதிப்பற்ற பொக்கிஷமாகிய சத்தியத்திற்கு ஒப்பிடப்படுகிறது. கூடுமானவரைக்கும் இந்த கல்லின் சில முகங்களைப் பற்றிய காரியங்களை வசனங்களில் காணலாம். சத்தியத்தின் சீரான அமைப்பும் இசைவான காரியங்களையும் நாம் அறிந்துக் கொள்ளும்போது நிரம்பிவழியக்கூடிய ஆவிக்குரிய அறிவினால் நம்மை தேவன் உண்மையில் ஆசீர்வதித்திருக்கிறார் என்பதை நன்கு உணர்ந்துக்கொள்ளலாம். இப்படிப்பட்ட அருமையான சத்தியங்களை ஆழமாகப் புரிந்துக் கொண்டு அவைகளைப் பாராட்டுவதே - நம்முடைய ஆவி தேவனுடைய ஆவிக்கேற்ற சாட்சிபகர்ந்து நாம் தேவனுடைய புத்திரர்களாயிருக்கின்றோம் என்பதை நிரூபிக்கிறது.

**மூன்று உலகங்கள் - மூன்று வானங்கள்**

11பேதுரு 3: 5- 15வசனங்களிலுள்ள பேதுருவின் வார்த்தைகளை தெளிவாகப் புரிந்துக் கொள்வதே ஆசீர்வாதமாகும். சொல்லர்த்தமான காரியங்களைப் பற்றி அல்ல, மூன்று மிகப் பெரிய யுகங்களைப் பற்றியும், அதில் ஆட்சிக்குரிய வல்லமையை வானங்கள் என்றும் உலகத்தில் காணக்கூடிய அமைப்பை பூமி என்றும், குறிப்பிட்டிருக்கிறார் என்பதை கையில் வேதாகமத்தை வைத்திருக்கும் எத்தனைபேர் அறிந்திருக்கிறார்கள்? முதலாம் காலம், ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டது முதல் ஜலப்பிரளயம் வரையிலும். இரண்டாவது காலம், ஜலப்பிரளயம் துவங்கி உலக அளவில் இக்காலத்து சமுதாய ஒழுங்குகள் அனைத்தும் அழிந்து கிறிஸ்துவின் ஆயிர வருட ஆட்சி துவங்கும் வரைக்கும் நீடிக்கும். இதைத் தொடர்ந்து வரும், மூன்றாவது காலம் நித்தியகாலம் நீடித்திருக்கும். இந்த வார்த்தைகளின் கடினமான உட்பொருளை தெளிவாகப் புரிந்துக் கொண்டதற்கு தேவனுக்கு நாம் நன்றிகளை ஏறெடுப்போம். சொல்லர்த்தமான வானமும் பூமியும் அழிந்து விடுமென்று மற்றவர்கள் பயப்படுவதைபோல நாம் பயப்படுவதில்லை. (பிரசங்கி 1: 4, எசாயா 45:18)

**மூன்று வழிகள்**

மத் 7: 13, 14 வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு வழிகளைப் பற்றி அநேகர் அறிந்திருக்கிறார்கள். "நெருக்கமான வழி" பொதுவாக பரலோகத்திற்கு செல்லக்கூடிய வழியென்றும் "விசாலமான பாதை" நரகத்திற்கும் நித்திய ஆக்கினைக்கும் செல்வதாக விளக்கம் அளிக்கப்படுகிறது. பெயர் கிறிஸ்தவர்களில் இதைமட்டும் காணமுடிகிறது. ஆனால், நம்முடைய கண்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதினால் இந்த வழிகளைப்பற்றிய தெளிவான அறிவு மட்டும் இல்லாமல் (ஜீவபலியைச் செலுத்தும் பரிசுத்தவான்கள் மகிமையும், கனத்தையும், அழியாமையும், பெறுவதற்க செல்லக்கூடிய பாதை இடுக்கமான வழி என்றும் இவர்களைத் தவிர மற்ற அனைவரும் ஆதாமின் மரணத்துக்குள் செல்லக்கூடிய விசாலமான பாதை என்றும் அறிந்திருக்கிறோம்) ஆயிர வருட அரசாட்சியில் முழு மனுக்குலத்தையும் ஆசீர்வாதத்துக்குள் வழி நடத்தும் பெரும்பாதையான வழியைக் குறித்தும் நாம் புரிந்துக் கொண்டிருக்கிறோம். (எசாயா 35: 8- 10) இது எவ்வளவு அற்புதமான பாதையாய் இருக்கும். துக்கமும், துயரமும் கடந்து செல்லும் அந்த காலம் எவ்வளவு மகிமையாக இருக்கும். இப்படிப்பட்ட "பரிசுத்தமுள்ள" பெரும்பாதைக்காக கர்த்தரை ஸ்தோத்திரிப்போம்.

**தீமையின் அனுமதித்தல்**

எல்லாக் காலங்களிலும் கேட்கப்படும் பொதுவான கேள்வியாகும். அநேக தத்துவஞானிகளும் பதிலளிக்க முடியாத ஒரு கேள்வியாக இருக்கிறது. பூமியின் மேல் இவ்வளவுக் கொடூரமான பாடுகள் எதற்கு? சர்வ வல்லமையுள்ள சிருஷ்டிகர் தன்னுடைய சிருஷ்டிகளின் வாழ்நாட்களை தவிர்க்க முடியாத உபத்திரவங்களுக்குள்ளும், இறுதியில் மரணத்திற்கும் கையளிப்பதன் காரணமென்ன? நியாயங்கள் குறைந்து பாவங்கள் வளர்ச்சியடைவதின் காரணமென்ன? கொடூரமான வாதைகளாலும் வியாதிகளினாலும் பூமி சபிக்கப்பட்டதின் காரணமென்ன? இவ்வளவு பிரச்சனைகளின் மத்தியிலும் தேவன் அன்பாகவே இருக்கிறார் என்ற உண்மையை நாம் புரிந்துக் கொள்வதற்கு எவ்வளவு பாக்கியச் சாலிகளாக இருக்கிறோம்.

**ஈடுபலியின் தத்துவம்**

இந்த முக்கியமான பாடத்தின் அடிப்படையில், எவ்வளவு விசித்திரமான நோக்கங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (ரோமர் 5:12 - 21) வசனங்களில் விவரமாக குறிப்பிட்டபடி பரிபூரண மனுஷனாகிய ஆதாம் மனிதனாக வாழக்கூடிய உரிமையை இழந்துவிட்டாரென்றும், அந்த நிலையைத் திரும்பக் கொடுப்பதற்கு இயேசு தம்முடைய ஆவிக்குரிய மகிமையை விட்டுக்கொடுத்து, மனிதனாக வந்தாரென்பதையும் நாம் புரிந்துக் கொள்கிறோம். தெய்வீக அனுமதி பெற்று அவருடைய ஜீவனை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தார். (யோவான் 10:17,18) அவருடைய உடன்படிக்கையின் போது அவர் தெய்வீக நிலையில் ஜெனிப்பிக்கப்பட்டதால் அவருடைய கீழ்ப்

படிதலுக்கு பரிசாக உயிர்த்தெழுதலின் போது அழியா நிலைக்குரிய ஜீவனைப் பெற்றார். சட்டப்பூர்வமாய் கிறிஸ்து தான் வாழக் கூடிய மனித உரிமையை இழந்து, ஈடுபலியின் கிரயத்தை கொடுத்தார். அந்த கிரயம் ஆதாம் தொலைத்த ஜீவனுக்கு சரிநிகர் சமமான விலையை தந்தது. ஒரு மனிதனுக்குள் இருக்கும் முழு மனுக்குலத்தையும் நியாயம் தீர்த்து, ஒருவராலே, மற்றவர் மீட்புபெறக்கூடிய, இந்த தெய்வீக திட்டத்தில் இவ்வளவு அற்புதமான ஞானம் காணப்படுகிறது எவ்வளவு ஆச்சரியமாக இருக்கிறது ! "கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார்" (ரோம 3-26)

### சீர்பொருந்துதலின் காலம்

இது மகிமையான சத்தியம். ஒரு கிறிஸ்துவனின் இருதயத்தில், இந்த வார்த்தைகளை மகிழ்ச்சியின் மெல்லிசையை மீட்டக்கூடியதாக இருக்கிறது. அப்போஸ்தலர் 3-19-21 வசனங்களை மனப்பாடமாக சொல்லமுடியாத சில தேவ ஜனங்கள் உண்டு. ஆனால் தேவனுடைய திட்டங்கள் மிக எளிமையாக புரிந்துகொள்ளப்பட்டு, கட்டி தழுவப்படுகிறது. வேதத்தில் உள்ள மிக கடினமான பகுதிகளுக்கு எளிமையாக விளக்கம் அளிக்கப்படுகிறது. ஆனாலும் வெகு சில வேத வல்லுனர்களே முழுமையான பொருளை புரிந்து கொள்கிறார்கள். "யாருக்கும் அறிந்துகொள்ளும்படி கொடுக்கப்பட்டுள்ளதோ" அவர்களை தவிர யாரும் இதை உணர்ந்துகொள்ளமுடியாது. ஆகவே கேட்கக்கூடிய நம்முடைய காதுகளும், காணக்கூடிய நம்முடைய கண்களும் பாக்கியமுள்ளது !

### இராஜ்யத்தின் இரண்டு பகுதிகள்

ஆவிக்குரிய மற்றும் பூமிக்குரிய பகுதியாகிய இரண்டு பகுதிகளை, தேவனுடைய இராஜ்யம் கொண்டிருக்கிறது என்ற உண்மை எவ்வளவு தெளிவாக காணப்படுகிறது ! ஆனால் துவக்கத்தில் சீஷர்களும் இதை புரிந்துகொள்ளமுடியவில்லை. இந்த பூமியை தேர்வு செய்யப்பட்ட யூத ஜாதி ஆட்சிச் செய்யும் என்று அவர்கள் நம்பியிருந்ததுபோல, கிறிஸ்தவர்கள் அநேகர் அழைக்கப்பட்ட பரலோக வாய்ப்பில் மகிழ்ச்சியை பெற இடமில்லை என்று நம்பினார்கள். ஆனால், ஆவிக்குரிய ராஜ்யத்தைக் குறித்து இஸ்ரயேலர்கள் ஒன்றும் அறியார்கள். பொதுவாக கிறிஸ்தவர்கள் பூமிக்குரிய ஆசீர்வாதத்தை விலக்கி விடுகிறார்கள். மொத்தத்தில் இந்த இரண்டு பகுதிகளை குறித்து தெளிவான விளக்கத்தை வசனங்கள் எடுத்துக் காட்டுகிறது. இவைகள் அடையாளபாஷையில் விவரிக்கப்பட்டுள்ளது. (சகரியா 14:4) மேலும் "..ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், (காணக்கூடாத ஆவிக்குரிய பகுதி) எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் (காணக்கூடிய பூமிக்குரிய பகுதி) வெளிப்படும்"(எசாயா 2: 2,3) என்று எசாயா கூறுகிறார்.

### ஆதாமின் வழிவந்த மரணம்

புரிந்துக் கொள்வதற்கு இது கடினமான பாடம் அல்ல. மத வல்லுநர்கள் தெளிவற்ற பல வழிகளில் இந்த மரணத்திற்கு விளக்கம் அளிக்கின்றனர். ஆதாம் ஆவிக்குரிய நிலையில் மரிக்கவில்லையென்றும் அவர் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறவில்லை என்றும் அல்லது நித்தியமான ஆக்கினைக்கு ஒப்புவிக்கப்படவில்லையென்றும் தாம் தெளிவாக அறிந்திருக்கிறோம். கர்த்தரின் ஆயிர வருடத்திற்குள் அவர் மரித்துக் கொண்டே மரித்தார் என்று வசனங்கள் கூறுகிறது. (ஆதி 2:17) இப்படியாக, எடுக்கப்பட்ட மண்ணுக்கு ஆதாம் திரும்பினார். அவருடைய மரித்த நிலை அவருடைய சந்ததியின் வழியாக ஒவ்வொருவரும் பெற்று, உயிர்த்தெழுதலை எதிர்பார்த்தவர்களாக அனைவரும் அதே மண்ணில் நித்திரைச் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

### இரண்டாம் மரணம்

முதலாம் மரணம் ஒரு இரகசியமாய் இருப்பது போல இதுவும் இருக்கிறது. எவ்வளவு எதிர்மறையான விளக்கங்கள் இருந்தபோதிலும், அந்த வார்த்தையின் பொருள் நமக்கு எளிதாய் விளங்குகிறது. ஒரு முறை இயேசுவின் ஈடுபலியினால் உயிர்ப்பிக்கப்பட ஜீவனுக்குரிய நிலை, மீண்டும் இழக்கப்பட்டால், அந்நிலைக்கு வருவது கூடாத காரியம் "துன்மார்க்கரும், தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும், நரகத்திலே தள்ளப்படுவார்கள்" (சங்9:17) ஆயிரவருட ஆட்சியில் "அந்தத் தீர்க்கதரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத் திலிராதபடிக்கு நிர்முலமாக்கப்படுவான் என்றான்."(அப் 3:23) சீர்த்திருந்தாத துன்மார்க்கன் கடவுளின் சமூகத்திலிருந்து முற்றிலுமாய் அழிக்கப்படுவதே அவனுக்கு விதித்தத் தீர்ப்பாகும். இரண்டாம் மரணம் - அக்கினி கடலென்றும், கந்தக கடலென்றும் அடையாளப்படுத்துகிறது. (எசாயா 26: 9-11) ல் உள்ள போதனைகளை நாமனைவரும் கவனமாய் படிக்க வேண்டும். எழுதியிருப்பவைகளுக்கு மிஞ்சி நாம் எண்ணாதிருக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். ஆகவே, தேவனுடைய வார்த்தைகளில் சொல்லப்பட்ட அநேக எச்சரிப்புகளை கவனியாதே விட்டு விடுவோமேயானால், நாம் இக்கட்டான நிலைக்கு ஆளாகி விடுவோம். தேவனுடைய பிள்ளைகளாக அவருடைய இரக்கத்தின் ஆவியை பெற்று அவருடைய பாதப்படியில் கற்றுக் கொண்டவர்கள் சுவிசேஷயுகமானாலும் சரி, ஆயிரவருட ஆட்சியானாலும் சரி, அவருடைய தீர்ப்பை பயத்தோடும் நடுக்கத்தோடும் எதிர்பார்க்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

### நீதிமானின் நிலை

நம்முடைய தேவனோடு இசைந்து நடப்பதற்கு நம்முடைய அடிகள் தெளிவாக உள்ளது. தேவனுடைய கிருபையினாலும், கிறிஸ்துவின் இரத்தத்தினாலும், அவைகளின் மேல் நாம் பெற்ற ஏற்ற விசுவாசத்தினாலும், அபூரணமாயிருந்தபோதிலும் நமக்குள் வெளிப்படும்

கிரியைகளினாலேயும் இந்த வாய்ப்பு நமக்களிக்கப் பட்டுள்ளது. தேவனை நெருங்க கூடிய நம்முடைய அடிகள் தற்காலிகமான நீதிமானாக்கப்பட்ட நிலையைக் கொடுத்தாலும் அதில் மேலும் வளர்ச்சியடைந்து தேவனிடம் சென்று முழு ஆசீர்வாதத்தைப் பெறலாம். இதற்கான நிழலான காரியத்தைக் குறிப்பாக இஸ்ரயேலர்களுக்கு கொடுக்கப்பட்ட ஆசரிப்பு கூடாரத்திலுள்ள நிலைகள் நமக்கு எடுத்துக் காட்டுகிறது. கூடுதலாக, ஆயிர வருட அரசாட்சியில் முழுமனுக்குலமும் விசுவாசத்தினால் தங்களுடைய கிரியைகளினால் நீதிமானாக்கப் படுவார்கள் என்பது தெளிவாகிறது. இதற்கான தெளிவான விளக்கத்தை சரியான எடுத்துக்காட்டுகளோடு அப்போஸ்தலராகிய பவுல் ரோமர்களுக்கு எழுதிய நிருபத்தில் முதல் 11 அதிகாரங்களில் மிக அற்புதமாக எடுத்துரைக்கிறார்.

**சுத்திகரித்தல்**

இதை குறித்த சுருக்கமான விளக்கத்தை நம்மால் கொடுப்பது இயலாத காரியம். இதில் இரண்டு பகுதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. நம்மை நாம் சுத்திகரித்துக் கொள்வதே முதல் கடமை. அடுத்து தேவன் நம்மை சுத்திகரிக்க வேண்டும். ஏனெனில், "உங்களை சுத்திகரிப்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது." இருதயத்தில் முழுமையாக மறுரூபமாக்கப்படுதல் வேண்டும். அதாவது தேவனுடைய சித்தத்திற்கு முழுமையாக ஒப்புக்கொடுத்து நாம் அந்த சுத்திகரிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில், "பரிசுத்த மில்லாமல் தேவனை தரிசிப்பது கூடாதக்காரியம்" தேவன் நமக்குள் இப்படிப்பட்ட மேன்மையான கிரியைகளையே நடத்தி வருகிறார். வரக்கூடிய யுகங்களில் நம்மைக் கொண்டு இந்த மேன்மையான கிரியைகளை நம்மூலமாக செயல்படுத்துவார். "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" (யோவான் 17:17) என்ற நம்முடைய ஆண்டவரின் விண்ணப்பத்திற்கேற்ப இவைகள் நடைபெற்று வருகிறது.

**கிறிஸ்துவுடைய பங்காளிகள்**

பரலோக சேனைகளோடு இணைந்து - அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தையும், மகிமையையும், ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார் என்று .." நாம் கூறலாம். ஆனால் நடக்க முடியாததும், எண்ணமுடியாததுமான காரியங்களாகிய - "கிறிஸ்துவின் பங்காளிகளாக" இருப்பதற்கும், அவரோடுக்கூடிய சிங்காசனத்தில் அமருவதற்கும் ஒப்பற்ற கிருபை நாம் பெற்றிருக்கிறோம். இவைகள் எவ்வாறு சாத்தியமாகும் என்று நாம் எண்ணினாலும், விலையேறப்பெற்ற வாக்குறுதிகள் நமக்கு கொடுக்கப்பட்டதினால், "கிறிஸ்துவின் பங்காளிகளானதினாலும்", "வாக்குத்தத் தங்களுக்கு சுதந்தரருமாய் இருப்பதினாலும், நாம் மகிழ்ந்து களிக்கூறலாம் - (ரோம 8-17, கலா 3-29, தீத்து 3-7, எபி 1-14, 6-17)

**ஞானஸ்நானம்**

இந்த தலைப்பின் கீழ் நீண்டகாலமாய் அநேக தொகுப்புகள் எழுதப்பட்டுள்ளன. மேலும் எதிர்மாறான அநேக சம்பாஷனைகளும் நடந்து வருகிறது. நாம் எவ்வளவு தெளிவான மற்றும் எளிமையான விளக்கத்தை பெற்றுள்ளோம். பாவத்துக்குள் மரித்து கிறிஸ்துவுக்குள் புதிதான ஜீவனைப் பெற்று தேவனுடைய உண்மையான ஜனங்கள் என்ற அனுபவத்தைப் பெற்றுள்ளோம். "மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவன் உள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப் பட்டவர்களானால், அவர் உயிர்த் தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்" (ரோமர் 6: 4,5)

**தெரிந்தெடுத்தலும் இலவசமான கிருபையும்**

மற்றப் பெயர் கிறிஸ்தவர்கள் தொடர்ந்து முரண்பாடான காரியங்களை நீண்ட காலமாக சம்பாஷித்து கொண்டிருந்தாலும், இன்று நமக்கு சத்தியங்கள் தெளிவாகக் காணப்படுகிறது. அனைவரும் மெய்யான காரியத்தை பேசினாலும் அவைகள் வெவ்வேறு காலங்களுக்கு பொருந்தக் கூடியதாயிருக்கிறது. சுவிசேஷ யுகத்தில் எத்தனைபேர் அழைக்கப்பட்டாலும் ஒரு சிறிய வகுப்பார் மட்டுமே தேவனுடைய இரக்கத்தை பெறுகிறார்கள். ஆனால், ஆயிரவருட ஆட்சியின் போது பூமியிலுள்ள முழுமனுக்குலமும் ஆசீர்வதிக்கப்படும் - (மாற்கு 4:11 -12 ,வெளி 22: 17)

**ஆபிரகாமின் சந்ததி**

"உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார். நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்" (ஆதி 12: 3 , 22: 18) என்று தேவன் ஆபிரகாமுக்கு மிகப் பெரிய வாக்குறுதியை அளித்தார். மாம்ச சந்ததியாகிய யூத ஜாதிக்கு இதுவே நம்பிக்கையாக இருந்தது. " ஆபிரகாமே எங்கள் பிதா" (யோவான் 8: 39) என்று பெருமையாக சொல்லிக் கொண்டார்கள். ஆனால், துரதிஷ்டவசமாக அவர்கள் அவிசுவாசத்தினால் அவர்கள் வெட்டுண்டுபோனார்கள். (ரோமர் 11: 7,20) ஏனெனில் "ஆதலால், சுதந்தரமானது கிருபையினால் உண்டாகிறதாயிருக்கும்படிக்குஅது விசுவாசத்தினாலே வருகிறது; நியாயப்பிரமாணத்தைச் சார்ந்தவர்களாகிய சந்ததியாருக்குமாத்திரமல்ல, நம்மெல்லாருக்கும் தகப்பனாகிய ஆபிரகாமுடைய விசுவாசத்தைச் சார்ந்தவர்களான எல்லாச் சந்ததியாருக்கும் அந்த வாக்குத்தத்தம் நிச்சயமாயிருக்கும்படிக்கு அப்படிவருகிறது." (ரோமர் 4: 16) ஆபிரகாமின் சந்ததி இருபிரிவினர்களாக ஆசீர்வதிக்கப்பட்டார்கள். ஒன்று

கடற்கரை மணலைப் போல இருக்கும் பூமிக்குரிய சந்ததி மற்றும் வானத்தின் நட்சத்திரங்கள் என்றழைக்கப்படும் ஆவிக்குரிய சந்ததி. இந்த சுவிசேஷ யுகத்தில் ஆவிக்குரிய சந்ததிக்கான அழைப்பு கொடுக்கப் படுகிறது. "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" (கலா 3: 29) மிக மகிமையான சத்தியங்களில் இதுவும் ஒன்று. சத்தியத்தின் ஊற்றிலிருந்து மட்டுமே இந்த உண்மையான புரிந்து கொள்ளுதலைப் பெற்றுக்கொள்ளலாம்.

**நியாயத்தீர்ப்பின் நாள்**

வசனங்களில் சொல்லப்படும் இந்த சத்தியத்தின் முக்கியமான பகுதிகளைப் பற்றி பொதுவாக அநேக கண்ணோட்டங்கள் காணப்படுகிறது. முதலில் பில்லியன் கணக்கான மனுக்குலம் 24 மணிநேரம் கொண்ட ஒரேநாளில் நியாயத்தீர்ப்பைக் கடக்க வேண்டும். அடுத்து அது பயமும், திகிலும் கொண்ட நாள் வானத்திலும், பூமியிலும் உள்ள சகல பூதங்களும் வெந்து உருகிப்போகும் நாள். இவைகளுக்கு மத்தியில் காபிரியேல் தூதனின் மிகப் பயங்கரமான எக்காள சத்தம், அநேகரின் காதுகளில் ஊடுருவி செல்லும் நாள் முன்னதாகவே மரணத்திற்கு நியாயந்தீர்க்கப்பட்டவர்கள் எழுந்து, அவர்களின் பாவத்திற்குண்டான தண்டனையை (அவமானம்) அனைவருக்கு முன்பாகவும் பெற வேண்டும். உலகத்தின் மிகப்பெரிய நியாயத்தீர்ப்பின் நாள் எவ்வளவு கொடுமையாகவும், வேதனையாகவும் இருக்கிறது. இவ்வாறாக அநேக காரியங்கள் தவறாக புரிந்து கொள்ளப்பட்டிருந்தாலும் வேதாகமத்தில் சொல்லப் பட்டிருக்கும் அந்த ஆயிர வருடத்தில் முழு மனுக்குலமும் மனரீதியாகவும், உடல்ரீதியாகவும் பூரண நிலையைப் பெறுவதற்கு வாய்ப்பளிக்கப்படுவார்கள் என்ற உண்மையான கருத்துக்களை நாமறிந்திருப்பதற்கு பிதாவாகிய தேவனுக்கு நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். முழு மனுக்குலத்திற்காகவும் ஈடுபலிக் கொடுக்கப்பட்டது, அதனால் மீட்கப்பட்டவர்கள் கல்லறையிலிருந்து தேவன் குறித்த நாளில் நீதியை கற்றுக் கொள்வார்கள். அப்போது அழுகையும், துக்கமும் கடந்து செல்லும். நித்தியமான மகிழ்ச்சி மனுக்குலத்தில் தங்கும். (சங் 67, 96 , 98 அதிகாரங்கள்)

**உயிர்த்தெழுதல்**

"மரித்தோரின் உயிர்தெழுதலைக்குறித்து அவர்கள் கேட்டபொழுது, சிலர் இகழ்ந்தார்கள்...." (அப் 17: 32) என்று பவுல் அத்தேனே பட்டனத்தில் போதித்தார். பெயர் கிறிஸ்தவர்கள் மத்தியில் வேதாகமத்தில் சொல்லப்பட்ட உண்மைகளை முன்வைக்கும் போது, இதே சூழ்நிலைகள் ஏற்படுகிறது. ஆனால் இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை, ஏனெனில் மரித்தவுடன் பரலோகத்திற்கோ, நரகத்திற்கோ செல்வார்கள் என்று நம்புவோருக்கும் மனுஷன் மரிப்பதில்லை என்ற விசுவாசம் உண்டு. இப்படியிருக்க, இவர்கள் உயிர்த்தெழுதலை நம்பவேண்டிய அவசியம் இல்லையே. ஆனால் அனைவரும் "பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறார்கள்..... " (தானி 12 : 2) என்று நாம் அறிந்திருக்கிறோம். உயிர்த்தெழுதல் ஒரு முக்கியமான போதனையாகும். ஏனெனில் மரித்தோர் உயிர்தெழாவிட்டால் மரித்தோர் அழிந்து விடுவாரே. (1கொரி 15: 13-19) ஆனால், நீதியுள்ளோரும் அநீதியுள்ளோரும் அவனவன் தன் தன் வரிசையில் எழுந்திருப்பார்கள் என்று நாம் வாசிக்கிறோம். (அப்போ 24: 15 , 1கொரி 15:23) வேதாகமம் மூன்று விதமான உயிர்த்தெழுதலைப் பற்றி பேசுகிறது. சுவிசேஷ யுகத்தின் விசுவாசிகளுக்கு முதலாம் உயிர்த்தெழுதல் மற்றும் பழைய ஏற்பாட்டு நீதிமான்களுக்கு மேன்மையான உயிர்த்தெழுதலும் நடைபெறும் என்று வாசிக்கிறோம். (1தெச 4:16, வெளி 20: 6, 1கொரி 15: 23, எபி 15: 35 - 40) மேலும் உயிர்த்தெழுதல் என்ற வார்த்தை "அனஸ்டாசிஸ்" என்ற எபிரேய வார்த்தையின் மொழிபெயர்ப்பென்று நாம் அறிந்திருக்கிறோம். இதற்கு "உயிர்த்தெழுதல்" மற்றும் "பூரண நிலைக்கு் வளர்ச்சியடைதல்" என்று பொருள்படும். (யோவான் 5: 28 - 29) வசனங்களை கவனமாக வாசித்து புரிந்து கொள்ளலாம். கிறிஸ்துவின் சத்தத்தை கேட்கும் அனைவரும் உயிர்த்தெழுப்பப்பட்டு பூரண நிலைக்கு வழி நடத்தப்படுவார்கள்.

**ஆத்துமா**

மனிதனே ஆத்துமா, மனிதன் ஆத்துமாவைக் கொண்டிருப்பவனல்ல என்பதை வேதாகமம் எவ்வளவு தெளிவாக நமக்கு போதிக்கிறது. "இதோ, பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்" (எசே 18: 4 , 20) மண்ணில் துகள்ளோடு ஜீவ சுவாசம் ஐக்கியப்பட்டப்பின் அவன் ஜீவாத்துமாவானான் என்று வாசிக்கிறோம். (ஆதி 2: 7) ஆத்துமா என்ற வார்த்தை உயிருள்ள சகல ஜீவராசிகளுக்கும் பொருந்துகிறது. (ஆதி 1: 21) ("ஜீவராசிகள்" - நெப்பேஷ்) என்ற எபிரேய வார்த்தையாகும். அவைகள் ஜீவராசிகள் என்று மொழிபெயர்க்கப்படாமல் ஆத்துமா என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அழியக் கூடிய மனிதன் ஆழியா ஆத்துமாவைக் கொண்டிருக் கிறான் என்ற காரியம் சாத்தானால் ஏதேனில் விதைக்கபட்ட முதல் பொய்யாகும். இது காலங்காலமாக மனித தத்துவங்களாய் மாறி குருடாக்கப்பட்ட மனுக்குலத்தின் மனக்கண்களுக்கும் இந்த எளிய உண்மை மறைக்கப்பட்டது. ஆத்துமா என்பதன் உண்மையான பொருளை நாம் அறிந்துகொள்ளுவதற்கு நாம் பாக்கியம் பெற்றுள்ளோம்.

**பரிசுத்த ஆவி**

வேதாகம போதனையின் அடிப்படையில் பரிசுத்த ஆவியை ஒரு நபராக கருதுவதை நாம் மறுக்கிறோம். இது கண்ணுக்கு தெரியாத தேவனுடைய வல்லமையென்றும் தேவனிடத்திலிருந்து புறப்படுவதினால் அது பரிசுத்தமானது என்று அழைக்கிறோம். அந்த வல்லலையானது அவருடைய சிருஷ்டிப்பின் கிரியைகளிலும், மனிதனின் சிந்தைகளிலும் வெளிப்படுத்தப்படுகிறது. அநேக கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியை திரித்துவமான கடவுளுக்குள் இருக்கும் மூன்றாவது நபரென்று போதிக்கின்றனர். இப்படிப்பட்ட போதனைகளுக்கு வேதாகமத்தில் ஆதாரங்களில் லாததினால் நாம் அதை பற்றிக் கொள்வதில்லை.

கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர் மேல் ஊற்றப்படும் பரிசுத்த ஆவி திரும்பக் கொடுத்தலின் காலத்தில் மாம்சமான யாவர் மேலும் ஊற்றப்படுவதற்கு வாஞ்சையோடுக் காத்திருக்கிறோம்.

### திரித்துவம்

பெயர் கிறிஸ்தவர்களின் மத்தியிலும், பாடல் புத்தகத்திலும் மத சாஸ்திர நூல்களிலும் திரித்துவம் என்ற வார்த்தை அதிகமாக காணப்பட்டாலும், இந்த வார்த்தை வேதாகமத்தில் எங்கும் காணப்படுவதில்லை. உண்மையில் இது ஒரு இரகசியம் என்று தங்களுக்குள்ளே ஒப்புக் கொள்கிறார்கள். இந்த போதனை முற்றிலுமாக கற்பனையின் அடிப்படையில் போதிக்கப்பட்டாலும் இவர் ஒரே கடவுளாய் இருக்கும் மூன்று கடவுள்கள் என்று போதிக்கின்றனர். "மறைந்திருக்கும் மறைபொருள்" என்று பவுல் குறிப்பிடும் காரியம் திரித்துவத்தை பற்றியே என சிலர் எண்ணுகிறார்கள். இந்த போதனையின் தெளிவான சாட்சியை காண்பதற்கு நாம் விசேஷித்த விதமாய் தேவனுக்கு நன்றிகளை ஏறெடுக்கவேண்டும். "இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்" (உபா 6:4) "பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசுகிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர்மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்" (1கொரி 8:6)

### அழியாமையும், நித்திய ஜீவனும்

இந்த இரண்டு சொற்களும் ஒரே அர்த்தத்தைக் கொண்டுள்ளது என்று அநேகர் எண்ணுகிறார்கள். இவை இரண்டிற்கு உள்ள சரியான விளக்கத்தை நாம் கற்றறிந்திருக்கிறோம். அழியாமை என்ற நிலை - நாம் இனி பெறக் கூடிய நிலையாயிருக்கிறது. "ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவரா யிருக்கிறது போல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள்செய்திருக்கிறார்" (யோவான் 5:26) இந்நிலையில் இருப்போர் மரிக்க இயலாது. பிதாவாகிய "யாவே" தேவன் மட்டுமே இந்நிலையைக் கொண்டிருந்தார். அதற்குபின் அவருடைய ஒரே பேறான குமாரனான இயேசுகிறிஸ்துவுக்கு இந்நிலையைக் கொடுத்தார். காலப்போக்கில் சபைக்கு பரிசாக இந்நிலையை வழங்குவார். தெய்வீக சுபாவத்தை பெற்றவர்கள் மட்டுமே இந்நிலையை அடையமுடியும். (1தீமோ 6:16, 1கொரி 15:53, 11பேது 1:4)

நித்திய ஜீவனென்ற நிலைமையில் ஒருவர் தானாக உயிர் வாழ முடியாது. இந்நிலையிலிருப்போர் மரிக்கவும் வாய்ப்புண்டு. தேவன் சிருஷ்டித்த மனிதர்கள் அனைவரும் மற்றும் தெய்வீக சுபாவத்திற்கு குறைவாயுள்ள ஆவிக்குரிய நிலையில் இருப்போரும், இப்படிப்பட்ட நிலையில் சிருஷ்டிக்கப்பட்டார்கள். இவர்கள் அழியக்கூடிய நிலையில் இருந்தாலும் தெய்வீக சித்தத்துக்கு கீழ்படியும்வரை இவர்களுக்கு நிச்சயமாக இந்த ஜீவன் தங்கும். இவைகளை குறித்த வித்தியாசத்தை பவுலின் வார்த்தைகளில் காணலாம். (11தீமோ 1:10)

### புது சிருஷ்டி

"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின"( 11கொரி 5:17)" கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; புது சிருஷ்டியே காரியம்" (கலா 6:15) ஆவிக்குரிய நிலையில் புதுப்பித்தல் என்பதே அந்த வார்த்தையின் பொருளாய் இருப்பினும் தேவனுடைய மிக அற்புதமான கிரியையை இது வெளிப்படுத்துகிறது. பாவ மனிதன் நிலையிலிருந்து எல்லா நிலைகளுக்கும் மேலான நிலையான தெய்வீக நிலைக்கு தேர்வு செய்யப்பட்ட வகுப்பார் மறுரூபமாக்கப்படுகிறார்கள். "சீயோனைக்குறித்து, இன்னான் இன்னான் அதிலே பிறந்தானென்றும் சொல்லப்படும்; உன்னதமானவர் தாமே அதை ஸ்திரப்படுத்துவார். கர்த்தர் ஜனங்களைப் பேரெழுதும்போது, இன்னான் அதிலே பிறந்தான் என்று அவர்களைத் தொகையிடுவார்."(1தெச 2:12, சங்கீ 87:5,6)

### கிறிஸ்துவின் மணவாட்டி

இவர்கள் யாரைக் குறிப்பிடுகிறார்கள் என்று பல கருத்துகள் உள்ளது. சுவிசேஷயுகத்தில் மகிமைக்கும் அழியாமைக்கும் அழைக்கப்படுபவர்களே இந்த வகுப்பாரென்று நாம் நன்கு அறிந்திருக்கிறோம். இது பரிசுத்தவான்களின் வகுப்பை அடையாளப்படுத்தக் கூடிய ஒரு அடையாளமாயிருக்கிறது. இந்த அடையாளம் மிக நேர்த்தியாகவும், அழகாகவும் இவ்வகுப்பாருக்கு மட்டுமே பொருந்துகிறது. இவைகளின் ஆழமான அர்த்தங்களை உணர்வதற்கான வாய்ப்பை நாம் பெற்றத்தற்காக களிக்கூறுகிறோம். (அப் 15:14,17, சங் 45:10-15, 11கொரி 12:2, வெளி 19:7-9, வெளி 21:9, 22:17)

### லோகாஸின் பண்பு

நம்முடைய ஆண்டவர் மாம்சத்தில் வருவதற்கு முன் இருந்த நிலையைக் குறித்து, நமக்கு எதுவும் மறைக்கப்படவில்லை. அவர் தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியாயிருந்தார் என்பதை நாம் அறிவோம். சகலமும், அவர் வழியாய் சிருஷ்டிக்கப்பட்டது. காலம் நிறைவேறும்போது தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்து, ஆவிக்குரிய நிலையையும் மகிமையையும் அவர் விட்டு மாம்சத்தில் வெளிப்பட்டார். அவர் ஆவிக்குரிய இயல்போடு மாம்சத்தை போர்வையாக போர்த்தவில்லை. அவர் முழுமையான மனித நிலையில் உலகத்திற்கு வந்தார். "ஐசுவரியனாய் இருந்த அவர் நமது நிமித்தம் தரித்திரரானார்". (நீதி 8:22-30, கொலோ 1:16,17, கலா 4:4, யோவான் 1:14, 11கொரி 8:9)

### நரகம்

இந்த வார்த்தையின் உண்மையான பொருள் மீது வெள்ளம் போல் வெளிச்சம் வீசப்பட்டுள்ளது. இந்த சிறிய வார்த்தை பல்லாயிரக்கணக்கான ஜனங்களுக்கு பயத்தையும் திகிலையும் ஊட்டக் கூடியதாயிருக்கிறது. ஆனால், நமக்கோ, இதைக் குறித்தான சிறிதளவு பயமுமில்லை. "ஷியோல்" என்ற எபிரெய வார்த்தை "ஹாதேஸ்" என்ற

கிரேக்க வார்த்தையும் "ஹெல்" என்ற ஆங்கில வார்த்தையாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதற்கு "மறைந்திருக்கும் நிலை" என்று பொருள். மரணத்திற்கு பின் பாவியானாலும் சரி, பரிசுத்தவானாக இருந்தாலும் சரி, நல்லோராயிருந்தாலும் சரி, தீயோராயிருந்தாலும் சரி, அனைவரும் இந்நிலையை சென்றடைகிறார்கள். இந்த வார்த்தையின் பொருள் மரித்தோரின் நிலையைப் பற்றி எதுவும் சொல்லுகிறதில்லை. ஆகவே, இவர்களின் நிலையை குறித்து மற்ற வசனங்களில் வாசிக்கும்போது "செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்; நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே" (பிர 9:10) "உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்; இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை, அவர்கள் பேர்முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது" (பிர9:5) "அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான்; அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்" (சங் 146:4) மனிதரால் ஏற்படுத்தப்பட்ட விசுவாச அறிக்கைகள் சத்தியத்திற்கு எதிர்மாறான காரியங்களை கற்பிக்கிறது. "நித்திரையில்" உள்ளவர்கள் உண்மையில் மீண்டும் உயிர்த்தெழுப்பப்படுவார்கள் என்ற கண்ணோட்டத்தில் மரித்த நிலையை வேதாகமம் விவரிக்கிறது.

**கிறிஸ்துவின் திரும்புதல்**

இந்த முக்கியமான பாடத்தில் வெள்ளம் போல் வெளிச்சம் பாய்ந்து கொண்டிருக்கிறது. கிறிஸ்து வந்துவிட்டார் என்பதின் தார்ப்பரியத்தை தெளிவாக புரிந்து கொண்டதினால், நாம் மனமகிழ்ச்சியடைகிறோம். காலங்களையும், வேலைகளையும் குறித்து நாமறியாதவர்களல்ல. சில காலம் மறைக்கப்பட்டிருந்தாலும், கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களுக்காய் வருகிறார். அதே நேரத்தில் ஆயிரமாயிரமான பரிசுத்தவான்களோடுகூட வருகிறார், என்பதும் ஒரே நேரத்தில் நடைபெறுவதில்லை. இவ்விரண்டும் இரண்டு காலங்களில் நடைபெறும் என்று நாம் கற்பிக்கப்பட்டுள்ளோம். முதலாவது சொல்லப்பட்ட காரியம் கடந்த காலத்திலும், அடுத்ததாக சொல்லப்பட்ட காரியம் இனி வருகிற காலத்திலும் நடைபெறும். மேலும் இந்த பாடங்களின் மேல் வீசப்படும் வெளிச்சம் நமக்கு தெளிவாய் எடுத்துக் காட்டுகிறது. நாம் மனுஷக் குமாரனின் நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். "எஜமான் வரும்போது, விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள். அவர் அரைகட்டிக்கொண்டு, அவர்களைப் பந்தியிருக்கச் செய்து, சமீபமாய் வந்து, அவர்களுக்கு ஊழியஞ்செய்வார் என்றுமெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன்."லூக் 12:37 (here two lines) ஆகவே நாம் விழித்திருந்து, அவர் பிரசன்னமாகுதலை விரும்பி "நீதியின் கிரீடத்தை" பெற்றுகொள்வோம். (11திமோ4:8)

**தேவனுடைய வார்த்தையில் உள்ள சத்தியங்கள்**

ஆவிக்குரிய சத்தியங்களில் அநேக காரியங்களை மிக சுருக்கமாக ஒன்றுக்குப்பின் ஒன்றாக தியானித்தோம். ஆனால், அவைகளை நாம் முழுமையாக விவரிக்கவில்லை. நாம் முழுமையாக பார்த்தாலும் சரி, குறைவாக பார்த்தாலும் சரி நாம் பெற்றுள்ள அற்புதமான சத்தியத்தில் மகிழ்ச்சியடைகிறோமல்லவா ? நித்தியமாக நன்மை செய்யக் கூடியவரும், பூரணமான பரிசை அளிக்கக் கூடியவரும், இப்படிப்பட்ட தெளிவான சத்தியங்களை கொடுப்பதற்கு நன்றியறிதலான பலிகளை ஏறெடுக்கலாம் அல்லவா ? நம்முடைய உள்ளங்களில் நல்ல விதைகளாக பெற்றிருக்கும் சத்தியங்கள் எவ்வளவு நன்மைக் குரியதாயிருக்கிறது. இப்படிப்பட்ட ஆலோசனையை கொடுத்த பிதாவாகிய தேவனை நாம் ஸ்தோத்தரிப்போமாக. (சங் 16:6,7)

## பிதாவும், குமாரனும்

பிதாவைக் குறித்தக் காரியங்களை பேசப்படுகையில், பிதாவாகிய தேவன் ஒருவர் உண்டென்றும், அதை தொடர்ந்து ஆண்டவராம் இயேசு என்னும் இரட்சகர் ஒருவர் உண்டென்றும் (1கொரி 8:6) அப்போஸ்தலர் கூறுகிறார். மேலும், இயேசுவின் நாமத்தில் வானோர் புதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழுங்கால் யாவும் முடங்கும்படிக்கும், தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக இயேசுவை உயர்த்தினார் என்று (பிலி 2:9,10, யோவ 5:32 ) அப்போஸ்தலர் கூறுகிறார். ஆகவே இங்கு இரண்டு தனிநபர்களை குறித்து பேசப்பட்டதாக பொருள்படுகிறது. ஏனெனில் பிதா குமாரனை உயர்த்தினார் என்றும் விசுவாசிக்கிறோம் . மேலும், தன்னைக் கனப்படுத்துவதுப் போல குமாரனையும் கனப்படுத்த வேண்டுமென்று வசனங்கள் கூறுகிறது. எனவே, பிதாவாகிய தேவன், தான் இருக்கும் தெய்வீக நிலைக்கு அவரை உயர்த்தினார் என்பது தெளிவாகிறது. தேவனுடைய சித்தத்திற்கு தம்மை முழுவதும் கீழ்ப்படுத்தி, இந்த உலகத்திற்கு வந்து தெய்வீக நோக்கத்திற்காக, தன்னுடைய சொந்த ஜீவனையேக் கொடுத்து, மனுக்குலத்தை இரட்சித்ததினால் இந்த மகிமை, அவருக்கு பரிசாக கொடுக்கப்பட்டது. இதை நாம் முன்னதாகவே யோவான் 1:1 ல் வாசித்திருக்கிறோம். இயேசு இந்த உலகத்தில் தன்னுடைய பிதாவின் பிரதிநிதியாகிய லோகஸாய் அதாவது வார்த்தையாய் செயல்பட்டு, யேகோவா தேவனின் தூதை அறிவித்து, தூதர்களுக்கும் மற்ற அனைத்திற்கும் மேலான ஒரு தேவனாய் இருந்தார்.

Reprints, P.4165